08

புதிய வளைகுடா யுத்தமொன்றுக்கு தூபமிடுகின்றதா அமெரிக்கா?

05

இந்த கள்ள மௌனத்தின் உள்ளர்த்தம் என்ன?

முஸ்லிம்களதும் தாயகம் இலங்கை

விக்டர் ஐவன்

மீள்பார்வை

மீல்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට හඬන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 372 • 07 ஜூலை 2017 வெள்ளிக்கிழமை • ஷவ்வால் 1438 • விலை 40.00

மகாசங்கத்தினரின் கோரிக்கைக்கு பாரிய எதிர்ப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும், சர்வதேச நியமங்களுக்கு இசைவாகவும் நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற உத்தேச அரசியல் யாப்புத் திருத்த முயற்சிகள் அவசியமற்றவை என மூன்று பௌத்த பீடங்களினதும் மகாநாயக்கர்கள் தெரிவித்த கருத்துக்கு பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பியிருக்கின்றன.

புதிய அரசியலமைப்போ, அரசியலமைப்புத் திருத்தமோ நாட்டுக்குத் தேவையில்லை என மகாநாயக்க தேரர்கள் கூறினாலும், 62 இலட்சம் மக்களின் ஆணையை அரசாங்கம் ஒரு போதும் மீறிச் செயற்படாது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜேவிபி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது பிமல் ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், அரசியலமைப்பில் மாற்றம் வேண்டும் என்பது மக்கள் அரசுக்கு வழங்கிய ஆணை. அதனையே அரசு நிறைவேற்ற வேண்டும். அரசியலமைப்பின் இறுதி

(பக்.14)

ஐசிஸ் உருவாக்கத்துக்கான முயற்சிகள் தீவிரம்

கடந்த காலங்களில் பேசப்பட்டு வந்த இலங்கையில் ஐஎஸ் தீவிரவாதிகள் தொடர்பான கதையாடல்கள் மீண்டும் சூடுபிடித்துள்ளன. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் இது ஒரு இஸ்லாமிய இயக்கம் அல்ல என சில வருடங்களுக்கே முன்பே அறிவிக்கப்பட்ட போதும் இந்த அமைப்பினை முஸ்லிம்களுடன் தொடர்புபடுத்துவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்து வருகின்றன.

தீவிரப் போக்குடைய முஸ்லிம் இளைஞர்கள் இந்த இயக்கத்தில் இணைந்து கொள்கின்றனர் எனத் தெரிவிக்கின்ற பொது பலசேனா, தற்போது இலங்கையில் 30 க்கு மேற்பட்ட ஐஎஸ் அங்கத்தவர்கள் இருப்பதாகவும் இந்தப் பயங்கரவாதத்துக்கு முகம் கொடுக்கும் சக்தி இலங்கைக்கு இல்லாததனால் அமெரிக்க, இந்திய பாதுகாப்பு உதவிகளை நாட வேண்டும் எனவும் அது அண்மையில் கருத்து வெளியிட்டிருக்கிறது. (பக்.14)

முஸ்லிம் சமூகத்திலிருந்து மேலும் இரு கட்சிகள் பதிவு

இம்முறை பதிவு செய்யப்பட்ட ஆறு கட்சிகளில் அசாத் சாலியை பொதுச் செயலாளராகக் கொண்ட தேசிய ஐக்கிய முன்னணி (மூக்குக் கண்ணாடி சின்னம்), நஜா முஹம்மதை பொதுச் செயலாளராகக் கொண்ட நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (இரட்டைக் கொடி) ஆகியனவும் தேர்தல்கள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

தனது கட்சி தேசிய அளவில் இயங்கும் சகல இனத்துக்குமான கட்சி என்றும், முஸ்லிம் சமூகத்தில் இருக்கின்ற கட்சிகளுடன் இணைந்து வேலை செய்வதன் ஊடாக அது முஸ்லிம் உம்மத்தை ஒன்றுபடுத்தும் எனவும் கட்சியின் பொதுச் செயலாளர் ஆசாத் சாலி தெரிவித்தார். அடுத்த கட்டமாக கட்சியின் வேலைத்திட்டங்களை நாடு முழுவதும் எடுத்துச் செல்லும் எனவும் (பக்.14)

சொந்த இடத்தில் வாழ்வதற்கான அத்தாட்சி இருக்கும் பட்சத்திலேயே வாக்காளர் இடாப்பில் உள்வாங்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கறாரான நிலைப்பாட்டில் இருக்கின்றமை கவலையளிக்கின்றது.

அமைச்சர் றவூப் ஹக்கீம்

சகல மாணவர்களும் முழுமையாக உடலை மறைக்கும் சீருடையில்

நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெங்கு நுளம்பின் தாக்கத்தில் இருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்கு பாடசாலை சீருடையை தற்காலிகமாக மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கட்டை காற்சட்டை அணிந்து பாடசாலை வரும் மாணவர்கள் நீளமான காற்சட்டையுடனும் மாணவிகள் முழுமையாக உடலை மறைக்கும் வகையிலான சீருடைகளுடனும் பாடசாலைக்கு வரமுடியும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். (பக்.14)

24 காதி பிரதேசங்களுக்கான விண்ணப்பம் 15 ஆம் திகதியுடன் முடிவு

நாட்டின் 24 காதி பிரதேசங்களுக்கு காதிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் ஜூன் 16 ம் திகதி வர்த்தமானியில் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் கோரப்பட்டிருந்தன. இப்பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை ஓரிரு பிரதேசங்களில் இருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக காதிகள் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தபால் சேவைகளில் அண்மையில் ஏற்பட்ட தாமதங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் இம்மாதம் 15 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதனால் குறித்த பிரதேசங்களில் உள்ளவர்கள் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி தகுதியானவர்களை விண்ணப்பிக்கச் செய்ய வேண்டும் எனவும் சம்பந்தப்பட்டவர்கள் வேண்டப்படுகின்றனர். (பக்.12)

வில்பத்துவின் சிங்கள குடியேற்றம் தொடர்பில் அரசு மௌனம்?

(ஹெட்டி ரம்ஸி)

வில்பத்துவை பாதுகாக்க போராடும் அரசாங்கம் வில்பத்துவின் ஏனைய சிங்கள குடியேற்றங்கள் தொடர்பிலும் அரசாங்கம் அங்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் மர முந்திரிகை பயிர்ச்செய்கைக்கு கபளீகரம் செய்துள்ள காணிகள் தொடர்பாகவும் மௌனம் காத்து வருவது ஏன் என 'வில்பத்து பொய் மற்றும் உண்மைகள்' எனும் நூல் கேள்வியெழுப்பியுள்ளது.

வில்பத்து தொடர்பில் கூக்குரலிடுபவர்கள் வில்பத்துவில் உள்ள பூக்குளம் கிராமத்தின் புதிய வீடமைப்பு தொடர்பில் ஏன் மௌனம் காக்கிறார்கள்? அம்மக்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை ஏன் முன்னெடுப்பதில்லை? இது இனவாதம் இல்லை, உண்மையான சூழல் பற்றெனில் வில்பத்துவில் உள்ள இக்கிராமத்தை அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவர்களை அதற்கண்டிய கிராமங்களில் குடியமர்த்துவது தொடர்பில் அரசாங்கம் ஏன் சிந்திப்பதில்லை? என மேற்படி நூல் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளது. (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISIS இல் இணைவதற்காகவா கராட்டி பழக வந்தீர்கள்?

- எம். ரிஸான் ஸெய்ன்

கண்டியிலுள்ள மதிப்பாக போற்றப் படும் பல இனங்கள் கல்வி பயிலும் பிரபலமான பாடசாலையில் 7 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் ஒரு முஸ்லிம் மாணவன் அப்பாடசாலையிலுள்ள கராட்டிக் கழகத்தில் சேர்வதற்காக சென்ற போது அங்கிருந்த சிங்கள மாணவர்கள், "ISIS" இல் இணைவதற்காகவா கராட்டி பழக வந்தீர்கள்.? என்று நையாண்டி செய்து, அவரைக் குழப்பியிருக்கிறார்கள். அவர்களின் தொல்லை தாங்க முடியாமல் அவர் அந்த கழகத்தில் சேரவில்லை.

இன ரீதியாக முடுக்கிவிடப்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாக தேசிய ரீதியாக நஞ்சூட்டப்பட்ட இன விரோத கருத்தியலை பெரியவர்களோடு வளரும் எதிர்கால சந்ததியினரும் உள்வாங்கி இருப்பது அபாயகரமானது மட்டுமல்ல துரதிர்ஷ்டவசமான நிலையுமாகும். இந்த இனவாத சமூக விரோத சக்திகளை கையாளும் போது மிகவும் அவதானமானதும் நுண்ணியமானதுமான சகவாழ்வு மேம்பாட்டு பொறிமுறை ஒன்று இருப்பது அவசியமாகும்.

நாம் கையாளும் முறைகளையும் எம் சமூகத்தின் பக்கச்சார்பற்ற இன ஐக்கியத்தை நோக்கிய முன் நகர்வையும் ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்ய எவ்வாறு நாம் திறந்த மனப்பான்மையோடு நடந்து கொள்கிறோம் என்பதையும் பெரும்பான்மை இன வளரும் சந்ததியினர் கூர்ந்து அவதானிப்பதை கருத்திற் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். சந்தேகமும் மாற்றாந் தாய் மனப்பான்மையும் விதைக்கப்பட்டிருப்பதால் கத்தியில் மேல் நடக்கும் நுணுக்கம் முஸ்லிம் சமூகத்திற்கு அவசியப் படுகிறது.

அரசியல் ரீதியான முரண் நிலைகள் சமூகத்தில் பெரியளவில் பிரச்சினைகளைக் கொண்டு வராது. இனரீதியான முரண்பாடுகள் அவ்வாறானதல்ல. சிறிய ஒரு சம்பவம் பெரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடியது. அதனைத்தான் தர்கா நகரிலும் அண்மைக்கால எரிப்பு சம்பவங்களும் சுட்டிக்காட்டுகின்றன.

எனவே, வளரும் இளம் சமூகத்தின் பொதுஜன உளவியலை கருத்திற் கொள்ளாது, உரிய காத்திரமான நடவடிக்கைகளை முறையாக செய்யத் தவறினால் 30 வருட கால யுத்தத்தின் அபாயகரமான கோர முகங்களைக் கொண்ட அழிவுகளை விடவும் தாக்கம் செலுத்தும் விபரீதங்களை எதிர்கால சந்ததியினரும் அனுபவிக்க வேண்டிய அசாதாரண சூழ்நிலைகள் உருவாகலாம். அதனால் முஸ்லிம் சமூக அரசியல்,சிவில் சமூக சங்கங்கள், இயக்க மற்றும் குரு பீடங்கள் ஆகியன ஒன்றினணந்து, இனரீதியான முறுகல்களைக் கையாளுவதில் அரசியல் இலாப, சுய நல நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பால் நின்று சிந்தித்து செயலாற்றுவது மிகவும் இன்றியமையாததாகும்.

டெங்கு

- எம்.எல்.எம். அன்ஸார்

மரணத்தின் அழைப்பை
எடுத்துக் கொண்டு
சேர்ப்பிப்பதற்கு
முகவரி தேடுகிறது
நுளம்பு!

மகரகம புற்றுநோய் வைத்திய சாலைக்கு உதவிய பதினேழு வயது மாணவி

-அஷ்ரப் ஏ ஸமட்

ஸாரா வஸீர், இவர் கல்கிஸ்ஸை பகுதியை சேர்ந்த பதினேழு வயதான ஒரு நடுத்தர முஸ்லிம் குடும்பத்தை சேர்ந்த சகோதரி, இப்போது சகோதர சிங்கள சமூகத்தில் அதிகம் பேசப்படும் ஒரு முன்மாதிரி யுவதியாக திகழ்கிறார், முகநூலில் இவருக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றது.

இவர் அப்படி என்னதான் சாதித்துவிட்டார் என்று நீங்கள் கேட்பது புரிகின்றது. சிங்கள தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பாகும் ''ஒபத லக்ஷபதி'' (Millionaires) என்கிற நிகழ்ச்சியில் கடந்த வாரம் பங்குகொண்டு 125,000 ரூபாவை வென்று முழுத்தொகையையும் இலங்கை மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்திருக்கிறார், இது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும், இதன் மூலம் இயலாதவர்களுக்கு தம்மால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டும் என்கிற உறுதியான செய்தியை அனைவருக்கும் எத்திவைத்திருக்கிறார்! எதிர்காலத்தில் ஒரு சட்டத்தரணியாக வர வேண்டும் என்பதே இவரது இலட்சியம்.

-பஸுனா பின்த் / இஸ்ஸடீன்

சமூக ஊடகங்களில் ஒருவரை ஒருவர் தூற்றுவதும், கைகொட்டி அதை பகிர்ந்து கொள்வதும், சிலாகிப்பதும் அன்று ஒட்டகக் குடலை சுஜூதில் வீழ்ந்தவரின் கழுத்தில் போட்டு விட்டு கைகொட்டி சிரித்த உக்பாவினதும் அவனது கூட்டாளிகளதும் செயலை நினைவூட்டுகிறது.

சாமான்ய முஸ்லிமின் உளக்குமுறல்

சவூதி-கட்டார் முறுகலைப் பயன் படுத்தி உங்கள் காழ்ப்புணர்வுகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் அந்த ஈரானிற்கும் இஸ்ரேலிற்கும் நீங்கள் சளைத்தவர்கள் இல்லை என்றே தோன்றுகிறது.

தன் சமூகத்தின் இனம் பெருகவில்லை என்பதற்காக முஸ்லிம்கள் மீது குற்றம் சுமத்தும் ஞானசாராக்கள் உங்களுள் இருக்கிறார்கள்.

இலங்கையில் ஜிஹாதி குழுக்கள் இயங்குகிறதா? என்று யாராவது கேள்வி எழுப்பினால் கையை பிடித்து கூட்டிப் போய் இஹ்வானிகள் சலபிகளது வாசலிலும், சலபிகள் இஹ்வானிகளது வீட்டு வாசலிலும் போலிஸ்காரனை கொண்டு விடுமளவிற்கு உங்களுக்குள் இயக்க வெறி இருக்கிறது.

ஒரு இயக்கத்தை மேம்படுத்தும் வழி இன்னொரு இயக்கத்தை சாடுவதல்ல. அவரவர் இயக்கங்களின் சாதனைகள், சிறப்புகளை எடுத்துச் சொல்லுங்கள்.

பதின்ம வயதுகளில் அடையாள அட்டை கிடைத்ததும் ஒரு முகநூல் கணக்கை திறந்த பலர் இங்கிருக்கலாம்.

திருமணமாகி கணவருடன் மத்திய கிழக்கிலிருக்கும் பல பெண்களின் தனிமைக்கு துணையாய் ஒரு கணக்கு இருக்கலாம். தமிழ், சிங்கள பாடசாலைகளில் கற்றதால் சரியான இஸ்லாமிய அறிவு கிட்டாமல் போன பலரும் இங்கிருக்கலாம்.

வாசிப்பின் வாசனையில்லாத, இயக்க அறிமுகமில்லாத பலர் எனக்குத் தெரிய இங்கிருக்கிறார்கள்.அவர்களது நிலையிலிருந்து உங்கள் ஆக்கங்களை பாருங்கள்.

இரு பெரும் இஸ்லாமிய இயக்கங்களது போக்கு அவர்களை வெருண்டோடச் செய்கிறது என்பதை உணர்கிறீர்களா?

இன்னோர் இயக்கத்தை தரக்குறைவாய் விமர்சிப்பதை விடுத்து அவரவர் இயக்கத்தை அழகாய் எடுத்தியம்புங்கள். நீங்கள் குட்டையை குழப்பிக் கொண்டிருக்க,வார்த்தை ஜாலங்களால் பொது எதிரி மீன்பிடித்துக் கொண்டிருப்பதை யாவது அவதானித்தீர்களா?

சவூதி-கட்டார் பிரச்சினையைப் பேசி பேசி இலங்கை பிரச்சினைக்கான ஆக்க பூர்வ தீர்வுகளை தேடுவதில் கோட்டை விடுவீர்கள் எனத் தோன்றுகிறது.

இலங்கையில் பற்றியெரியும் காட்டுத் தீயை பற்றி சிந்தித்தீர்களா?

நீங்கள் இங்கே சத்தமாக விமர்சிப்பதால் சவூதியோ கட்டாரோ தனது நிலைப்பாட்டை மாற்றப் போவதில்லை.

நீங்கள் காட்டுக் கத்தல் கத்தினாலும் கர்ளாவியோ, சுதைசியோ உங்களிடம் மன்னிப்பும் கேட்கப் போவதுமில்லை.

நாலு புத்தகத்தை வாசித்து விட்டு இப்னு தைமிய்யாவை,பின் பாஸை கர்ளாவியை, சுதைசியை, அல்பானியை, பண்ணாவை தரமற்ற வார்த்தைகளால் விமர்சிப்பதற்கு எப்போது அவர்களிடம் மன்னிப்பு கேட்கப் போகிறீர்கள்?

அவர்கள் சுமந்திருக்கும் குர்ஆனும் ஹதீஸ்களும் அவர்களுக்காக பரிந்து பேசும் நாளொன்றில் நாம் வங்குரோத்துக்காரர்களாக நிற்பதை விட்டு அல்லாஹ் தான் பாதுகாக்க வேண்டும்.

ஏங்குவதும் ஏமாற்றப்படுவதும்

-எம்.எஸ்.எம்.சாதிக்

நாம் இன்று சமூகமயமாக்கலில் தனிமைப்பட்டவர்களானோம். நாம் வாழ்கின்ற தேசத்தில் அடிமைகளாகி நமது சமூகவலைத் தளத்தில் இருந்து தூரமாகிவருகிறோம். நாம் பௌதீக, குடும்ப மற்றும் மதம் சார்ந்த கட்டமைப்பில் மிகவும் இறுக்கமான வரலாற்றுப் பின்னணிக்குச் சொந்தக்காரர்கள். சமூகம்சார்ந்த நடைமுறை விடயங்களில் நாம் பங்காளிகளாக இல்லாமல், பார்வையாளராக மாறியுள்ளோம். மாக்ஸிஸம் கூறுகிறது 'சமூக வர்க்கங்களிடையேயான போராட்டங்கள் ஊடாகவும் வரலாறு முன்னேறுகிறது.'

அரசியல் புற்றுநோய் சமூகத்தின் சகல மட்டங்களிலும் தாக்கத்தையும் பலவீனத்தையும் தோற்றுவித்துள்ளது. நமக்கான உரிமைகளையும் தேவைகளையும் அடைந்து கொள்வதற்கான மார்க்கமே அரசியல். மாறாக நமக்கான சமூக கட்டமைப்பை சுயநலமிக்கதாகவும் அடிமைத்தனமாகவும் மாற்றிக் கொள்வதற்கல்ல. ஆகவே முற்போக்கு சிந்தனைகளை முன்னெடுப்பவர்கள்/ எழுதுபவர்கள் விமர்சனங்களால் சோர்வடையக்கூடாது. ஏனெனில் நாமும் சாக்கடைக்குள் இறங்கியே துப்பரவு செய்ய வேண்டி உள்ளது. அழுக்குகளும், அழுத்தங்களும் எங்களுக்கு பழக்கப்பட வேண்டியதே.

ஆழ்வதும் அனுபவிப்பதும் ஒரு கூட்டம்.

ஏங்குவதும் ஏமாற்றப்படுவதும் முழு சமூகமாகும்.

நீங்கள் எப்போது தோற்கடிக்கப்படுவீர்கள்

-ஏ.டபிள்யு.எம்.பாஸிர்

நீங்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பதற்காகவோ, உங்கள் வழிமுறை பலவீனமானது என்பதற்காகவோ, உங்களது எதிரிகளின் எண்ணிக்கை அதிகம் என்பதற்காகவோ,

உங்களுக்கு எதிராக எதிரிகள் திரண்டிருக்கிறார்கள் என்பதற்காகவோ நீங்கள் ஒருபோதும் தோற்கடிக்கப்பட மாட்டீர்கள். பூமியிலுள்ளவர்கள் அனைவரும் உங்களுக்கு எதிராக ஒன்று திரண்டு உங்களை எதிர்த்தாலும் அல்லாஹ் உங்களுக்கு எழுதியதைத் தவிர அவர்களால் உங்களுக்கு எதிராக எதனையும் செய்துவிட முடியாது.

ஆனால், நீங்கள் எப்போது படுமோசமான தோற்கடிக்கப்படுவீர்கள் என்றால், உங்களது உள்ளங்கள் சீர்கெட்டு அல்லாஹ் உங்களது செயல்களை சீர்செய்யாது விடும் போது,

அல்லது உங்களது ஒற்றுமை சிதறி, கருத்து முரண்பாடுகள் தோன்றும் போதாகும்.

- இமாம் ஹஸனுல் பன்னா

மோசடிகள் எம்மை நிர்க்கதிக்கு ஆளாக்கும்

-உவைஸுல் ஹர்மி

கடந்த 01.07.2017 அன்று இரவு 11.30 மணி அளவில் கொழும்பில் இருந்து வாழைச்சேனை செல்லும் வழியில் தற்காப்பிற்காக ஹபரண சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையில் டீசல் அடிக்க வாகனத்தை நிறுத்தி 2000/- ரூபாய் கொடுத்தேன். நிரப்பி முடிந்ததும் 2 கிலோ மீற்றர் வரை சென்றும் டாங்கிக்குள் இருக்கும் டீசலின் அளவில் மாற்றம் தெரியாததால் மீண்டும் செட்டுக்கு திரும்பினேன். எரிபொருள் நிரப்பியவரிடம் விடயத்தை கூறவும் அவர் உள்ளிருந்து இருவரை அழைத்து வந்தார். அவர்களும் எனது முறைபாட்டை ஏற்று 'சிலவேளை வாகனத்தின் எரிபொருள் அளவை காட்டும் காட்டி பழுதாகி இருக்கக்கூடும் என்றவர், எதற்கும் இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய்க்கு டீசல் அடித்துப் பார்ப்போம்' என்றார்.

1000 ரூபாய்க்கு அடித்த போது டாங்கிக்குள் டீசலின் அளவை மீற்றர் சரியாக காட்டியதை அவர் களும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் ஏற்கனவே

கொடுத்த இரண்டாயிரம் ரூபாய்க் குரிய டீசலை முழுவ துமாக வழங்க முடியாது என்று மறுத்துவிட்டனர். முதல் தடவை 2000/-ரூபாய்க்கு பதிலாக 200 ரூபாய்க்கும், இரண்டாம் முறை பரீட்சித்துப்பார்க்க 1000/- ரூபாய்க்கும் எரிபொருள் வழங்கி விட்டு கணக்கினை முடித்துக் கொண்டனர். மிகுதி 800/-ரூபாய்க்குரிய டீசலை வழங்க கோரியும் மறுத்து விட்டனர். நேரத்தையும், வாகனத்துள் இருந்த பெண்கள் சிறுவர்களையும் கவனத்தில் கொண்டு விடயத்தை பெரிதுபடுத்தாது திரும்பி விட்டேன். சில இடங்களில் நடக்கும் திருட்டு எம்மை பாதிக்காமல் இருக்கலாம். ஆனால் இவர்களின் எரிபொருளை நம்பி ஆள் நடமாட்டமற்ற, யானைக் காட்டு வழியாக பிரயாணம் செய்வதென்பது மிகவும் ஆபத்தானதே.

மன்னாரமுது அஹ்னப் எழுதிய 'நவரசம்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த (2017-07-02) அன்று பண்டாரவெளி மு.ம.வி மண்டபத்தில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அவர்களும் முக்கிய அரசியல் பிரமுகர்களும் தொழிலதிபர்களும் இலக்கியவாதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானும் இஸ்ரேலை எதிரியாகவே கருதுமா?

இஸ்ரேலுக்கு அரசுமுறையிலான பயணம் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி. இந்தப் பயணம், இஸ்ரேலுடனான இந்தியாவின் உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை துவங்கும் என்று நம்பப்படுகிறது.

இந்தியா எப்போதுமே பாலஸ்தீனத்தின் சார்பாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி அமைந்தபிறகு, அரசின் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாறுதல்களை காணமுடிகிறது. இஸ்ரேலில் வழங்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய மோதி, தனது பயணம், புதிய பாதையை உருவாக்கியிருப்பதாக கூறினார். இஸ்ரேல் இந்தியாவின் முக்கிய பங்குதாரர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இஸ்ரேலில் பாரதப் பிரதமர் நரேந்திர மோதி ஆற்றிய உரையில் முக்கிய ஐந்து அம்சங்கள் உள்ளன.

1. இஸ்ரேல் தடைகளை பொருட்படுத்தாமல் தனக்கான பாதையை தேர்ந்தெடுத்திருக்கிறது. சவால்களையும் வாய்ப்புகளாக மாற்றிய இஸ்ரேலின் சாதனைக்கு இந்தியா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

2. 41 ஆண்டுகளுக்கு முன்னர் இதே ஜூலை நான்காம் தேதியன்றுதான், எண்டேபே விமான கடத்தல் சம்பவம் நடத்தப்பட்டது. அந்த சம்பவத்தில் இஸ்ரேல் பிரதமர் ராபின், இஸ்ரேலியர்களை காப்பாற்றும் முயற்சியில் தனது சகோதரரை இழந்தார்.

3. இஸ்ரேல், இந்தியாவின் முக்கிய நண்பர்களின் ஒருவர்.

4. சமூகத்தை பாதுகாக்க நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாக செயல்படுகிறோம். இரு நாடுகளுக்கும் பொதுவான பிரச்சனையாக தீவிரவாதம் திகழ்கிறது. அனைத்துத்துறைகளிலும் முற்போக்கான புரிந்துணர்வின் அடிப்படையில், எனது நண்பரும், பிரதமருமான நெதன்யாஹுவும், நானும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வோம்.

5. எனது பயணம் இரண்டு நாடுகளின் உறவில் புதிய பரிமாணத்தை கொண்டு வருவதாக இருக்கும். இஸ்ரேலில் வசிக்கும் இந்திய சமூகத்தினரை சந்திக்க விரும்புகிறேன். பெருமளவிலான இந்திய யூத இனத்தவர்கள், இரு

சமூகங்களுக்கும் பெரிய அளவிலான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இந்திய பிரதமர் மோதி இஸ்ரேலுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது மற்றும் இருநாடுகளிடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு வளர்வது குறித்து பாகிஸ்தான் ஊடகங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையே ராஜாங்க ரீதியான உறவுகள் துவங்கிய 25 ஆண்டுகளுக்கு பிறகு, இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்ட முதல் இந்தியப் பிரதமர் மோதி ஆவார். பாகிஸ்தான் நாளிதழ்களில் இந்த பயணம் குறித்து கருத்துகள் பெரிய அளவில் கூறப்படவில்லை.

ஆனால் தொலைக்காட்சிகளில் சில செய்திகள் மற்றும் ஆய்வாளர்கள், மோதி பயணத்தின் காரணமாக ஏற்படும் என கருதப்படும் பிராந்திய தாக்கங்கள் குறித்து விவாதித்தனர். அரசுகளின் மற்ற தலைவர்களின் இரு தரப்பு பயணங்கள் குறித்து பாகிஸ்தான் அதிகாரபூர்வமாக கருத்து ஏதும் தெரிவிப்பதில்லை. எனினும் இந்த பயணம் பிராந்தியத்தின் கேந்திர ஸ்திரத்தன்மையில் தீவிரமான தாக்கங்கள் ஏற்படுத்தும் என கூறப்பட்டதிலிருந்து ,மோடியின் பயணத்தை பாகிஸ்தான் நெருக்கமாக பின் தொடர்ந்து வருவதாக' பாகிஸ்தானின் முன்னணி ஆங்கில நாளிதழான 'த எக்ஸ்பிரஸ் டிரிபியூன்' சுட்டிக் காட்டியுள்ளது.

இஸ்ரேலை ஒரு நாடாக பாகிஸ்தான் தற்போது வரை அங்கீகரிக்கவில்லை. 2005-ஆம் ஆண்டு, முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரஃப் பதவிக்காலத்தில், பாகிஸ்தானும் இஸ்ரேலும் தங்களிடையே உறவைத் துவங்கின. அந்த நேரத்தில், இருநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்களும் துருக்கியில் சந்தித்தனர். ஆனால் இந்த சந்திப்பு, இரு நாட்டு உறவில் பெரிய முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

பாதுகாப்பு ஒத்துழைப்பு

பாகிஸ்தானின் முன்னாள் ராஜதந்திரிகள் மற்றும் பாதுகாப்பு ஆய்வாளர்கள், இஸ்ரேல் நாட்டினுடனான இந்திய பிரதமரின் நெருக்கம், சூபிராந்தியத்தின் கேந்திர ஸ்திரத்தன்மையை பாதிக்கும்சூ என்று எண்ணுகின்றனர். ஆயுதங்கள் மற்றும் மற்ற ராணுவத் தளவாடங்கள் நீண்ட காலமாக இந்தியாவுக்கு விற்று வரும் முக்கிய நாடாக இஸ்ரேல் இருந்து வருகிறது. இஸ்ரேலுடனான பாது காப்பு மற்றும் ராணுவ உறவு காரணமாக இந்தியா சிறப்பாக பயனடைந்துள்ளதாக பாதுகாப்பு நிபுணரும், ஓய்வு பெற்ற லெப்டினல் ஜெனரலுமான அம்ஜத் சோயிப் தெரிவித்ததாக சூஎக்ஸ்பிரஸ் டிரிபியூன்சூ நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

''அமெரிக்காவின் அதிநவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் வாய்ப்பை இஸ்ரேல் வாயிலாக இந்தியா பெற்றுள்ளது'' என அவர் கூறியுள்ளார்.

இதே கருத்தை பிரதிபலிப்பது போல ''இந்தியா-இஸ்ரேலுக்கு இடையே வளர்ந்து வரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு, தெற்காசியப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு தொந்தரவாக இருக்கும்'' என சர்வதேச உறவுகள் குறித்த ஆய்வாளரான டாக்டர் ஜாபர் நவாஸ் ஜஸ்பால் அந்த செய்தித்தாளிடம் தெரிவித்துள்ளார். இஸ்ரேலின் உதவி இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்தை மேலும் மேம்படுத்தக்கூடும். அவ்வாறு நடப்பது என்பது, பாகிஸ்தான் இந்தியாவுக்கெதிரான நம்பகமான தாக்குதல் தடுக்கும் திறனை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை குலைக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

பாகிஸ்தானின் முக்கிய பத்திரிக்கையாளராக கருதப்படும் கம்ரான் கான், உருது தொலைக்காட்சியான துன்யாவில் நடத்திய, ஒரு நிகழ்ச்சியில், பாகிஸ்தானில் நிலையற்ற அரசியல் தன்மை இருக்கும்போது, இந்திய பிரதமர் மாபெரும் ராஜதந்திர நகர்வுகளை செய்து வருகிறார்.சூ என தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு முன்னணி கட்டுரையாளரான நஸ்ரத் ஜாவேத், தாராளவாத உருது தொலைக்காட்சியான சூடான் டிவியில் தெரிவித்த கருத்துக்களில், இந்திய பிரதமரின் முதல் இஸ்ரேலிய பயணத்தை, இந்தியாவின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த சிறந்த முன்னேற்றம் என கூறியுள்ளார். இந்தியா மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பு என்பது பாகிஸ்தான் மீது நேரடி தாக்கத்தை செலுத்த வல்லது என்று பாகிஸ்தானின் முன்னாள் தூதரான அலி சர்வார் நக்வியும் கூறினார் என்று எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன் நாளிதழ் கூறியது.

தீவிரவாதத்தின் பொதுவான சவால்

இரண்டு நாடுகளுக்கு இடையிலான செயற்பட்டியலில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் முக்கிய பிரச்சனையாக இருக்கும் என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. டெல் அவிவ் நகருக்கு கிளம்பும் முன்னர், டெல்லிக்கும், டெல் அவிவிற்கும் இடையே பயங்கரவாதம் சூஒரு பொதுவான சவால்சூ என மோதி குறிப்பிட்டார். பாகிஸ்தானில் உருவாகும் பயங்கரவாதத்திற்கு எதிரான செயல்பாடுகளில் இந்தியாவிற்கு டெல் அவிவ் ஆதரவளித்தது என இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

''பாகிஸ்தானை பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்த இந்தியா கடுமையாக உழைத்துள்ளதாகவும், இதன் மூலம் இந்தியாவில் எந்த பயங்கரவாத செயல்கள் நடைபெற்றாலும் அந்த பழியை பாகிஸ்தான் மீது சுமத்துவதாகவும் 'த எக்ஸ்பிரஸ் டிரிபியூன்' பத்திரிக்கை இந்தியாவை விமர்சித்து செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய ஊடகங்கள் பாகிஸ்தானைப் பற்றி மிக அதீத கவனத்துடன் இருக்கின்றன என ஆய்வாளர் நக்வி கூறியதாகவும் அந்த செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

(பக்.12)

• கருணாகரன்

தேசிய கட்சிகளுக்கு வாய்ப்பான சூழல் உருவாகிறதா?

வடக்குக் கிழக்கின் அரசியல் 'எதிர் நிலை' மாற்றங்களை நோக்கிச் செல்கிறதா? இந்தப் பிராந்தியங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் முன்னரை விட வாய்ப்பானதொரு சூழல் ஒன்று உருவாகி வருகிறதா?

பிராந்தியக் கட்சிகள் அல்லது இன அடையாளக் கட்சிகள் என்பவற்றின் செல்வாக்கு வீழ்ச்சியடைகிறதா? அதாவது தமிழ் மற்றும் முஸ்லிம் தேசியவாதக் கட்சிகளின் ஆதிக்கம் வலுவிழக்கிறதா? மக்கள் தமது தேவைகளுக்குப் பொருத்தமானது என நம்பும் புதிய வழிகளைத் தேடுகின்றனரா? அதற்கான காரணம் என்ன? பிராந்தியக் கட்சிகளை விட, தேசியக் கட்சிகள் என்று குறிப்பிடப்படும் சு.கவும் ஐ.தே.கவும் வடக்குக் கிழக்கு மக்களுக்கு எந்தளவுக்கு உபயோகமாக இருக்கும்?

இந்த மாதிரியான கேள்விகள் இன்று தமிழ், முஸ்லிம் சமூகங்களில் சிந்திக்கும் தரப்பினரிடையே பலமாக எழும் சூழல் உருவாகியுள்ளது.

இதற்குக் காரணம், வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தளமாகக் கொண்ட தமிழ் மற்றும் முஸ்லிம் தேசியவாதக் கட்சிகளினதும் அவற்றின் அரசியற் செயற்பாடுகளினதும் பலவீனமான - குறைபாடான போக்கேயாகும். அதாவது தமிழ், முஸ்லிம் மக்களுடைய எதிர்பார்க்கைகளையும் தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இல்லை என்பதால் ஏற்பட்ட விளைவே இது எனலாம்.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ், முஸ்லிம் அரசியலே செல்வாக்குச் செலுத்துகின்றது. இரண்டு மாகாணங்களிலும் உள்ள மாகாண சபைகள் தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்பின் கைகளிலேயே உள்ளன. இரண்டு மாகாணங்களிலும் உள்ள எட்டு மாவட்டங்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் மொத்தமாக 29. போனஸ் 2. இதில் முஸ்லிம் கட்சிகளும் தமிழ்க் கட்சிகளும் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

இருந்தாலும் இவற்றினால் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் தேவைகளையும் அரசியல் அபிலாஷைகளையும் நிறைவு செய்ய முடியவில்லை. இந்தப் பிராந்திய மக்களின் பொருளாதார முன்னேற்றம் உட்பட இயல்பு வாழ்க்கையின் மேம்பாடானது எதிர்பார்க்கும் உயர் நிலையைப் முடியாதிருக்கிறது. அதற்கான முயற்சிகளில் தமிழ்க் கட்சிகளும் சரியாக முயற்சிக்கவில்லை. முஸ்லிம் கட்சிகளும் முயற்சிக்கவில்லை என்ற மனக்குறையே மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போல அரசியல் ரீதியான தீர்வு முயற்சிகள், சமூகங்களின் பாதுகாப்பு, அவற்றுக்கான அந்தஸ்து, இராணுவ நெருக்குவாரத்தை நீக்குதல், அரசியல் உரிமைகள் போன்றவற்றிலும் இந்தத் தரப்புகள் வெல்லும் திறனற்றவையாகவே உணரப்படுகின்றன.

முக்கியமாக வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் இயங்கு முறைமை மக்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. வடக்கு மாகாண சபை இதில் இன்னும் பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. வட மாகாண சபையின் வினைத்திறனற்ற செயற்பாடுகள், ஊழல், அதிகாரப் போட்டி போன்றவையெல்லாம் மக்களைச் சலிப்படைய வைத்துள்ளன. இதனால் இந்த மாகாண சபை ஆட்சியையும் நிர்வாகத்தையும் மக்கள் எரிச்சலோடுதான் பார்க்கின்றனர். இவற்றைச் சரிப்படுத்த வேண்டிய பொறுப்பிலிருக்கும் தமிழ் அரசியற் தலைமைகள் மந்த நிலையைக் கொண்டிருப்பது மக்களுக்கு மேலும் சினத்தை உண்டாக்கியிருக்கின்றன.

ஏறக்குறைய இதே நிலைதான் கிழக்கு மாகாண சபையின் நிலையிலும் காணப்படுகிறது. கடற்படை அதிகாரி ஒருவர் கிழக்கு மாகாண முதலமைச்சரை அவமதித்த பிரச்சினையில் முஸ்லிம் தலைமைத்துவங்கள் சரியாக நடந்து கொள்ளவில்லை என்பது முஸ்லிம் மக்களுக்குப் பெரிய மனக்குறையை உண்டாக்கியிருக்கிறது. முதலமைச்சருக்கே இந்த நிலைமைகளைப் பற்றிய தெளிவான விளக்கங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அதைப் பெறமுடியாமலே தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் இன்னும் உள்ளன.

அரசாங்கத்துக்கு ஆதரவளித்துக் கொண்டும், அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டும் இருக்கும் நிலையில் கூட இந்தச் சமூகங்களின் அரசியல் உரிமைகள் பற்றிய தெளிவான சித்திரத்தை அரசாங்கத்திடமிருந்து பெற முடியாதிருக்கும் சக்திகளால் எப்படி நிரந்தரமான ஒரு தீர்வை நோக்கிப் பயணிக்க முடியும்? என்ற எளிய கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது. இதுவே இந்தச் சக்திகளின் மீதான நம்பிக்கையீனமாக உருவாகியுள்ளது.

ஆகவே குறைந்தபட்சமாக நிலவுகின்ற இந்தச் சூழலுக்குள் தமது வாழ்க்கைத் தேவைகளையாவது நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றே மக்கள் சிந்திக்க முற்படுகின்றனர். இதையே அரசாங்கமும் எதிர்பார்க்கிறது. பிராந்தியக் கட்சிகளிடமிருந்து அல்லது தமிழ் முஸ்லிம் கட்சிகளிடமிருந்து விடுபட்டுத் தம்மை நோக்கி வரக் கூடிய ஒரு பொறியை அது உருவாக்கியிருக்கிறது. இதில் ஐ.தே.க.வும் சு.க.வும் ஒரே நிலைப்பாட்டுடன்தான் செயற்படுகின்றன.

இதற்கேற்ற வகையான தெரிவுகளை நோக்கிச் செல்வதற்கான மனநிலை தற்போது தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடம் உருவாக்கம் பெற்று வருகிறது. இதைச் சிலர் மறுத்துரைக்கக் கூடும். ஐ.தே.கவும் சு.கவும் தொடர்ச்சியாக இத்தகைய நிலைப்பாட்டோடும் தான் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றன. ஆகவே இதுவொன்றும் புதியதல்ல.

மக்கள் இந்த அலையில் அடிபட்டுப் போக மாட்டார்கள். அவர்கள் எந்த நிலையிலும் தங்கள் அடையாளங்களைக் கொண்டிருக்கும்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் தீங்குகளை ஒழிக்க வேண்டிய சமயம்

சைட்டமுக்கு எதிரான அரச வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தம் ஒருவார காலத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளது. டெங்கு நோயினால் நாட்டின் சனத் தொகையில் 5 வீதமானவர்கள் பாதிக்கப்பட்டு வைத்திய சாலைகள் நிரம்பி வழியும் நிலையில் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு வேலைநிறுத்தத்தை கைவிடுமாறு சமயத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்ததன் பேரில் தமது போராட்டம் ஒத்திப் போடப்பட்டதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அஸ்கிரிய பீட மகா நாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரோ, கொழும்பின் மறைஆயர் மல்கம் காடினல் ரஞ்சித் ஆகியோர் உட்பட பல மதத் தலைவர்கள் இதுதொடர்பில் தம்மிடம் வேண்டுகோள் விடுத்ததாக சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமயத் தலைவர்கள் செய்ய வேண்டிய முக்கியமான பணியை சரியான தருணத்தில் முன்னெடுத்துள்ள இந்தச் சமயத் தலைவர்கள் பாராட்டப்பட வேண்டும். கூட்டல் குறைத்தல்கள் இருந்தாலும் அனைத்து சமயங்களும் மனிதனின் நலனையே முற்படுத்துகின்றன. அந்த வகையில் மனித நலனைப் பாதிக்கின்ற விடயங்கள் எதுவாக இருந்தாலும் அதனைத் தடுத்து நிறுத்துவது சமயங்களின் கடப்பாடாகும். மதங்களின் சார்பில் மதத் தலைவர்கள் இதற்காக முன்வருவது அவசியமானதாகும்.

நாட்டில் எது நடந்தாலும் தனது மத விவகாரங்களில் மட்டும் குறியாக இருக்கின்ற சமயத் தலைமைகளை விட நாட்டின் பொது விவகாரங்களில் அக்கறை செலுத்துகின்ற சமயத் தலைமைகளே நாட்டின் முதன்மைத் தேவையாக விருக்கிறது. அதே போல நாட்டுக்கு அச்சுறுத்தலையும் அபகீர்த்தியையும் விளைவிக்கின்ற செயற்பாடுகளில் சமயத் தலைவர்கள் ஈடுபடுவதும் கண்காணிக்கப்பட வேண்டும்.

அரசியல் தலைமைகளை விட சமயத் தலைமைகளை மக்கள் கௌரவமாகவே கணிக்கின்றார்கள். சமயத் தலைவர்கள் சில சமயங்களில் மாற்றமாக நடந்து கொள்ளும் போது அது ஒரு சமூகத்தையே தவறான நெறியில் இட்டுச் செல்கிறது. இவ்வாறான சமயங்களில் நபர்களைப் பாதுகாப்பதை விட சமயத்தைப் பாதுகாக்கவும் அதனூடாக நாட்டைப் பாதுகாக்கவும் கரிசனை காட்டுவது தான் பொருத்தமானதாக அமையும்.

நாட்டின் தற்காலச் சூழலில் மதங்களின் வகிபாகம் முக்கியமானது. தத்தமது மதங்களின் பால் பற்றுக் கொண்ட மக்களே இலங்கையில் பெரும்பாலானவர்கள் இருக்கின்றார்கள். இதனால் நாட்டை சமயங்களின் ஊடாக இலகுவாக நெறிப்படுத்த முடியுமான சாதகச் சூழல் தான் நாட்டிலே நிலவி வருகிறது. மதச்சார்பற்ற சிந்தனை நாட்டிலே பேசப்பட்டாலும் இலங்கை மக்கள் மதங்களிலே இன்னும் நம்பிக்கை இழந்து விடவில்லை.

இந்த நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் மதத் தலைமைகள் அரசியல் சுயலாபங்களில் இருந்து விடுபட வேண்டும். யாருடைய தேவைக்காகவும் மதத்தை வளைந்து கொடுப்பதனை விட மதங்களின் போதனைக்கேற்ப மக்களை, அவர்கள் யாராக இருந்தாலும், வளைத்தெடுப்பதற்கே மதங்கள் முயல வேண்டும்.

தவறு செய்தவர் தனது சமயத்தின் தலைவராக இருந்தாலும் அதனைச் சுட்டிக் காட்டி திருந்தச் செய்வது தான் மதங்களின் புனிதத் தன்மையை பேணிப் பாதுகாக்கும். இதை விட்டு தவறு செய்தவர் தனது சமயத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக அவரைப் பாதுகாக்க முனைவதும் அவருக்காக அணிதிரள்வதும் வடிகட்டிய மதத் தீவிரவாதமாகும். எந்த வகையான மதத் தீவிரவாதங்களும் நாட்டுக்குள்ளே அனுமதிக்கப்படக் கூடாது. அது நாட்டை அழித்துக் குட்டிச் சுவராக்கும்.

பண்பாட்டு ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தற்போது நாடு எதிர்நோக்குகின்ற பின்னடைவுகளில் இருந்து நாட்டைப் பாதுகாக்க மதத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும். அதுதான் இந்த நாட்டில் மதங்களின் இருப்பைப் பாதுகாக்கும்.

நாட்டிற்கு மறைக்கப்படும் கடன் நெருக்கடி

• சுனந்த மத்துமபண்டார
(பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலை)

அரச கடன் தொகை பற்றிய பல்வேறு கருத்துக்களை கடந்த காலப்பகுதியில் செவி மடுக்க கிடைத்தது. அண்மைக் காலமாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பின்னடைவுக்கு உட்பட்டிருப்பதன் மூலம் கடன் நாட்டின் அடிப்படைப் பிரச்சினையாக மாறியிருப்பது தெரிகிறது. அதனால் அக்கருத்துக்களின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களையும் கடந்த காலப்பகுதியில் கடன் தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பிலுமான தகவல்களை ஆராய்ந்து உண்மை நிலை தொடர்பான கருத்துக்கு வர முடிகிறது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான முதலீட்டுத் தொகையை தேசிய ரீதியாக அடைந்துகொள்ள முடியாமல் இருப்பது இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் முகங்கொடுக்கும் முக்கிய பொருளாதாரப் பிரச்சினையாக உள்ளது.

தேசிய சேமிப்பு குறைந்தளவில் காணப்படுவதனால் முதலீட்டுக்குப் பயன்படுத்தக் கூடிய நிதியில் பற்றாக்குறை நிலவுகிறது. இவ்வாறான நிலையில் கடன் மற்றும் வெளிநாட்டு உதவியின் மூலம் முதலீட்டுக்குத் தேவையான நிதியைப் பயன்படுத்த நேரிடுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திற்கு வெளிநாட்டுக் கடனை பயன்படுத்தும் முறையை நிறையவே கண்டுகொள்ள முடிகிறது. அபிவிருத்தியடைந்த சகல நாடுகளும் அபிவிருத்தியின் துவக்கத்தில் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டுக் கடனைப் பெற்றுள்ளன.

இவ்வகையில் அரசாங்கத்தின் நடைமுறைக்கும் மூலதனச் செலவுக்கும் நிதி போதாமல் போகும் போது -குறிப்பாக வரவு செலவிற்கு இடையிலுள்ள இடைவெளியை நிவர்த்தி செய்துகொள்வதற்கு அரசாங்கம் தேசிய ரீதியிலும் கடன் பெறுகின்றது. தேசிய வங்கிகள் மற்றும் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களுக்கு திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலம் தேசிய ரீதியில் கடன் பெறப்படுகின்றது.

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் மாத்திரமல்லாமல், அபிவிருத்தியடைந்த நாடுகளும் நிதி நெருக்கடிகளை சமாளிப்பதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடன் பெறுவதில் முனைப்புக் காட்டுகின்றன. ஜப்பான் அரசாங்கம் உலகில் கூடுதலாகக் கடன்பெற்றுள்ளது. ஜப்பான் அரசாங்கம் இதுவரையில் அந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 250.40 வீதம் கடன் பெற்றுள்ளதுடன் இத்தாலி 132.6 வீதமும் சிங்கப்பூர் 112 வீதமும் ஐக்கிய அமெரிக்கா 106.10 வீதமும் என்ற அடிப்படையில் கடன் பெற்றுள்ளது. உலகின் சிறிய பெரிய நாடுகள் அனைத்தும் தமது நடவடிக்கைகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக வெளிநாட்டுக் கடன் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருப்பது தெளிவாகிறது.

1977 ஆம் ஆண்டு சுதந்திரப் பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வேண்டி தேசிய மற்றும் சர்வதேச கடன்களை பெரியளவில் பயன்படுத்தலானது. 1976 ஆம் ஆண்டு நாட்டின் தேசிய கடன் தொகை 12.6 பில்லியன் ரூபாவாகவும் வெளிநாட்டுக் கடன் 4.9 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது. நாட்டின் மொத்த அரச கடன் தொகை 17.6 பில்லியன் ரூபாவாக இருந்தது. அது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 58.5 வீதமாகும்.

சுதந்திரப் பொருளாதாரக் கொள்கை அமுல்படுத்தப்பட்ட முதல் வருடமான 1978 இல் தேசிய கடன் தொகை 16.3 பில்லியன் ரூபாவாகவும் வெளிநாட்டுக் கடன் 14.5 பில்லியன் ரூபாவாகவும் அரசின் மொத்தக் கடன் தொகை 30.9 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது. அது, மொத்த தேசிய உற்பத்தியில் 72.5 வீதமாகும்.

சுதந்திரம் பெற்றது முதல் 1978 வரையிலான காலப்பகுதிக்குள் பதிவான உயரிய கடன் வீதமே இது. அதனைத் தொடர்ந்து 11 வருடங்களின் பின்னர் 1989 இல் தேசிய கடன் தொகை 117.5 வீதமாகவும் வெளிநாட்டுக் கடன் தொகை 156.2 பில்லியன் ரூபாவாகவும் அதிகரித்து, நாட்டின் முழுக் கடன் தொகை 273.8 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியதுடன் மொத்த தேசிய உற்பத்தியில் அது 108.7 வீதமாகும். இலங்கை வரலாற்றில் இதுவரை மொத்த தேசிய உற்பத்தியின் உயர் சதவீதமாக பதிவான அளவாகும்.

ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கத்தினால் பல்வேறு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம் போன்றவற்றுக்குக் கூடுதலான முதலீடுகளை செய்ய வேண்டியேற்பட்டதுடன், அதற்கு அரசிடம் நிதி காணப்படாமையினால் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கடன் பெறப்பட்டு இக்குறைபாடுகள் முழுமைப் படுத்தப்பட்டன.

அரசாங்கத்தின் செலவுக்கு போதிய வருமானம் கிடைக்காத போது வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் துண்டு விழும் தொகை படிப்படியாக அதிகரிக்கும். அதற்கு சிறந்த வழிமுறையாக அப்போதைய தலைவர்கள் அரச வளங்கள் மற்றும் நிறுவனங்களை தனியார்மயப்படுத்தி வருமானம் ஈட்டும் முறையைக் கையாண்டார்கள். 1991 இல் அத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 'மக்கள் மயப்படுத்தல்' என்பதாக அறிமுகப்படுத்தப் பட்டது.



1991 முதல் 2005 வரையிலான 15 வருட காலத்திற்குள் ஒவ்வொரு வருடமும் அரச நிறுவனங்கள் விற்பனை செய்யப்பட்டு அரசாங்கத்தின் செலவுகள் சமாளிக்கப்பட்டது. சந்திரிகா அம்மையார் தனது ஆட்சிக் காலப் பகுதியில் ஒவ்வொரு வருடமும் அரச நிறுவனங்களை விற்பனை செய்து வரவு-செலவுத் திட்டத்திற்கான நிதியை தேடிக் கொண்டார்.

1997 ஆம் ஆண்டு அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 22,499 மில்லியன் ரூபாவாகும். அவ்வருட வரவு-செலவு திட்டத்தின் துண்டுவிழும் தொகை 62,732 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், அதில் மூன்றில் ஒரு பங்கினை அரச சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் ஈடுசெய்யப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் தொடர்ந்தும் கடன் வழங்கப்பட வேண்டும் என்றால் அரச சொத்துக்களை தனியார் பிரிவுக்கு விற்பனை செய்வது கட்டாய நிபந்தனையாகக் காணப்பட வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அரச சொத்துக்களை விற்பனை செய்து வருவாய்களை பெற்றுக் கொண்டாலும் 1990 தொடக்கம் 1995 வரையிலான காலப்பகுதியை ஆராய்ந்து பார்த்தால் அக்காலப்பகுதிக்குள் அரச கடன்தொகையில் குறைவு ஏற்படவில்லை என்பது நிரூபனமாகிறது. 1990 இல் அரசாங்கத்தின் முழுக் கடன் தொகை 310.7 பில்லியன் ரூபாவாக காணப்பட்டதோடு அத்தொகை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து 1995 இல் 635.6 பில்லியன் ரூபா வரையில் எகிறியது. அரச சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு வருமானம் பெறப்பட்டாலும் சகல அரசாங்கங்களுக்கும் ஒவ்வொரு வருடத்திலும் அரசாங்கத்தின் செலவுக்கு உள்நாட்டு வெளிநாட்டு கடன்களை பெற வேண்டியேற்படுகிறது.

2005 இல் ஆட்சிபீடமேறிய மஹிந்த ராஜபக்ஷ, அரச சொத்து விற்பனையை முற்றாக நிறுத்தியிருந்தார். அதனால் அரசாங்கத்திற்கு உள்நாட்டு வெளிநாட்டு கடன்களைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு யுத்தத்திற்கும் யுத்தத்தால் இடம்பெற்ற சேதங்களுக்காக வேண்டியும் கூடுதலான நிதியை செலவு செய்ய வேண்டிய நிலை உருவானது.

அத்தோடு யுத்தம் இடம்பெற்று வந்த வேளையிலும் உர மானியத் திட்டம், கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம் மற்றும் பெருந்தெருக்கள் அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக் காலப்பகுதியில் வடகிழக்கு அபிவிருத்தி உள்ளிட்ட துறைமுகம், விமான நிலையம், அதிவேக வீதி அபிவிருத்தித் திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமையினால் அதற்கு முன்பிருந்த காலப்பகுதிகளை போன்று அரச கடன் தொகையும் அதிகரித்தது.

எவ்வாறிருப்பினும் ராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதியிலும் தற்போதை ஆட்சிக்காலப் பகுதியிலும் எவ்வாறு கடன் பெறப்பட்டுள்ளது என்பது தொடர்பான மதிப்பீட்டை செய்ய முடிகிறது. 2010 இல் 2565 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட தேசிய கடன் தொகை 2014 வரையிலான 5 வருடத்திற்குள் 4277 பில்லியன் ரூபாவாக, 1712 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. 2010ல் 4590 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகை 2014 இல் 7390 பில்லியன் ரூபாவாக, 2800 பில்லியனினால் அதிகரித்துள்ளது. இவ் ஐந்து வருட காலப் பகுதிக்குள் தேசிய கடன் தொகை 66 வீதத்திலும் வெளிநாட்டுக் கடன் 61 வீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, தற்போதைய அரசாங் கத்தின் இரு வருட காலத்திற்குள் அதாவது, 2015 முதல் 2016 இன் இறுதிப்பகுதி வரையிலான காலப் பகுதிக்குள் உள்நாட்டுக் கடன் தொகை 1064 பில்லியன் ரூபாவினாலும் வெளிநாட்டுக் கடன் 1997 பில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளது. இவ்விரு வருட காலத்திற்குள் உள்நாட்டுக்கடன் கடன் 24 வீதத்தினாலும் வெளிநாட்டுக் கடன் 27 வீதத்தினாலும் அதிகரித்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் அது 79.3 வீதமாகும்.

எவ்வாறிருப்பினும், இவ்வறிக்கையில் சிக்கல்கள் உள்ளன. அரசாங்கத்தின் கடன் தொடர்பில் ஒரு சில தரவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கக் கணக்காய்வாளர் நாயகம் நிதி அமைச்சுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். நிதி அமைச்சு அரசாங்கத்தின் கடன் அளவை குறைத்து காண்பித்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் பாராளுமன்றத்திற்கு தெரிவித்துள்ளார். இது மிகவும் பாரதூரமானதொரு நிலையாகும்.

நடப்பரசாங்கம் கடந்த இரண்டரை வருட காலத்திற்குள் பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டுக் கடனானது, வரலாற்றில் பெறப்பட்டுள்ள பாரியதொரு தொகையென தெரிவிக்கப்படுகின்றது. 2015 இல் அரசாங்கம் அபிவிருத்தி பிணைமுறி கடன் பத்திரத்தின் மூலம் 2491.4 மில்லியன் டொலர் கடனை பெற்றுள்ளது. 2016 இல் அபிவிருத்தி பிணைமுறி கடன் பத்திரத்தின் மூலம் 1365 மில்லியன் டொலர் கடனை மேலதிகமாக பெற்றது.

2015 இல் சர்வதேச சுதந்திர கடன் பத்திரத்தின் மூலம் 2150 பில்லியன் ரூபா கடனையும் 2016ல் 1500 பில்லியன் ரூபா கடனையும் பெற்றுள்ளது. அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 1500 பில்லியன் டொலரையும் கடனாக பெற்றுள்ளது. இது தவிர, இந்தியாவுடனான நிதிப்பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2015 இல் 400 மில்லியன் டொலரும் அதனைத் தொடர்ந்து 1100 மில்லியன் டொலரும் பெறப்பட்டுள்ளது.

2017 ஜூன் மாதத்தில் 515 மில்லியன் டொலர் பெறுமதியான அபிவிருத்தி பிணைமுறிகள் வெளியிடப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்குள் 1500 பில்லியன் டொலர் பெறுமதியான அபிவிருத்தி பிணைமுறிகளை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. எனவே அரசாங்கம் கடந்த இரண்டரை வருடத்திற்குள் சுமார் 8000 மில்லியன் டொலரை வெளிநாட்டுக் கடனாகப் பெற்றுள்ளது. (பக்,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்

இந்த கள்ள மௌனத்தின் உள்ளர்த்தம் என்ன?

இலங்கையின் நான்காவது பௌத்த பீடம் வெளியிட்டுள்ள ஒரு சமநிலையான அறிக்கையில், இனக்கலவரம் வெடிக்கும் தருணத்தில் நாடு உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய ஒரு கொதிப்பான சூழலில், நல்லாட்சி கோசத்தோடு அதிகாரத்தைக் கைப்பற்றிய மைத்திரியும் ரணிலும்

மஹிந்தவின் எட்டாண்டு கால ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிரான பாரிய 21 சம்பவங்கள் நடந்தன. நல்லாட்சி என்று கூறிக்கொண்டு அதிகாரத்திற்கு வந்த மைத்திரியின் ஆட்சியில் இரண்டரை ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் 85 சம்பவங்கள் நடந்துள்ளன. இன்னும் சில சம்பவங்கள் ஆங்காங்கே புகைந்த வண்ணம் உள்ளன.

ஞானசார சரண், கைது, பிணை என நடித்து வரும் ஓரங்க நாடகம் சாமர்த்தியமான திரில் வகை நாவல் ஒன்றைப் போல முஸ்லிம்களின் இதயத் துடிப்பை வேகமாக்கிக் கொண்டிருக்கின்றது.

தம்புள்ளை முதல் அளுத்கமை உள்ளிட்டு வென்னப்புவ சம்பவம் வரை இடம்பெற்ற அனைத்து வன்முறைக் காட்சிகளிலும் பல்வேறு விதமான அழிவுகள் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன. பல கோடிகள் இழக்கப்பட்டுள்ளன. பள்ளிவாயல்கள் தாக்கப்பட்டுள்ளன. அச்சுறுத்தல் சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

2016 ஐ விட 2017 இன வன்முறையின் மோசமான ஆண்டாகப் பதிவாகியுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரமும் வெறியூட்டும் பரப்புரைகளும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளும் இலங்கையின் ஊடகங்களில் வியாபித்து வருகின்றன. விளைவாக, ஆங்காங்கே தீ வைப்புச் சம்பவங்களும் பள்ளிவாயல்கள் மீதான தாக்குதல்களும் நடைபெறுகின்றன.

இத்தகைய சம்பவங்களுக்குப் பின்னணியில் BBS அங்கத்தவர்களே உள்ளனர். பொலிஸார் அறிக்கையிடுகின்றனர். இனப் பதட்டத்தினால் முழு நாடும் அதிர்ந்து போயுள்ளது. எனினும், இதற்குப் பின்னணியில் இருக்கின்ற சூத்திரதாரி ஞானசாரர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்பது சிவில் சமூகத்திற்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கின்றது.

இன ஒடுக்குமுறையினால் பாதிக்கப்படும் ஒரு சமூகம் இறுதியாக நம்பிக்கை வைக்கும் நிறுவனம் காவல் நிலையங்களும் நீதிமன்றங்களுமே. ஆனால், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின் போது சட்டத்தின் ஆட்சி தலைகீழாய் செயல்படுகின்றது.

1890 களில் இடம்பெற்றது போன்று முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரம் சிங்கள-பௌத்த சமூகத்தின் அடிமட்டம் வரை நுணுக்கமாக முன்னெடுக்கப்படுகின்றது. 1915 இனக்கலவரத்திற்கான ஆடுகளம் தெற்காசிய பௌத்த எழுச்சிச் சங்கத்தின் தலைவர் அனகாரிகவினால் தயாரிக்கப்பட்டது போன்று, இன்று ஞானசாரவினால் தயார் செய்யப்படுகின்றது.

கம்பளைக் கலவரத்தின் இரண்டாம் பாகம் மிக அமைதியாக நடந்து வருகிறது என்பதே கள உண்மையாகும். ஏனெனில், கம்பளைக் கலவரத்தின்போது தீயிடப்பட்ட முஸ்லிம் கடைகளின் அளவையும் பெறுமானத்தையும் விட கடந்த ஐந்தாண்டுகளில் எரியூட்டப்பட்ட முஸ்லிம் கடைகளினது அளவும் பெறுமானமும் பன்மடங்கு அதிகம் என்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

தொடக்கத்தில் ஞானசாரரின் வெறுப்பு வார்த்தைகள் அவரது தனிப்பிட்ட பிரச்சினையாகவே பார்க்கப்பட்டது. இப்போது அது இலங்கை பௌத்தர்களின் தேசிய பிரச்சினையாக நோக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

ஞானசார முன்வைக்கும் பிரச்சினைகள் அனைத்தும் உண்மையானவை, ஏற்கத்தக்கவை. அதனை முன்வைக்கும் விதமே ஏற்க முடியாதவை எனக் கூறுமளவுக்கு அவரைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் உருவாகின்றன.

ஜூன் 23 ஆம் திகதி இலங்கையின் நான்கு பௌத்த தலைமை மத பீடங்களுள் ஒன்றான அஸ்கிரிய பீடம் வெளியிட்டுள்ள அறிக்கையின் ஒவ்வொரு வார்த்தையும் நம்மைத் திடுக்கிட வைக்கின்றது. கடந்த ஐந்தாண்டு கால முஸ்லிம் எதிர்-பிரச்சாரத்தின் போக்கில் இதை ஒரு திருப்பம் எனக் கொள்ளலாம். ஆனால், அது மிக அசாதாரணமானது.

நவீன இலங்கையின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டும் ஒரு மதகுருவையும் அவரது இனவாத நிலைப்பாடுகளையும் அஸ்கிரிய பீடம் நேரடியாக ஆதரித்து வெளியிட்டுள்ள இந்த அறிக்கை மிகவும் பயங்கரமானது. ஏனைய இரண்டு தலைமைப் பீடங்கள் இதனை ஆதரித்துள்ளதோடு, மூன்றாவது பீடம் மாத்திரம் ஓர் நடுநிலையான கருத்தினை வெளியிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரத்தின் போக்கில் நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு பக்கத்தை இது திறந்து விட்டுள்ளது.

ஞானசாரர் குறித்து பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் நீதிமன்றத்தை அவமதித்தல் குற்றச்சாட்டுக்களும் உள்ளடங்குகின்றன. குர்ஆனை அவமதித்தார், வன்முறைகளைத் தூண்டினார் என்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பெயரில் ஒரே காலத்தில் பல்வேறு வழங்குகள் அவருக்கு எதிராகப் பதியப்பட்டன. அவரைக் கைதுசெய்வதற்கு பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டதாக பொலிஸ் துறை அறிவித்தது.

பின்னர் அவர் ஓர் அமைச்சரின் வீட்டில் அடைக்கலம் பெற்றுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் டொக்டர் ராஜித சேனாரத்ன பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார். நீதியமைச்சர் விஜயதாசவிடம் மற்றொரு அமைச்சர் ஞானசாரவை எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு எனது சட்டைப் பையில் என்று கூறி நழுவிவிட்டார் அவர்.

நீதி மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக, இப்பாகமுவ பள்ளிவாயல் தாக்கப்பட்ட சம்பவத்தின்போது ஞானசாரவுடன் தொலைபேசியில் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதாக இணையங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஞானசாரவின் விவகாரத்தில் சட்டத்துறை மிகுந்த அசட்டைத் தனமாகவும் பொறுப்பற்றும் நடந்துள்ளது என்பதற்கு இதைவிட ஆதாரங்கள் தேவையில்லை. இதன் விளைவாக மக்கள் இறுதியாக நம்பிக்கை வைக்கும் நீதித் துறையும் நேர்மையாகச் செயற்படு வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது.

ஜூன் 20 இல் கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதவான் புத்திக சிறி ராகல நள்ளிரவில் பொலிஸாரினால் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டு மிக ரகசியமான பீ அறிக்கை அவரிடம் வழங்கப்பட்டது. நள்ளிரவு 12 மணிக்கு பயங்கர விடயம் எனக் கூறி தாக்கல் செய்யப்பட்ட பீ அறிக்கை தன்னிடம் வழங்கப்பட்டதாகவும் ஆனால், அடுத்த நாள் 21 ஆம் திகதி அவ்வறிக்கையை பொலிஸார் வாபஸ் வாங்கியதையும் நீதிபதி புத்திக கேள்விக் குள்ளாக்கியிருந்தார்.

நீதிமன்றத்தில் பொலிஸாரை விழித்து குற்றம் சாட்டிய அவர், பின்வருமாறு கூறியிருந்தார்.

> கொந்தளிப்பான ஓர் அரசியல் சூழலில் பொறுப்பு வாய்ந்த இடத்திலுள்ள ஜனாதிபதியும் பிரதமரும் இது குறித்து இதுவரை எந்தத் தெளிவான நிலைப்பாட்டையும் வெளியிடவில்லை. இது முஸ்லிம்கள் மத்தியில் ஒரு புறம் மிகுந்த அச்சத்தையும் இன்னொரு புறம் பாரிய ஐயத்தையும் உருவாக்குகின்றது.

''கலகொடஅத்த ஞானசாரவுக்கு எதிராக பொலிஸார் ஒரு பீ அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர். அந்த அறிக்கையை நான் பார்த்த போது அதிர்ந்து போனேன். நாடே பற்றி எரியும் அளவுக்கு அச்சுறுத்தும் வண்ணம் அதில் ஞானசாரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இருந்தன. எனினும் இன்று (21) இடையீட்டு மனுவினூடாக புதிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன. பீ அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஒரு விடயமேனும் இதில் கூறப்படவில்லை. அது ஏன்'' என பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார் நீதிபதி.

இது குறித்து நீதிபதிக்கும் பொலிஸுக்கும் இடையில் கடும் விவாதம் இடம்பெற்றது. நீதிமன்றத்தில் கருத்துரைத்த நீதிபதி, ''இவ்வாறான ஒருவருக்கு ஏன் பிணை வழங்கினீர்கள் என பொதுமக்கள் நீதிமன்றத்தைத் தூற்றுவார்கள். பொலிஸாரின் நடவடிக்கையால் நீதிமன்றமே தலைகுனிவை சந்திந்திக்கும். பொலிஸார் நடவடிக்கை குறித்து மிகவும் கவலையடைகின்றேன்'' எனவும் நீதிபதி புத்திக தெரிவித்தார்.

ஞானசாரவின் விடயத்தில் பிணை வழங்க முடியாத குற்றச்சாட்டுக்களை பொலிஸார் மீளப் பெற்று அவரை நீதிமன்றத்தால் விடுவிப்பதற்கு வேண்டுமென்றே செயல்பட்டுள்ளனர் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

ஞானசார தேரர் இப்போது பௌத்த, சிங்கள தேசியவாதத்தின் இரண்டாவது குறியீடாகப் பார்க்கப்படுகின்றார். அவரது கருத்தியல் நிறுவனமயமாகி விட்டது. அரசாங்கத்திலுள்ள சில சிரேஷ்ட அமைச்சர்கள் அவரைப் பாதுகாக்கின்றனர். சட்டம் அவரைக் கைதுசெய்வதற்குத் தயங்குகின்றது. பொலிஸாரின் அறிக்கையை மீறி நீதிமன்றத்தினால் எதுவும் செய்ய முடியாதுள்ளது.

மொத்தத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான இன ஆவேசத்தையும் வெறுப்புப் பிரச்சாரத்தையும் தடுத்து நிறுத்த முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. ஜனாதிபதி கூட சமீபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஞானசாரவின் கோரிக்கைகளை நியாயம் கண்டுள்ளார். அவற்றை ஞானசார முன்வைக்கும் தொனியும் விதமுமே தவறானது என்று சாதித்துள்ளார்.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது 1915 இனக்கலவரம் நமது நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியாதுள்ளது.

ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் இன்றைய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஸ்தாபகர், சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் விக்டர் ஐவன் சொல்வது போன்று 1915 கலவரத்தின்போது சிங்கள கராவ ஜாதியினர் முஸ்லிம்களை மீன் வெட்டுவது போன்று வெட்டிக் கொன்றனர். பொலிஸார் கையளித்த பீ அறிக்கையில், முஸ்லிம் குடும்பங்களைக் கொல்வேன் என்று ஞானசாரர் கூறியது பதிவுசெயிருந்ததாக நீதிபதி புத்திக சுட்டிக் காட்டுவதை இதனுடன் ஒப்பிடலாம்.

காக்கும் மௌனத்தின் அர்த்தம் என்ன? அல்லது அந்த கள்ள மௌனத்தின் உள்ளர்த்தம் என்ன?

கொந்தளிப்பான ஓர் அரசியல் சூழலில் பொறுப்பு வர்ய்ந்த இடத்திலுள்ள ஜனாதிபதியும் பிரதமரும் இது குறித்து இதுவரை எந்தத் தெளிவான நிலைப்பாட்டையும் வெளியிடவில்லை. இது முஸ்லிம்கள் மத்தியில் ஒரு புறம் மிகுந்த அச்சத்தையும் இன்னொரு புறம் பாரிய ஐயத்தையும் உருவாக்குகின்றது.

கடந்த கால் நூற்றாண்டில் முஸ்லிம் சமூகத்திற்குள்ளே ஏற்பட்ட வாழ்வியல் மாற்றங்கள் -குறிப்பாக அறபுக் கலாசார மயமாக்கம் சிங்களவர்கள் மத்தியில் ஒரு அறிவுபூர்வமற்ற அச்சத்தை (Phobia) உருவாக்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. இன்னொரு புறம், சில வரலாற்றுக் காரணங்களை முன்னிறுத்தி இலங்கை முஸ்லிம்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு விடுமோ என்ற உண்மையான அச்சம் (Genuine Fear) சிங்களவர்களுக்கு உள்ளது என்பதும் உண்மையே.

எனினும், சிங்களவர்கள் முஸ்லிம்களாகிய இரு தரப்பும் புரிந்து செயற்பட வேண்டி ஒரு மூன்றாவது அடிப்படை உண்மை தமக்கு முன்னால் உள்ளதை நாம் மனங்கொள்ள வேண்டும். இருக்கும் இவ்விரு நிலமைகளையும் மூன்றாவது சக்தியான சர்வதேச சூழ்ச்சிக் கோட்பாட்டாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். அதற்குரிய கருவியாகவே ஞானசார தேரர் பயன்படுத்தப் படுகின்றார். வெளிநாட்டு ஏகாதிபத்திய, பிரித்தாளும் சதிகாரர்களின் நிகழ்ச்சி நிரலில் சிக்கியுள்ள ஞானசாரரை சிங்கள சமூகத்திற்கு அடையாளம் காட்டுவதும் முக்கிய பணியாகும்.

நான்காவது பௌத்த பீடம் சொல்வது போன்று சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப் படுத்தினால் இந்நாட்டில் எந்தப் பிரச்சினையும் தோன்றாது என்ற கூற்றில் நிறைய உண்மைகள் உள்ளன. ஆனால், சட்டத்தின் ஆட்சி குறித்தோ ஞானசாரரைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலோ எதுவும் பேசாமல் இருக்கும் ஜனாதிபதியும் பிரதமரும் முஸ்லிம்களுக்குச் சொல்லும் செய்தி என்ன?

இது முஸ்லிம் சிவில் சமூக நிறுவனங்கள் கூர்ந்து ஆராய வேண்டிய கேள்வியாகும். முஸ்லிம் சமூகம் ஆவி தொலைத்து வாழ்வா, மரணமா என்ற ஜீவ மரணப் போரில் திணறுகின்றது. ஆனால், ஆட்சியாளர்களும் அரசியல் வாதிகளும் அசைவற்றுக் கிடக்கின்றனர். இந்த மெத்தனத்திற்கு உவமானம் தேடுவது கடினம். நல்லாட்சி அரசாங்கத்தின் ஆற்றாமை மற்றும் இயலாமைக்கு முஸ்லிம்கள் தொடர்ந்தும் பெரிய விலைகொடுக்க நேரிடுவதுதான் துரதிஷ்டமானது. இன்றுள்ள உடனடித் தேவை ஜனாதிபதியின் மௌனத்தைக் கலைப்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியஸ்ஸ் ஸக்திர் ஸக்கர்

மனித வாழ்வு, பட்டினி, அரசியல்

இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகம் இன்று கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றது. ஆபிரிக்காவில் வறுமை காரணமாக 20 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது. எமன், சோமாலியா, நைஜீரியா, தென் சூடான் போன்ற நாடுகளே பட்டினிச் சாவை கூடுதலாக எதிர்கொண்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுவதன் படி 20 மில்லியன் என்பது குறைந்ததொரு மதிப்பீடாகும். 2017 ஆம் ஆண்டு முகம்கொடுத்துள்ள இவ்வனர்த்த நிலைமை 2018ஆம் ஆண்டாகும் பொழுது மேலும் உக்கிரமடையலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமை இவ்வாறிருக்கையில் அமெரிக்க ட்ரம்ப் அரசாங்கம் வெளிநாட்டு உதவித் தொகையை 29 வீதத்தால் குறைத்துவிட நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதைய பட்டினி நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு அமெரிக்காவினால் கிடைக்கப்பெறுகின்ற மனிதாபிமான உதவித்தொகைகள் அதிகரிக்கப்பட வேண்டியதற்கு பகரமான அது குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அவசர நிலைக்கு முன்பாக கடுமையான முறையில் வெளிநாட்டு உதவித் தொகையை துண்டித்துவிட்டிருப்பதன் மூலம் அமெரிக்கா சர்வதேச ரீதியில் எவ்வாறு தலைமைத்துவத்தை செலுத்த முடிகிறது என அமெரிக்க ரிபப்லிகன் கட்சி செனட் சபை உறுப்பினரான சேன் கிரகம் கேள்வி எழுப்பியிருந்தார்.

'ஏனைய நாடுகள் இது விடயம் தொடர்பில் கூடுதல் பங்களிப்பை வழங்க வேண்டும்' என்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் நெக் பிளர்சன் அதற்கு பதிலளித்திருந்தார். இதற்கிடையில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் டேவிட் வில்ஸ்லி ''ஆறு மாத காலத்திற்குள் 6 லட்சம் குழந்தைகள் இறந்துள்ளதை நாம் பார்த்தோம். எதிர்வரும் வருடத்தில் இவ்வெண்ணிக்கை இரு மடங்காகலாம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பலம்பொருந்திய மனிதாபிமான உதவி நிறுவனத்தின் பிரதானி ''இவர்கள் பொறுப்புடனேயே இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். அவர்களுக்கு எந்தவொன்றையும் செய்ய முடியாமல் உள்ளது. இது தொடர்பில் உலக நாடுகள் அவதானம் செலுத்தாவிட்டால் இக்கடுமையான அனர்த்தம் குறித்த எதிர்வுகூறல் யதார்த்தமாய் போய்விடும்'' என தெரிவித்தார்.

உலகின் பலம்பொருந்திய 20 நாடுகளின் தலைவர்கள் ஜூலை 07-08 ஆம் திகதிகளில் ஹெம்பேர்க் நகரில் ஒன்றுகூடவுள்ளார்கள். அம்மாநாட்டில் ஆபிரிக்க நெருக்கடி குறித்து கூடுதல் அவதானம் செலுத்தப்படமாட்டாது என தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் இவ்விடயம் குறித்து அங்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

''இவ்வழிவுக்கு ஊழலும் யுத்தமுமே பொறுப்புச் சொல்ல வேண்டும். எமக்கு வேடிக்கை பார்க்க முடியாது. சமாதானம் உடனடியாக தேவைப்படுகின்றது. சமாதானம் கிட்டும் வரையில் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இவ்வழிவை தடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் அதை அவசரமாக பெற்றுக்கொள்ள வேண்டும்'' என ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத் திட்டம் மற்றும் உணவு விவசாயம் தொடர்பான நிறுவனங்களின் பிரதானிகளான வில்ஸ்மித், சில்வா ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

பட்டினி தொடர்பான நெருக்கடி தற்பொழுது அகதிகள் தொடர்பான பிரச்சினையாக விருத்தியடைந்துள்ளது. பல மில்லியன் கணக்கான ஆபிரிக்க மக்கள் தற்பொழுது போர், மற்றும் பட்டியிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு அகதிகளாக இடம்பெயர்ந்து வருகிறார்கள். இப்பிரச்சினை தொடர்பில் உலக வல்லரசுகள் தலையிடா விட்டால் இந்நிலைமை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு விருத்தியடையலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

30 வருட கால யுத்தத்திற்கு முகங்கொடுத்த இலங்கைக்கு அது தொடர்பில் அலாதியானதொரு அனுபவம் உள்ளது. யுத்த நிலைமைக்கு வழிகோலுகின்ற அரசியல் வாதிகள், ஊழல்வாதிகள் மற்றும் அவர்களது அடிவருடிகளின் ஆதிக்கம் தற்பொழுது அதிகரித்த வண்ணமுள்ளது. இது தொடர்பில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஆபிரிக்க நெருக்கடி தொடர்பில் உலக செல்வந்த நாடுகள் அவசரமாக அவதானம் செலுத்த வேண்டும். அதற்கு எமது நாட்டின் தலைமைகள் தூண்டுகோளாக இருக்க வேண்டும். மறுபுறத்தில் எமது நாட்டில் இந்நிலைமை தலைதூக்காமல் இருப்பதற்கும் பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைமைகள் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முஸ்லிம்களதும் தாயகம் இலங்கை



மறுமலர்ச்சி இயக்கம்

தேசிய அரசாங்கமொன்றுக்கு அவசியமான தேசிய உணர்வை கட்டியெழுப்பாமலேயே இலங்கை சுதந்திரம் அடைந்தது. தேசிய உணர்வைக் கட்டியெழுப்பாததால் வரக் கூடிய விளைவுகளை எமது தேசியத் தலைவர்கள் அறிந்திருக்கவில்லை. சில வேளைகளில் இனங்களுக்கு இடையில் சண்டையை மூட்டிவிடுபவர்களாகவும் இந்தத் தேசத்தலைவர்களே இருந்திருக்கிறார்கள்.

இவ்வாறான சண்டைகளை வேறு எத்தரப்பினர் தோற்றுவித்தாலும் அதிலே குளிர்காயும் நிலையிலேயே அவர்கள் இருந்தார்கள். இதனால் பிரச்சினைகள் பூதாகரமாகின. இனங்களுக்கிடையிலான இவ்வாறான பிரச்சினைகளின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயம், சிறுபான்மை இனமொன்று தாக்கப்படும்போது, தாக்குதலுக்குள்ளாகாத சிறுபான்மை, தாக்குகின்றவர்களுடன் இணைந்து கொள்ளுகின்றனர். சிங்கள, தமிழ் சமூகங்களில் உள்ள தாழ்ந்த சாதியினர் ஏதோவொரு வகையில் இந்த மோதலை வளர்க்கின்ற மறைந்த சக்தியாக விளங்கினர் என்பது அவதானிக்கப்பட்ட இன்னுமொரு அம்சம்.

சிறுபான்மை இனங்களின் செயற்பாடு

1948 சோல்பரி யாப்பு கைச்சாத்தாகி அதன் மைகாயமுன்னரேயே யாப்புக்கு முரணான வகையில் இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இந்திய வம்சாவழியினர் இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவளித்ததால் டீ.எஸ். சேனாநாயக்கவுக்கு போதுமான வாக்குப் பலத்தைப் பெற முடியாமல் போனதாலேயே (95 ஆசனங்களில் 42 ஐயே ஐ.தே.க. பெற்றது) அவரால் இந்த கைங்கரியம் நிகழ்த்தப்பட்டது. இந்தப் பிரச்சினையின் போது பிரதான தமிழ்க் கட்சியான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸுக்கு தெளிவான நிலைப்பாடெதுவும் இருக்கவில்லை. இந்தக் கட்சியின் எஸ்.ஜீ. செல்வநாயகம் மட்டுமே இதற்கு எதிரானவராக இருந்தார். பாராளுமன்றத்தில் இருந்த முஸ்லிம், பறங்கிய இனத்தவர்களும் இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமையை பறிப்பதற்கு ஆதரவாகவே இருந்தனர்.

இதற்குப் பின்னர் வந்த சிங்களம் மட்டும் சட்டத்தின் போது பாராளுமன்றத்தின் இரண்டு முஸ்லிம் உறுப்பினர்கள் (சீ.ஏ.எஸ்.மரிக்கார், சேர் ராஸிக் பரீட்) சட்டத்துக்கு சார்பாக வாக்களிக்க, மற்றும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் (மாகான் மாகார், எம்.ஈ.எச். மொஹமட் அலி, எம்.எம். முஸ்தபா) எதிராக வாக்களித்தனர். முஸ்லிம்கள் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு ஆதரவானவர்கள் என பதியுதீன் மஹ்மூத் முன்னெடுத்த பிரச்சாரத்தினால், இந்தப் பிரச்சினையின் போது முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் இருந்தார்கள் என்பதாகவே காட்டப்பட்டது.

தமிழ் ஐக்கிய முன்னணி தனிநாடு கேட்கும் வரைக்கும் அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருந்த தோட்டத் தொழிலாளர்களின் நாயகன் எஸ். தொண்டமான், அக்கட்சி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்ததுமே அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்ததோடு, தனிநாட்டுக்கான போராட்டம் ஆரம்பித்ததும் தோட்டத் தொழிலாளர்கள் இழந்த பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்வதற்கான துருப்புச் சீட்டாகவும் இதனைப் பயன்படுத்திக் கொண்டார். முஸ்லிம்களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிராக நின்றனர். இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கும் இலக்காகினர்.

சிறுபான்மைச் சமூகத்தின் மீதான நெருக்கடிகள்

சுதந்திர இலங்கையில் தமக்கு எந்தப் பெறுமானமும் கிடைக்காது எனக் கருதிய பறங்கியர் தாக்குதல்களுக்கு ஆளாக முன்னரே நாட்டை விட்டு வெளியேறி அவுஸ்திரேலியாவில் குடியேறினர். சுதந்திரத்துக்கு முன்னர் இலங்கையில் வசித்த சிறந்த சிந்தனைகளையுடைய சமூகமாக இவர்கள் விளங்கினர். லிபரல் பின்னணி கொண்ட ஒரே சமூகமாக இவர்கள் காணப்பட்டனர். சகல இனங்களையும் தழுவிய தேசிய அடையாளமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற கருத்தை பறங்கிய சமூகத்தில் லிபரல் சிந்தனையுடைய சார்ள்ஸ் லோரன்ஸ் (1829-71) என்பவரே முதலில் முன்வைத்தார்.

அக்காலத்தில் அரச நிர்வாகத்தின் முதுகெலும்பாக இவர்களே திகழ்ந்தார்கள். கல்வியறிவில் அவர்களது உயர்ந்த நிலையும், வெள்ளைத் தோலும், ஆங்கில மொழிப் பாவனையும் காரணமாக ஏனைய சுதேச இனங்களுக்கு அவர்கள் மீதான பொறாமை உணர்வு தோற்றம் பெற்றிருந்தது. இந்த நாட்டில் தமது எதிர்காலத்தை கணித்தறிந்து அவர்கள் குடிபெயர்ந்திருக்கா விட்டால் இன்று இந்த நாடு தற்போதைய நிலைமையை விட முன்னேறியிருப்பதோடு, ஆங்கில மொழியின் பாவனையும் பெருவாரியானதாக இருந்திருக்கும்.

இதனைத் தொடர்ந்து உரிமைகளை இழந்த அடுத்த சமூகம் மலையக இந்திய தோட்டத் தொழிலாளர்கள். இலங்கைத் தமிழர்கள் இவர்களை தமது இனமாக கணிக்கவில்லை. இவர்களுக்குப் பின்னர் இலங்கைத் தமிழர்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். 1956 இல் மொழி உரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து 70 களில் பல்கலைக்கழகத் தெரிவில் முன்னெடுக்கப்பட்ட இறுக்கமான முறைகளினால் தமிழ் இளைஞர்கள் கோபத்துக்குள்ளாக்கப்பட்டனர். 1983 இல் இது கலவரமாக வெடித்தது. இதுவே தமிழ் இளைஞர்களை தனி நாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளியது. இதனால் தமிழர்கள் மட்டுமன்றி முழு நாடும் அழிவுக்குள்ளானது.

தமிழர்களை யுத்தத்தில் தோல்வி அடையச் செய்ததை தமிழர்களுக்கு புகட்டிய தகுந்த பாடமாக சிங்களவர்கள் கருதுகிறார்கள். இதுபோன்ற பாடமொன்றை முஸ்லிம்களுக்கும் புகட்ட வேண்டுமென்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. 2014 இல் நடந்த அளுத்கம தாக்குதல்கள் இதனை இலக்காகக் கொண்டு அமைந்ததாகக் கருத முடியும். எதிர்பார்த்தது போல அது நாடு முழுவதும் பரவி பாரிய சேதத்தினை ஏற்படுத்தாததனால் சிங்கள மக்களின் சிந்தனையில் வக்கிரத்தை விதைக்கும் விதமான சிந்தனைப் போராட்டங்கள் திட்டமிட்ட அடிப்படையில் தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

ஒன்றன்பின் ஒன்றாக நடந்து வரும் இந்தச் செயற்பாடுகள் முஸ்லிம், சிங்களம் என்ற பேதமின்றி மொத்தமாக நாட்டுக்கே அழிவைத் தருவதாக அமையும் என்றிருந்தாலும், சிறியதொரு தீவிரவாதக் குழுவின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக மக்களது அபிப்பிராயங்கள் ஒன்று திரட்டப்படாமல் இருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம், பாரிய அழிவுகளின் பின்னரும் இலங்கையில் தேசிய உணர்வு கட்டியெழுப்பப்படாமையும் இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது கொள்கை ரீதியான தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுப்பதற்கான துணிச்சல் தேசியத் தலைமைகளிடம் இல்லாதிருப்பதுமாகும்.

அநகாரிக தர்மபால

இனப்பாகுபாடு நவீன யுகத்திலேயே உருவாகியது. இதனை சிங்களவர்களிடம் விதைத்ததில் அநகாரிக தர்மபால பிரதானமானவர். பிரித்தானியருக்கு எதிராக துணிச்சலுடன் செயற்பட்டவராக இவர் இருந்தாலும், இலங்கையின் சிறுபான்மைக்கெதிராக சிங்களவர்களைத் தூண்டுகின்ற செயற்பாடுகளையும் இவர் முன்னெடுத்தார்.

சிங்களவர்களை உலகின் சிறந்த சிருஷ்டிகளாகவும் பண்டைய பண்பாடுகளுக்கு முன்னோடிகளாவும் எடுத்துக் காட்டினார். ஏனைய இனத்தவரை நாட்டுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லாத பரதேசிகளாக சித்திரித்தார். முஸ்லிம்கள் தொடர்பிலான அவரது பிரபலமான கூற்றுக்கள் பலவுள்ளன. பிரித்தானியருக்கு ஜெர்மனியர்கள் போலவே சிங்களவர்க்கு முகம்மதியர்.

அவர்கள் இனம், மதம் ஆகியற்றில் மட்டுமன்றி மொழியிலும் அந்நியர்களே என்ற கூற்றும், [illegible] இலங்கையில் காலடி வைத்தது முதல் சிங்களவர்களின் வர்த்தகம், இருப்பு, பண்பாடுகள் அனைத்தும் செத்து மடிந்தன. இனி சிங்களவர்கள் மரக்கலயர்களினதும் தமிழர்களினதும் கால்களில் வீழ வேண்டியது தான் என்ற கூற்றும் சில எடுத்துக் காட்டுகளாகும். ஹம்பயா (முஸ்லிம்கள்) விடம் உள்ள வர்த்தகத்தை சிங்களவர்கள் கைப்பற்ற வேண்டும் என்றும் அவர் போதித்தார்.

தர்மபாலவின் இந்தக் கருத்துக்கள் சிங்களவர்களுக்கு இதமானதாக இருந்தது. அவரது ஆக்ரோஷமான பேச்சுக்களினால் கவரப்பட்ட இவர்கள், படிப்படியாக தர்மபாலவின் பக்கம் சாய்ந்தார்கள். பத்திரிகைகளையும் புத்தகங்களையும் வாசிப்பதற்கு மக்கள் ஆர்வம் காட்டிய வேளையிலேயே இவரது பிரச்சாரங்கள் அமைந்ததனால் இவரது காலத்தில் வாழ்ந்த சிங்களப் பத்திரிகையாளர்களும் நூலாசிரியர்களும் இவரது தொண்டர்கள் போலவே செயற்பட்டனர்.

அப்போதிருந்த அரசியல்வாதிகளும் தர்மபாலவின் பக்தர்களானார்கள். 1915 இல் மூண்ட சிங்கள முஸ்லிம் கலவரம் தர்மபாலவினாலும் அவரது அரசியல் சிஷ்யர்களினாலும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தூவிவிடப்பட்ட வக்கிரத்தின் அறுவடையே.

இன்றைய சிங்கள இனவாதத்தில் புலப்படக் கூடிய அனைத்து பிரதான அடையாளங்களையும் தர்மபால சிந்தனையில் காணமுடியுமாக இருப்பதன் மூலம், சிங்கள இனவாதம் என்பது தர்மபாலவினால் சிங்களவர்களுக்கு வாரிசாகக் கொடுக்கப்பட்டதாகவே கருத வேண்டியிருக்கிறது. இந்த வகையில் சிங்களவர்களின் சிந்தனையிலும் மனப்பாங்கிலும் இன்றுவரை தாக்கம் செலுத்தியுள்ள சிந்தனையாளராக தர்மபாலவை கருத முடியும். அவரது தமிழ், முஸ்லிம் விரோதக் கருத்துக்களே இன்றுவரை சிங்கள சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

மறுமலர்ச்சி இயக்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற ஒய்வுநிலை அதிபரொருவர், சிங்கள

மக்களால் மதிக்கப்படக் கூடிய தர்மபாலவை விமர்சிப்பது மறுமலர்ச்சி இயக்கத்துக்குப் பொருத்தமானதா என என்னிடம் வினவினார். சிங்களவரது வர்க்கவாதச் சிந்தனையில் அதிக தாக்கம் செலுத்திய சிந்தனையாளர் தர்மபால என்றிருந்தால், ஆக்கபூர்வமாக அவரது சிந்தனைகளை விமர்சிக்காமல் சிங்களவரிடம் மறுமலர்ச்சியை எப்படி எதிர்பார்ப்பது என்று நான் திருப்பிக் கேட்டேன்.

சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமன்றி முஸ்லிம்கள், தமிழர்கள் மத்தியிலும் வர்க்கவாத சிந்தனை கொண்டவர்கள் இருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்று வரை அடையமுடியாமல் போயிருக்கின்ற, தேசிய அரசாங்கமொன்றை உருவாக்கி இலங்கையர் என்ற தேசிய உணர்வைக் கட்டியெழுப்புகின்ற பணியைச் செய்வதற்கு, சகல தரப்பிலும் உள்ள வர்க்கவாதச் சிந்தனைகள் களையப்பட்டு, நீதியாக, பன்மைத்துவ ரீதியாக, தர்க்கரீதியாகச் சிந்திக்கின்ற நிலைக்கு மக்களின் சிந்தனை நகர்த்தப்பட வேண்டும்.

இலங்கையில் முஸ்லிம்கள்

சிங்களத் தீவிரவாதிகளின் தற்போதைய இலக்காக முஸ்லிம்கள் ஆகிவிட்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் மீது குரோதத்தை விதைப்பதற்காக சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வருகின்ற உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்களை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. சிங்களப் பெண்களுக்கு மார்புப் புற்றுநோயை ஏற்படுத்தும் மார்புக் கச்சைகள், சிங்களப் பெண்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் உள்ளாடைகள் முஸ்லிம் கடைகளில் விற்கப்படுவதாக முஸ்லிம்களின் வர்த்தகத்தை சிதைக்கும் நோக்குடன் பரப்பப்படும் பிரச்சாரங்கள் புத்திக்கு ஒவ்வாதவெறும் கட்டுக் கதைகளாகவே கருதப்பட முடியும். இந்த இடத்தில் முஸ்லிம்கள் யார், இலங்கையில் அவர்களது வரலாறு எத்தகையது என்பதைப் பார்ப்பது முக்கியமானது.

செனரத் பரணவிதானயின் கருத்துப்படி, அனுராதபுர யுகத்தின் இறுதிக் காலங்களிலும் மகாதித்த போன்ற கடலையண்டிய பிரதேசங்களில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கிறார்கள். (இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாறு முதலாம் பாகம் பக்.370)

(பக்.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எஸ். முஹம்மத் கம்பஹா மாவட்டத்தின் கஹட்டோவிட்ட பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை வரகாபொல பாபுல் ஹஸன் மகா வித்தியாலயத்திலும் கற்றுள்ளார். தனது கலைமானிப் பட்டத்தினை பேராதனை பல்கலைக்கழகத்தில் பூர்த்திசெய்துள்ள இவர், 2008 ஆம் ஆண்டு 'பொது நிர்வாகத் துறையில்' இந்திய காமராஜா பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தை பூர்த்திசெய்துள்ளார்.

1984 இல் பட்டதாரி ஆசிரியராக திஹாரிய அல்அஸ்ஹர் பாலிகாவில் இணைந்த இவர், 1990 ஆம் ஆண்டு கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, 1992 இல் பொத்துவில் மத்திய கல்லூரியில் அதிபராக நியமனம் பெற்றார். அதனைத் தொடர்ந்து சில காலங்களின் பின் நீர்கொழும்பு அல்பலாஹ் மகா வித்தியாலயத்தில் அதிபராக மாற்றம் பெற்றுள்ளார்.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உதவிப் பரீட்சை ஆணையாளராக நியமனம் பெற்று, 2000 ஆம் ஆண்டு பிரதிப் பரீட்சை ஆணையாளராகவும் 2010ல் பரீட்சை ஆணையாளர் என்ற அந்தஸ்தையும் பெற்றார். பரீட்சைத் திணைக்களத்தில் 20 வருடங்களுக்கும் அதிக கால அனுபவங்களைக் கொண்டுள்ள இவர், 2017.05.05 ஆம் திகதி ஓய்வுபெற்றார். அவர் மீள்பார்வைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி இங்கு தரப்படுகிறது.

- சந்திப்பு: ஹெட்டி ரம்ஸி

மாணவர்களது விடயத்தில் அதிபர்களினதும், நிர்வாகிகளினதும் பங்களிப்பு குறைவாக உள்ளது

- **இலங்கை பரீட்சை திணைக்களத்தில் 20 வருடங்களுக்கும் அதிககாலம் பரீட்சைகள் ஆணையாளராக கடமையாற்றியுள்ளீர்கள். உங்களது அவதானத்தின் படி, முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி நிலை மற்றும் பெறு பேற்று அடைவுமட்டங்கள் சாதகமானதொரு போக்கில் உள்ளதென கருதுகிறீர்களா?**

ஒவ்வொரு வருடமும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்டதன் பின்னர் நான் தனிப்பட்ட முறையில் முஸ்லிம் பாடசாலைகளின் பெறுபேறுகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுள்ளேன். ஐந்தாம் தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை தனியாக முஸ்லிம் பாடசாலைகள் என்பதாக எடுத்து ஆய்வு செய்ய முடியாது. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை பொறுத்தவரையில் சகல பாடசாலைகளினதும் பாடத்திட்டம் ஒன்றென்பதால் அதனை இலகுவில் ஆய்வு செய்ய முடியும்.

இவ்வாறு ஆய்வுசெய்த வகையில் ஏனைய இனங்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி நிலை ஓரளவு கீழ் நிலையில் இருப்பதை அவதானிக்க முடிந்தது. என்றாலும் பிரதேச ரீதியில் பார்க்கும் போது சில பாடசாலைகளின் பெறுபேறுகள் மேல்நிலையில் உள்ளது. உதாரணமாக கிழக்கில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் பெறுபேறுகள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றன. அதே நேரம் அனுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களைப் பார்த்தால் அந்நிலை குறைவாக உள்ளது. விஷேடமாக கொழும்பு மாவட்டத்தை பொறுத்த வரையில் முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது.

உதாரணமாக ஆனந்த கல்லூரி, சாஹிரா கல்லூரி, இந்துக் கல்லூரி, விசாகா வித்தியாலயம், முஸ்லிம் மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, ரோயல் கல்லூரி ஆகிய பாடசாலைகள் ஒரே மட்டத்திலுள்ள பாடசாலைகள் என்றே சமூகம் கருதுகிறது. ஆனால் அப்படியில்லை. பெறுபேறுகள் அடிப்படையில் முஸ்லிம் பாடசாலைகள் கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றன.

கொழும்பில் மொத்தமாக க.பொ.த சாதாரண தரம் உள்ள பாடசாலைகள் 364 உள்ளன. அதில் 19 முஸ்லிம் பாடசாலைகள் காணப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டு பெறுபேறுகளின் படி கொழும்பு மாவட்டத்தின் மொத்த பாடசாலைகளில் முஸ்லிம் மகளிர் கல்லூரி 62 ஆவது இடத்தில் உள்ளது. முஸ்லிம் பாடசாலைகளுள் அது முதலாம் இடம்.

பொதுவாக முஸ்லிம் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஆண்களின் கல்வி அடைவு மட்டத்தை விட பெண்களின் அடைவு மட்டமே உயர் நிலையில் காணப்படுகிறது. கொழும்பு மாவட்டத்தின் பெறுபேறுகள் அடிப்படையில் முதலாம் இடத்தில் முஸ்லிம் மகளிர் கல்லூரியும் இரண்டாம் இடத்தில் ஹைரியா கல்லூரியும் உள்ளது. 3ம் இடத்தில் கலகெதர மகா வித்தியாலயம். அது சிறியதொரு பாடசாலை. 4ம் இடத்தில் மொரட்டுவ அரபா வித்தியாலயம். அதுவும் சிறியதொரு பாடசாலை. 5ம் இடத்தில் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி உள்ளது.

சாஹிரா கல்லூரி 6 ஆம் இடத்தில் உள்ளது. (மொத்தப் பாடசாலைகளில் இது 181 ஆவது இடமாகும்). 2010 ஆம் ஆண்டு சாஹிரா கல்லூரியிலிருந்து 341 பேர் சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளார்கள். அதில் 317 பேரே

ஏ.எஸ். முஹம்மத்
ஓய்வுபெற்ற பரீட்சைகள் ஆணையாளர்

பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்கள். அதில் 158 மாணவர்கள் உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளார்கள். 10 மாணவர்கள் சித்தியடையவில்லை. இதில் ஒரு மாணவரும் 8 A சித்திகளைப் பெறவில்லை.

ஆனால் அதே வருடம் கௌதமீ வித்தியாலத்தில் 317 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி, அதில் 310 மாணவர்கள் உயர்தரத்திற்குச் சித்தியடைந்துள்ளார்கள். அதில் 67 பேர் 9 A சித்திகளைப் பெற்றுள்ளார்கள். எனவே முஸ்லிம் பாடசாலைகளில் 50 வீதமான மாணவர்களேனும் உயர்தரம் கற்க தகுதிபெறவில்லை. ஆனால் சிங்களப் பாடசாலையில் 90 வீதம் தகுதி பெற்றுள்ளார்கள்.

இரண்டு பாடசாலைகளுக்கும் ஒரே வயதுடையவர்களே செல்கிறார்கள். அவர்களுக்கு ஒரே பாடத் திட்டமே போதிக்கப்படுகின்றது. ஒரே பரீட்சையே நடாத்தப்படுகின்றது. மொழி மாத்திரமே வித்தியாசப்படுகின்றது. இரண்டு பாடசாலைகளும் அரசாங்கப் பாடசாலைகள். ஆனால் பெறுபேறுகள் மாத்திரம் ஏன் வித்தியாசப்படுகின்றது?

முதலாம் இடத்திலுள்ள முஸ்லிம் மகளிர் கல்லூரியில் 2010 ஆம் ஆண்டு 267 மாணவிகள் சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளார்கள். அதில் 240 பேரே பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்கள். ஒரு மாணவி மாத்திரமே 9 A சித்தியை பெற்றுள்ளார். இதில் 185 (77.1) பேர் மாத்திரமே உயர்தரத்திற்கு தகைமை பெற்றுள்ளார்கள். அதே நேரம் தேவி பாலிகா வித்தியாலயத்தில் 244 பேர் பரீட்சைக்கு விண்ணப்பித்து, 237 பேர் பரீட்சைக்குத் தோற்றி, 236 (99.6) பேர் சித்தியடைந்துள்ளார்கள். இதில் 82 மாணவிகள் 9 A சித்தியை பெற்றுள்ளார்கள். இதுவே எமது பாடசாலைகளின் நிலமை. இதிலிருந்து எப்படி மீள வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும்.

- **இதற்கான காரணம் எதுவாக இருக்கலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

வளப் பற்றாக்குறை என்று சொல்ல முடியாது. சகல பாடசாலைகளிலும் போதிய வளங்கள் காணப்படுகின்[illegible] ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. அதை மறுக்க முடியாது. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் முஸ்லிம் பாடசாலைகளுக்கு குறைவாகவே உள்ளார்கள்.

ஆனாலும் அதை ஈடுசெய்வதற்கு மாணவர்கள் குறிப்பிட்ட பாடங்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்கிறார்கள். கொழும்பில் டியூசன் வகுப்புக்களுக்கு போகாத மாணவர்கள் இல்லையென்றே கூற வேண்டும். ஆனால் அடைவு மட்டம் குறைவு. இதற்கான முக்கிய காரணமாக நான் கருதுவது என்னவெனில், பாடசாலைகளில் சரியான பின்னூட்டல் நடப்பதில்லை என்பது. மாணவர்களது விடயத்தில் அதிபர்களினதும் ஏனைய நிர்வாகிகளினதும் பங்களிப்பு குறைவாக உள்ளது.

ஒவ்வொரு பரீட்சையும் முடிந்ததன் பின்னர் அப்பெறுபேறுகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை அழைத்து அதற்கான காரணத்தை வினவ வேண்டும். சிங்களப் பாடசாலைகளில் ஒரு ஆசிரியரை ஒரு பாடத்திற்கு பொறுப்பாக நியமித்தால் அவர் எனது பாடத்தில் பெறுபேறு குறைந்துவிடுமோ என்ற அச்சத்தில் மேலதிக வகுப்புக்களைச் செய்தாவது பெறுபேறுகளை உயர்த்தப் பாடுபடுவார். ஆனால் அந்நிலைமைகள் எமது பாடசாலைகளில் இல்லை.

அண்மையில் முக்கியமானதொரு பாடசாலையின் கணித ஆசிரியர் என்னைச் சந்தித்து இம்முறை நான் கற்பித்த பாடத்தின் பெறுபேறுகள் மோசமாக உள்ளது என்றும் தனக்கு அவ்வகுப்பறை 6 மாதங்களுக்கு முன்பாகவே தரப்பட்டது என்றும் பாடசாலையின் அதிபர் பெறுபேறு ஏன் மோசமாக உள்ளது என்று இதுவரையில் வினவவில்லை என்றும் கூறி கவலைப்பட்டார். அதிபர் அடிக்கடி கேள்விகளை கேட்டு ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் போதே எமக்கொரு ஊக்கம் கிடைப்பதாகவும் அவர் கூறினார். இதுவே இன்றைய பெரும்பாலான முஸ்லிம் பாடசாலைகளின் நிலையாக உள்ளது.

பொதுவாக கொழும்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் மாணவர்கள் கற்பதில்லை என்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால் அது அப்படியில்லை. மாணவர்களின் ஆர்வத்தை மேல் நோக்கிக் கொண்டு போகக் கூடிய சக்தி ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டும். மாணவர்களின் குறை நிறைகளை இனங்கண்டு பெற்றோரையும் அழைத்து விடயத்தை அடிக்கடி சொல்ல வேண்டும். இந்நிலை இன்று பெரும்பாலான பாடசாலைகளில் இல்லை. இதுவும் ஒரு குறை பாடாகவே உள்ளது.

சமூகத்திலுள்ள அமைப்புக்கள், இயக்கங்கள் பாடசாலை மாணவர்களுக்கு செய்யும் உதவிகள் சரியான மட்டத்தில் தேவையான முறையில் செல்வதில்லை. சில போது பாடசாலையில் சித்தியடைந்த ஒரு சில மாணவர்களுக்கே உதவுகிறார்கள். சித்தியடையாத பெரும்பாலான மாணவர்களும் தங்களை உற்சாகப் படுத்த வேண்டும். பரிசு தர வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். அவ்வாறு அவர்களுக்கும் உதவும் போது அம்மாணவர்கள் ஏனைய பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றை பெற முயற்சிப்பார்கள். அதற்கு எமது சமூக அமைப்புக்களும் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட்டால் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்தலாம்.

- **ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையையும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையும் எதிர் நோக்கிக் காத்திருக்கும் மாணவர்களுக்கு நீங்கள் வழங்கும் ஆலோசணைகள் என்ன?**

உயர்தரப் பரீட்சை என்பது மாணவர்களின் வாழ்வை நிர்ணயிக்கும் பரீட்சை. அடுத்த கட்ட நடவடிக்கைகளை தீர்மானிக்கும் பரீட்சையாகவும் இது உள்ளது. ஐந்தாம் தரப் பரீட்சையும் உயர் தரப்பரீட்சையும் போட்டிப் பரீட்சையாகவே உள்ளன. பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு தேவையான வழிகாட்டலைக் கொடுக்க வேண்டும்.

தற்பொழுது படித்த பெற்றோர்களே அதிகம். அதனால் பிள்ளைகளுக்கு இலகுவாக கற்பிக்க முடிகிறது. ஐந்தாம் தரப் புலமைப் பரிசிலைப் பொறுத்தவரை 3,4,5 ஆம் வகுப்புக்களின் பாடத் திட்டங்களிலிருந்தே வினாப் பத்திரம் தயாரிக்கப்படுகிறது. ஆகவே அக்கலைத் திட்டத்தை NIE இல் பெற்றுக்கொள்ளலாம். அல்லது இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

(பக்.14)

எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

பெருநாள் தொழு(ம்) திடல்

இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் மிதவாத சிந்தனை கொண்டவர்கள், அவர்கள் தீவிரவாதிகள் அல்ல என அமைச்சர் ராஜித சேனாரத்ன ஊடகவியலாளர் மாநாடொன்றில் தெரிவித்திருந்தார். ரமழானின் பின்னர் கடனைத் திருப்பிக் கேட்டதற்காக வாள் வெட்டுக்கு இலக்காகிய ஒருவரை அரச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது, காயத்தைப் பற்றிக் கேட்டறிந்த வைத்தியர், நீங்களெல்லாம் வெட்டுக் குத்து வேலைகளில் ஈடுபட மாட்டீர்களே என ஆச்சரியமாகக் கேட்ட சம்பவமொன்றும் முஸ்லிம் கிராமமொன்றில் நடந்துள்ளது.

முஸ்லிம்கள் தங்களுக்குள் சண்டைபிடித்துக் கொள்ளும் சமூகமல்ல என்ற நல்லெண்ணம் இலங்கை மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது என்பதற்கு இது போன்ற பல எடுத்துக் காட்டுக்களை முன்வைக்க முடியும். இது தான் இலங்கையில் முஸ்லிம்களின் இருப்புக்கான அச்சாணியாகவும் திகழ்கிறது. ஆனாலும் இந்தச் சூழமைவைப் பாதுகாத்துக் கொள்வதில் இலங்கை முஸ்லிம்கள் எவ்வளவு கரிசனை காட்டுகிறார்கள் என்பது தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே உள்ளது.

இலங்கையில் முஸ்லிம்கள் எடுத்ததற்கெல்லாம் சண்டை பிடித்துக் கொள்ளுகின்ற ஒரு காலம் இருந்தது. ஆனாலும் கல்வியறிவிலும் மார்க்க உணர்விலும் இலங்கை முஸ்லிம்களிடம் ஒப்பீட்டளவில் காணப்படும் ஆரோக்கியமான நிலை இந்த நிலை பரவாயிலும் தொடராமலும் பாதுகாத்தது. தற்காலச் சூழலில் முன்பு போன்ற சில்லறைச் சண்டைகள் கேள்விப்படுவது அரிதாகவே உள்ளது.

இவ்வருட நோன்புப் பெருநாள் தொழுகையை மையமாக வைத்து சில இடங்களில் வேதாளம் முருங்கை மரம் ஏற முயற்சித்துள்ளது. பெருநாள் தொழுகையை பள்ளிவாசலில் தொழாமல் திடலில் தொழுவது தொடர்பில் சில இடங்களில் பிரச்சினை மூண்டுள்ளது.

பெருநாள் தொழுகையை எங்கே தொழுவது என்பது விடாப்பிடியாக கருத்துக் கொள்ள வேண்டிய விடயம் அல்ல என்பதனை இந்த முறை பெருநாள் தொழுகையின் போது பல இடங்களிலும் பெய்த மழை மூலமாக அல்லாஹுத்தஆலா உணர்த்தியிருக்கின்றான். திடலிலேயன்றி நபிகளார் பெருநாள் தொழுததில்லை. பெருநாள் தொழுகையை ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக ஊரிலுள்ள எல்லோரும் ஒரு திடலில் இணைந்து தொழுவது தான் நபிவழி போன்ற பல கருத்துக்களை இந்த மழை மாற்றிக் கொள்ளச் செய்தது. திடலில் ஒன்று கூட வேண்டும் என்று கூறியவர்களையெல்லாம் பள்ளிவாசலுக்கு அனுப்பி வைத்தது மழை. குறிப்பிட்ட கருமம் நடக்க வேண்டும் என்பது தான் முக்கியமேயொழிய அதற்கான வழிமுறைகளில் பல அட்ஜஸ்மன்டுகள் செய்யப்படலாம் என்பதனைத் தான் இந்த நிகழ்வுகள் உணர்த்தியிருக்கின்றன. இதற்கு மாற்றமாக இது தான் ஸுன்னா, இதனை மீறக் கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்த சில இடங்களில் மழை பெய்ததைத் தொடர்ந்து மக்கள் விரண்டோடியதனால் பெருநாள் தொழுகை அல்லோலகல்லோலமாகியுள்ளது.

பெருநாள் தொழுகையை பள்ளிவாசலில் தான் தொழ வேண்டும் என்று விடாப்பிடியாக இருப்பவர்களும் சில அட்ஜஸ்மன்டுகளுக்கு வரவேண்டியிருக்கிறது. பெருநாள் தினத்திலே ஊரிலுள்ள அனைவரும் ஒன்று கூட இயலுமான அளவில் பள்ளிவாசல்கள் இருப்பதில்லை. இதற்காக பெருநாள் தொழுகை ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் பல இடங்களில் தொழுவிக்கப்படுகின்றன. இதனால் பெருநாள் தினத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்று கூடல் நிகழ்வு பெரும்பாலும் நடப்பதில்லை. பெருநாள் தினக் குத்பாவும் பெண்களுக்குக் கிடைப்பதில்லை. இதற்காகவென்று பள்ளிவாசலைப் பெருப்பித்துக் கட்டுவதும் பொருத்தமானதாக இல்லை. வாராந்த ஜும்ஆத் தொழுகைக்கென பெருப்பித்துக் கட்டப்பட்ட பள்ளிவாசல்கள் ஏனைய ஆறு நாட்களிலும் வெறுமையாகக் கிடக்கையில், வருடத்துக்கு இரண்டு முறை வருகின்ற பெருநாட்களுக்காக பள்ளிவாசல்கள் கட்டப்படுமாக இருந்தால் நிலைமை என்னவாக இருக்கும்?

இந்த வகையில் ஒன்று கூடலை நோக்கமாகக் கொண்ட பெருநாள் தொழுகையையும் பிரவினைக்குப் பயன்படுத்தாமல் சமூகம் கவனம் எடுக்க வேண்டும். இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்தச் சவால்களை வென்று நாட்டுக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய நிலைமைக்கு முஸ்லிம்களை தயார்படுத்த வேண்டிய அவசரப் பணி இலங்கை முஸ்லிம்களுக்கு முன்னால் உள்ளது.

அதேபோல பல்வேறுவிதமான சீரழிவுகளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிற நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பணி நமக்கு முன்னால் விரிகிறது. திடீரா, பள்ளியா என்கின்ற ஆராய்ச்சிகளை விட டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான இஸ்லாமிய வழிமுறை, நபிகளார் எப்படி குப்பைகளை அகற்றினார்கள் என்கின்ற நடைமுறை, தனிமனிதனின் குப்பை கொட்டும் செயற்பாட்டினால் சமூகம் பாதிப்படைகின்றது என்றால் அதற்குரிய "கவுரு" என்ன, குப்பைகளை முறையாக அகற்றுதல் ஜாஇயா, ஹராயாவா, தனது வீட்டுச் சூழலில் உள்ள குப்பை மேட்டினாலும் சாக்கடையினாலும் நுளம்பு பெருக்கெடுத்து, அதனால் பக்கத்து வீட்டுக்காரன் உயிரிழந்தால் நுளம்பு பெருகுவதைத் தடுக்காத குற்றத்துக்காக அவனுக்கு கொலைத் தண்டனை வழங்க முடியுமா என இப்படியான தீர்வுகளைத் தரும் வகையிலும் உலமாக்களின் உரையாடல் அமையுமாக இருந்தால், இந்த மார்க்கத்தை இந்த நாடு தலைமேல் வைத்துக் கொண்டாடும். அப்போது மக்களை அழிவிலிருந்து காத்திடல் தான் எமது முக்கிய பேசுபொருளாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரேந்திர மோடி இஸ்ரேலுக்கு சென்ற முதல் இந்திய அரச தலைவர்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இந்திய பிரதமர் ஒருவர் இஸ்ரேலுக்கு மேற்கொண்டுள்ள முதலாவது உத்தியோக பூர்வ விஜயம் என்ற வகையில் இதனை முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டு அரபு மற்றும் பலஸ்தீன ஆதரவுப் போக்கைக் கைக்கொண்ட நாடாகக் காணப்பட்டது. இந்நிலையில் பாரம்பரிய இந்திய வெளிநாட்டுக் கொள்கையை மோடி மீறியிருப்பது இந்திய வெளிநாட்டுக் கொள்கைகளிலும் ஆர். எஸ்.எஸ். இனவாத இயக்கம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைக் காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுடன் இஸ்ரேல் முழுமையான இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தி 25 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், மோடியின் இந்த இரு நாள் விஜயம் இரு தரப்பு உறவுகளில் ஒரு மைல் கல்லாகப் பார்க்கப்படுகிறது.

மோடியை வரவேற்றுப் பேசிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெடன்யாஹு தனதுரையில், இந்தியாவைத் தமது பாரம்பரிய நண்பர் என விளித்துப் பேசியிருந்தார். இக்கருத்தையே மோடியும் தனதுரையிலும் வழிமொழிந்திருந்தார்.

இவ்விஜயத்தின் போது சுமார் 2.5 பில்லியன் டாலர்களில் இரு தரப்புக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன. உலகின் மிகப் பெரும் ஆயுத இறக்குமதியாளரான இந்தியாவின் மிகப் பெரும்பான்மையான ஆயுதங்கள் இஸ்ரேலிலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்திய செல்வத்தை இஸ்ரேலுக்குத் தாரைவார்க்கும் ஒப்பந்தங்கள் இதுவென இந்திய சுதந்திர ஊடகவியலாளர்கள் பலரும் விமர்சித்திருந்தனர்.

கடந்த மே மாதம் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த பலஸ்தீன அதிகார சபை அதிபர் மஹ்மூத் அப்பாஸை இந்தியப் பிரதமர் மோடி இஸ்ரேலுக்கான இவ்விஜயத்தின் போது சந்திக்கவில்லை என்பதை சர்வதேச ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

வெனிசுவேலாவில் வலுக்கும் அதிகாரப் போட்டி

ஹியூகோ சாவேசின் பின்னரான வெனிசுவேலாவின் அரசியல் நிலைமைகள் இடதுசாரிகளை விட்டும் ஏகாதிபத்திய முகவர்களை நோக்கி மெல்ல மெல்ல சரிந்து வருகின்றன. சாவேஸின் மரணத்திற்குப் பிறகு பதவியேற்ற அவரது நெருங்கிய சகபாடியான நிகலஸ் மதுரோ தொடர்ந்தேர்ச்சியான சவால்களை எதிர்க்கட்சியினரிடமிருந்து சந்தித்து வருகின்றார்.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இளம் தலைமுறையினரிடத்தில் வலுத்து வரும் நிலையில் உச்ச கட்டமாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சட்டமா அதிபருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் செல்லுபடியாகாதென அறிவித்துள்ளார். இதன் காரணமாக அவருக்கும் அதிபர் மதுரோவுக்கும் இடையிலான அதிகாரக் கயிறிழுப்புக்கள் முழுமையாக வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

வெனிசுவேலா அதிபர் மதுரோவுக்கும் சட்டமா அதிபர் லூசியா ஓர்டெகாவுக்கும் இடையில் உட்பூசல்கள் இருந்து வந்த நிலையில் கடந்த ஜூன் 29 வியாழனன்று மர்மமான ஹெலிகொப்டர்கள் அதிபர் மாளிகை மீது தாக்குதல் நடாத்தின. இதன் போது காயங்கள் எதுவுமின்றி நிகலஸ் மதுரோ உயிர் தப்பினார். இச்சதித்திட்டம் குறித்த தகவல்கள் வெளிவந்த போது அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் சட்டமா அதிபரை நோக்கிப் பாய்ந்ததுடன் உடனடியான பதவி நீக்கத்தையும் எதிர்கொண்டிருந்தார். எனினும் தனது சட்ட ரீதியான உரிமைகள் மீறப்படுவதாகவும் அரசாங்கம் தொடர்ந்தும் தவறான பாதையிலேயே செல்வதாகவும் 59 வயதான ஓர்டெகா ஊடகங்களுக்குத் தெரிவித்தார். குறித்த மர்ம ஹெலிகொப்டர் தாக்குதல் நிகொலோஸ் மதுராவின் நாடகம் எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

சர்வதேசப் பார்வை

புதிய வளைகுடா யுத்தமொன்றுக்கு தூபமிடுகின்றதா அமெரிக்கா?

டொனால்ட் ட்ரம்பின் கடந்த மே மாத சவூதி விஜயத்தின் பின்னர் வளைகுடா அரசியல் தளத்தில் சடுதியான பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக கட்டாரைத் தனிமைப்படுத்தும் சவூதி தலைமயிலான நடவடிக்கை பல்வேறு பூசல்களைத் தோற்றுவித்துள்ள நிலையில், கட்டாருக்குக் கொடுக்கப்பட்ட பத்து நாட்கள் அவகாசம் முடிவுற்று மேலும் இரு நாட்கள் அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. இக்கால அவகாசம் செய்தி எழுதப்பட்டு சில மணிநேரங்களில் முடிவடையவுள்ள நிலையில் அடுத்து நடக்கப் போவது என்ன என்ற கேள்விகள் எழுந்து வருகின்றன.

கட்டாருக்கு மேற்குறித்த நாடுகள் விதித்துள்ள நிபந்தனைகளை அவதானிக்கையில் 2011 இல் மேலெழுந்த அரபு வசந்தப் புரட்சிகளின் போது அதற்கு ஆதரவான பல்வேறு சக்திகளுக்கு அடைக்கலமாகவும் தூண்டு சக்தியாகவும் இருந்தமையே இக்குறித்த நெருக்கடிக்கான பின்புலமாக இருப்பதாக மிடில்ஈஸ்ட் மொனிட்டர் இணையப் பத்தி எழுத்தாளர் முஹம்மத் ஜாவித் சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு சிறு தேசமாக இருந்து கொண்டு பாரிய செல்வாக்குக் கொண்ட நாடாக கட்டார் வளர்ந்திருப்பதில் அல்ஜஸீரா ஊடகமும் நேர்த்தியாகத் திட்டமிடப்பட்ட பொருளாதாரமுமே காரணியென சுட்டிக் காட்டப்படுகிறது.

எவ்வாறெனினும் பிராந்தியத்தில் மேலெழும் மக்கள் புரட்சிகள் மற்றும் இஸ்லாமியவாதிகளின் ஆதிக்கத்தை கருவறுப்பதில் அமெரிக்கப் பின்னணியுடன் சவூதி அரேபியா பல்வேறு கட்டங்களில் பங்கு வகித்துள்ளது. இது பல புலனாய்வுகளினூடாக நிரூபிக்கப்பட்ட நிலையில் இஸ்லாமியவாத சக்திகளை இன்னுமொருபடி மேலே கருவறுக்க அமெரிக்கா திட்டமிடுகிறதா என்ற நியாயமான சந்தேகம் வலுத்து வருகின்றது.

சீனாவில் மழை, வெள்ளம்: 56 பேர் பலி 22 பேர் மாயம்

பீஜிங்கில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதுவரை 56 பேர் பலியாகிவிட்டனர். 22 பேரை காணவில்லை.

கடந்த நான்கு நாட்களில் மட்டும், சீனாவின் பல நகரங்களில், 48 செ.மீக்கு மேல் மழை பதிவாகியுள்ளது. சீனாவின் தெற்கு பகுதியில், ஏரிகளும், ஆறுகளும் நிரம்பி வழிகின்றன. இதனால், பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. ரயில் மற்றும் பஸ் போக்குவரத்து, முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

வட கொரியாவின் ஏவுகணைப் பரீட்சிப்பு ஏற்றுக்கொள்ள முடியாததென ரஷ்யாவும் சீனாவும் அறிவிப்பு

கொரியத் தீபகற்ப பிரச்சினைக்கு சமரசமான தீர்வுக்கே செல்ல வேண்டுமென ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டிய விஷேட அவசர கூட்டத்தின் பின்னர் ரஷ்ய மற்றும் சீனத் தலைவர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் வட கொரியா மேற்கொண்ட ஏவுகணைப் பரிசோதனை உலகளவில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. அந்த ஏவுகணைப் பரிசோதனையின் பின்னர் உலகின் ஏப்பாகத்துக்கும் வடகொரியாவிலிருந்து அணுவாயுதங்களைக் காவிச் சென்று தாக்குதல் நடாத்தும் வல்லமை தமக்கிருப்பதாக வடகொரியா அறிவித்திருந்தது.

மேற்குறித்த அவசர கூட்டத்தின் பின்னர் கூட்டாக அறிக்கையொன்றை விடுத்திருந்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் மற்றும் சீன அதிபர் சி ஜின்பிங் ஆகியோர் சமரசமான தீர்வொன்றுக்கு அவசரமாக செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியதோடு குறித்த ஏவுகணைப் பரிசோதனையை ஏற்க முடியாதெனவும் அது பிராந்தியத்தில் அவசிய மற்ற பதற்றங்களை உருவாக்குவதாகவும் இவ்விடயத்துக்கென பியாங் யோங்கைத் தாம் கண்டிப்பதாகவும் அதில் தெரிவித்திருந்தனர்.

பிரான்ஸ் பள்ளிவாசலில் தாக்குதல்: 8 பேர் காயம்

பிரான்ஸின் தென்பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசலில் முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் பிரான்ஸின் அவிக்நன் மாகாணத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது. குறித்த பள்ளிவாசலில் தொழுகையை முடித்துவிட்டு வந்தவர்கள் மீதே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ரமழான் மாத காலப் பகுதியில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட மேற்கு நாடுகளில் முஸ்லிம்கள் மீது இரவுத் தொழுகையின் போது பல தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை சர்வதேச ஊடகங்கள் பலதில் பதிவாகியிருந்தது.

ராக்காவில் ஐ.எஸ்.ஐ.எஸ் இற்கு தொடர்ந்தும் தோல்வி

சிரியாவில் ஐசிஸ் பயங்கரவாதிகளது இலக்குகள் மீது அமெரிக்கா மற்றும் அதன் கூட்டுப் படைகள் தொடர்ந்தும் நடாத்திவரும் தாக்குதல்களில் ஐசிஸ் அமைப்பினரது இலக்குகள் தொடர்ந்தும் இழக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவில் பெரும் பகுதியைத் தம் வசம் வைத்திருந்த ஐசிஸ் அமைப்பினரை எதிர்த்து சிரியா, ரஷ்யா, அமெரிக்கா, துருக்கி மற்றும் குர்திஷ் படைகள் பல்வேறு இலக்குகளில் தாக்குதல் தொடுத்து வருகின்றன. இதில் ராக்காவில் அமெரிக்கக் கூட்டணிப் படைகள் பெருமளவு பகுதிகளை மீட்டெடுத்துள்ளதாக அமெரிக்கப் படையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை ஈராக்கில் ஐசிஸ் அணியினரின் பிரதான தலைநகராகக் கருதப்பட்ட மோசிலை முழுவதுமாக மீட்கும் நடவடிக்கைகளில் ஈராக் படையினர் தாமதத்தை சந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக பாரிய மனித அவலங்களுக்கான அபாய சமிக்ஞைகள் குறித்து எச்சரிக்கைகள் தொடர்ந்தும் விடுக்கப்பட்டு வரும் நிலையில் இத்தாமதம் நிகழ்வது அவலங்களை மேலும் சிக்கலாக்கலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராக்கா மற்றும் மோசிலில் மொத்தமாக சுமார் ஐந்தாயிரம் ஐசிஸ் பயங்கரவாதிகளே எஞ்சியிருப்பதாகவும் அவர்களது ஆயுத மற்றும் உணவுக் கையிருப்புக்கள் வேகமாக குறைந்து வருவதாகவும் கூறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவி அரசியலைப் பாதிக்கும் கட்டார் விவகாரம்

• றவூப் ஸெய்ன்

ஜூன் 05 இல் வளைகுடா அரசியலில் ஏற்பட்ட ராஜதந்திர வெடிப்பு புதுப் புதுப் பரிமாணங்களைப் பெற்று வருகின்றது. இக்கட்டுரை எழுதப்படும் வரையான ஒரு மாத கால இடைவெளியில் கட்டார் அரசியலிலும் பிராந்திய அரசியலிலும் பல முக்கிய சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

ஜூன் 05 இல் சவூதி, பஹ்ரைன், அறபு அமீரகம், எகிப்து ஆகிய நாடுகள் கட்டாருடனான ராஜதந்திர உறவுகளை துண்டித்துக் கொள்வதாக அறிவித்தன. தொடர்ந்து சவூதியின் நிதி ஆதரவைப் பெற்று வரும் கொமொரோஸ், மொரிட்டானியா, செனகல், யெமன், தப்ரூக்கை தளமாகக் கொண்ட லிபிய அரசாங்கம் என்பனவும் கட்டாருடனான உறவைத் துண்டித்துக் கொண்டன. சூடானையும் தனது அணியில் வளைத்துப் போடுவதற்கு சவூதி பகிரதப் பிரத்தனம் மேற்கொள்கின்றது.

வளைகுடா ஒத்துழைப்பு நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் ஆறு நாடுகளில் ஓமான், குவைத் என்பன நடுநிலை வகிக்கின்றன. அமீரகம் உடனடியான பொருளாதாரத் தடையொன்றை விதித்தது. அல்ஜஸீராவின் ஊடக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. கட்டாருக்கு ஆதரவாக முகநூலிலோ ஏனைய சமூக வலைத்தளங்களிலோ பதிவிடுகின்றவர்களுக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனையும் பல டொலர் அபராதமும் விதிக்கப்படும் என இந்த அரசுகள் அதிரடியாக அறிவித்தன.

கட்டாருக்கான தரைவழிப் பாதை சவூதி அறேபியாவினால் மூடப்பட்டது. எதிர்பார்த்திராத இந்த நெருக்கடியை எதிர்கொண்ட கட்டார் துருக்கியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. 2014 இல் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைப் புதுப்பித்தது. அதன்படி 5000 துருக்கியப் படையினர் கட்டார் - சவூதி எல்லைப் புறத்தில் நிறுத்தப்படும் என உடன்பாடு எட்டப்பட்டது.

கட்டாருக்குத் தேவையான உணவுப் பொருட்களின் பெரும் பகுதி துருக்கியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. ஓமான்-கட்டார் போக்குவரத்து தனது கடல் வணிகப் பாதையை திறந்து விட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

கட்டார் வெளிவிவகார அமைச்சர் ஜேர்மன், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளோடு உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கங்களில், "கட்டார் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டும் எனவும், வளைகுடா நாடுகள் தமது பிரச்சினையை தமக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் செய்திகளை வெளியிட்டு வருகிறார்.

ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்ட அறபு நாடுகள், 13 அம்சங்கள் அடங்கிய நிபந்தனைத் திட்டமொன்றை கட்டார் அரசிடம் கையளித்து அதனை ஏற்றுக் கொண்டால் உறவுகள் மீள புதுப்பிக்கப்படும் எனவும், அதற்கான கால அவகாசம் 10 நாள் எனவும் அறிவித்தன. கடந்த ஞாயிறு 02 ஆம் திகதியுடன் அக்காலக்கெடு முடிவடைந்து விட்டது. கட்டார் அரசு எந்தப் பதிலையும் வழங்கவில்லை.

கால அவகாசம் மீண்டும் 48 மணித்தியாலங்களால் நீடிக்கப்படுவதை இடையீட்டாளராகச் செயல்படும் குவைத் உறுதி செய்தது. இதுவரை கட்டார் விவகாரத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் இவை.

அறபு நாடுகளின் நிபந்தனைகளுக்கு கட்டார் அடிபணியுமா? கட்டார் இவ்வாறு தனிமைப்படுத்தப்படுவதற்கான அரசியல், பொருளாதார காரணங்கள் எவை? துண்டிக்கப்பட்ட கட்டாரினால் தனித்துச் செயற்பட முடியுமா? இந்த ராஜதந்திர உராய்வுகள் எதிர்காலத்தில் இப்பிராந்தியத்தில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் என்ன? முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் நியாயப்பாடுகள் என்ன? என்பன போன்ற பல்வேறு கேள்விகள் இத்தலைப்பைச் சுற்றிச் சுழல்கின்றன.

03 ஆம் திகதி திங்களன்று கட்டார் வெளிவிவகார அமைச்சர் முஹம்மத் பின் அப்துர் ரஹ்மான் அஸ்ஸானி, அறபு நாடுகளின் நிபந்தனைகள் குறித்த நாட்டின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார்.

13 நிபந்தனைகளை சவூதி தலைமையிலான நாடுகள் முன்வைத்திருந்தன. அதில் ஈரானுடனான ராஜ தந்திர உறவைத் துண்டித்தல், பயங்கரவாத அமைப்புக்களான ஐ.எஸ்.ஐ.எஸ், ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் என்பவற்றுக்கு நிதி ஆதரவளிப்பதை நிறுத்தல், சகோதரத்துவ அமைப்புக்கு ஆதரவளிப்பதை நிறுத்தல், அஸ் ஜஸீரா ஊடக நிறுவனத்தை இழுத்து மூடுதல், துருக்கியின் படை முகாமை நீக்குதல் என்பனவும் உள்ளடங்குகின்றன.

குவைத் அமீர் ஸபாஹ் அல் அஹ்மத் அல் ஜாபிர் அஸ்ஸபாஹ்வைச் சந்தித்து, கட்டாரின் பதிலை அப்துர் ரஹ்மான் நேரடியாக ஒப்படைத்துள்ளார். ஊடகங்களுக்கு இது குறித்து குவைத் அதிகாரிகள் கருத்து வெளியிடவில்லை.

அறபு நாடுகளின் கோரிக்கைகள் நிராகரிக்கத்தக்கவை. அதை விடுத்து திறந்த கலந்துரையாடலுக்கு கட்டார் தயாராக உள்ளது என்று அதன் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்தல் என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ள கட்டார், அறபு நாடுகளின் நிபந்தனைகள் மற்றும் ராஜதந்திர துண்டிப்பு சர்வதேச சட்டங்களை மீறும் செயல் என குற்றம் சாட்டியுள்ளது. அல் ஜஸீராவை மூடுதல் பற்றிய விவகாரம், பேச்சுவார்த்தை மேசைக்கே கொண்டு வரப்படாது என்று அறிவித்துள்ள அரசாங்கம், எதிரிகள் கூட இவ்வாறாக நடந்துகொள்ள மாட்டார்கள் என்று அறிவித்துள்ளது.

கட்டார் நிபந்தனைகளுக்கு அடிபணியாவிட்டால் தாம் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆராய்வதற்கு சவூதி, பஹ்ரைன், அமீரகம், எகிப்து ஆகிய நான்கு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கெய்ரோவில் கூடவுள்ளனர். இதே வேளை, கட்டார் ராஜதந்திர உறவுகளை ஏனைய நாடுகளுடன் வலுப்படுத்தி வருகின்றது.

கட்டார் ஏன் தனிமைப்படுத்தப்படுகின்றது என்பது இங்குள்ள முக்கிய கேள்வியாகும். கட்டார் ஏனைய வளைகுடா நாடுகளை விட பொருளாதாரத்தில் மிக முன்னேற்றகரமான நாடாகும். அதன் தலாவீத வருமானம் மிக உயர்வான நிலையில் உள்ளது. உலகிலுள்ள எல்லா நாடுகளை விடவும் இரண்டு சிறப்பம்சங்கள் கொண்ட நாடு என கட்டார் கருதப்படுகின்றது. [illegible] எந்த வரியையும் சுமத்தாத [illegible]

பெருமை அதற்குள்ளது. இரண்டாவது, மின்சாரத்தையும் குடிநீரையும் இலவசமாக வழங்கும் ஒரே நாடு என்ற சிறப்பும் அதற்குள்ளது.

22 இலட்சம் மக்களைக் கொண்டுள்ள இந்நாடு, நிதித் துறையில் வேகமாக வளர்கின்றது. அங்குள்ள பல பில்லியன் கியூபிக் அடி இயற்கை எரிவாயுவும் எதிர்வரும் 50 ஆண்டுகளுக்குத் தேவையான பெற்றோலிய வளமும் அந்நாட்டின் செழுமைக்குப் பின்னணியாக உள்ளது.

56 முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் அறபு-முஸ்லிம் உலகிற்குச் சார்பான அல்லது ஆதரவான ஒரே வளைகுடா நாடு கட்டார் எனக் கருதப்படுகின்றது. காஸா நான்காவது முறையாகவும் இஸ்ரேலினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பேரழிவுகளையும் அனர்த்தங்களையும் காஸா மக்களால் எதிர்கொள்ள முடியாத சூழலில் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிய ஒரே வளைகுடா நாடு கட்டார்.

துருக்கியும் இத்தகைய வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் முழு அறபு -முஸ்லிம் உலகையும் போர்க் களமாக மாற்றியுள்ள அமெரிக்கா, வளைகுடாவையும் அத்தகைய நெருக்கடியில் தள்ளுவதற்கு முனைந்து செயல்படுகின்றது.

ட்ரம்பின் வருகையைத் தொடர்ந்தே கட்டார் மீதான அழுத்தங்கள் அதிகரித்தன. ட்ரம்பின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் வளைகுடாவையே இலக்கு வைத்தது. அவரது விஜயத்திற்கு மூன்று அரசியல் நோக்கங்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வருடா [illegible] களை இம்முறையும் [illegible] தொகை [illegible] யில் அறபு நாடுகளுக்கு விற்பனை செய்வது முதல் நோக்கமாகும்.

வளைகுடாவில் பாரசீக சாம்ராஜ்யத்தை உருவாக்கும் கனவில் மிதக்கும் ஈரான் பூச்சாண்டியாகக் காட்டி, பல பில்லியன் டொலர்களுக்கு வளைகுடா அறபு நாடுகளுக்கு ஆயுதங்களை இம்முறையும் அமெரிக்கா விற்பனை செய்தது. சர்வதேச சமாதான ஆய்வுக்கான சுவீடன் நிறுவன (SIPRI) அறிக்கையின்படி கடந்த பத்தாண்டுகளில் உலக நாடுகளின் வரிசையில் ஆகப் பெரும் தொகை ஆயுத வணிகத்தில் ஈடுபடும் நாடு அமெரிக்காவாகும். அதனிடமிருந்து ஆகக் கூடுதலான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் பிராந்தியம் வளைகுடாவாகும்.

ஷீஆ-சுன்னி மோதலைத் தூண்டி விடுவதும் அறபு நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதும் கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்று வரும் ஒன்று. ட்ரம்பின் வார்த்தையில் ஒரு அறபு நேட்டோவை உருவாக்குவதே அமெரிக்காவின் குறிக்கோளாகும். கட்டார் இந்தப் புள்ளியிலிருந்து விலகுகின்றது. அறபு நாடுகளை வழிநடத்தும் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் கட்டாரின் இந்த அணுகுமுறை வெறுப்புக்குரியது.

மூன்றாவதாக, பிராந்தியத்தில் பலஸ்தீனர்களின் நிலங்களை விழுங்கி ஏப்பமிடும் இஸ்ரேலின் விஸ்தரிப்பு வாதத்தை நீடிக்கச் செய்வதற்கு ஒரு குழம்பிய குட்டை அவசியம். இதுவரை இஸ்ரேலுடன் கள்ளத் தனமாகவும் ரகசியமாகவும் உறவாடி வந்த அறபு நாடுகளுடன் இஸ்ரேலை மறுமணம் செய்து வைப்பதன் மூலம் மத்திய கிழக்கில் பலஸ்தீனப் பிரச்சினை என்ற ஒன்று இப்போது இல்லை. அது மறைந்து விட்டது என்ற மாயை உருவாக்குவதும் ட்ரம்பின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

கட்டாருடன் உறவைத் துண்டித்த மூன்று அறபு நாடுகளின் இராணுவ ஜெனரல்கள், பாதுகாப்பு அமைச்சர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் ஏற்கனவே இஸ்ரேலுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். இம்மூன்று நாடுகளில் இஸ்ரேலிய தூதரகங்கள் இல்லை என்பது மட்டுமே வெளிப்படையாகத் தெரியும் விடயம்.

பிராந்தியத்தில் எழுந்துள்ள ஷீஆ-சுன்னி பகை முரண்பாட்டை எதிர்கொள்வதற்கு இஸ்ரேலின் ஆதரவு தமக்குத் தேவையென அறபு நாடுகள் கருதுகின்றன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அறபு நாடுகளுடன் வெளிப்படையான ராஜதந்திர உறவுகளை உருவாக்கிக் கொண்டால் பலஸ்தீனம் குறித்த தமது தார்மீகப் பொறுப்பும் இருநாட்டுத் தீர்வு குறித்த விட்டுக் கொடுப்பும் முற்றாக இல்லாமல் போய்விடும் என இஸ்ரேல் எண்ணுகின்றது.

Win-Win என்ற அடிப்படையில் இஸ்ரேல் அறபு நாடுகளுடனான தொடர்பை வலுப்படுத்தும் இந்தப் புதிய அரசியல் மாற்றத்திற்கான நிகழ்ச்சி நிரலிலிருந்து கட்டார் விலகிச் செல்கின்றது. ஏனெனில், ஏற்கனவே அது மாத்திரமே காஸாவுக்கும் மேற்குக்கரைக்கும் உதவி வருகின்ற ஒரே அறபு நாடு. ஏனைய மூன்று அறபு நாடுகளும் பலஸ்தீன் பிரச்சினை குறித்து குறைந்தபட்சம் ஒரு வாய்வழிக் கண்டனத்தையேனும் இதுவரை வெளியிடாதவை.

ஆக, கட்டார் அறபு-இஸ்லாமிய உலகத்திற்கு ஆதரவளிப்பதும் பலஸ்தீனர்களின் பக்கம் நிற்பதும் இஸ்ரேலின் திருகுதாளங்களை எதிர்த்து நிற்பதும் இந்த ராஜதந்திர உராய்வில் முக்கிய பங்காற்றுகின்றன.

நான்காவதாக, வளைகுடாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது கட்டாரின் துரிதமான பொருளாதார வளர்ச்சி உருவாக்கியுள்ள பொறாமையும் இந்நெருக்கடிக்குப் பின்னால் உள்ளது என்று கூறப்படுகின்றது. கட்டாரின் தற்போதைய சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் வெளிநாட்டவர்கள். அங்கு பல்வேறு துறைகளில் ஊழியர்களாகப் பணியாற்றுகின்றவர்கள்.

ஜூன் 05 இல் அறபு நாடுகளுடனான ராஜதந்திர தொடர்புகள் துண்டிக்கப்பட்டதனை அடுத்து சர்வதேச ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அங்குள்ள வெளிநாட்டவர்கள் இந்தக் காரணத்தைப் பலமாக முன்னிறுத்தியுள்ளனர். ஆயினும் இது நெருக்கடிக்கான உடனடிக் காரணம் அல்ல என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

ஐந்தாவது காரணம் முக்கியமானது. வளைகுடா நாடுகளில் குவைத்தைப் போன்று கட்டார் மிகச் சிறிய நாடாகும். ஆனால், பொருளாதார வளத்தில் குவைத்தை விட அது முன்னணியில் உள்ளது. குவைத்தில் பெற்றோலிய வளம் உள்ளது. ஆனால், இயற்கை எரிவாயு குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. கட்டாரில் இயற்கை எரிவாயு பல பில்லியன் கியூபிக் அடிகள் உள்ளன என்று கூறப்படுகின்றது.

எனவே இந்நாட்டின் இறைமையை மீறி அரசியல் ஸ்திரப்பாட்டைக் குலைப்பதன் மூலம் அதன் பொருளாதார வளங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் இந்த அறபு நாடுகளுக்கு உள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கட்டார் மீது முன்வைக்கப்பட்டுள்ள 13 நிபந்தனைகளை நோக்கும்போது அவை குறிப்பிட்ட ஒரு நாட்டின் இறைமையை மீறும் செயல் என கட்டார் மட்டுமன்றி அதற்கு ஆதரவான அனைத்து நாடுகளும் எச்சரித்துள்ளன.

தற்போது காலக்கெடு முடிவடைந்துள்ள நிலையில், கட்டார் விவகாரம் சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. பிரான்ஸ், ஜேர்மன், ஐக்கிய இராச்சியம் என்பன வளைகுடா நாடுகளின் ராஜதந்திர முறுகல் நிலையை அவை அமைதியாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என அறிக்கை விடுத்துள்ளன.

பிரான்ஸின் புதிய ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன், கட்டார் அமீர் ஷெக் தமீம் பின் ஹமாத் அஸ்ஸானியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "வளைகுடா நெருக்கடியின் புதிய நிலைமைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். ராஜதந்திர பேச்சுவார்த்தைகள் மூலம் நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் பிரதமர் தெரேஸா மே சவூதி இளவரசர் முஹம்மத் பின் ஸல்மானுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அனைத்துத் தரப்பும் தற்போதுள்ள பதற்ற சூழலைத் தணித்து வளைகுடா ஒப்பந்தத்தையும் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும் என தெரேஸா வலியுறுத்தியிருந்தார்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொல்லி டெங்குவை ஒழிப்பது எப்படி?

• கலாநிதி பரீனா ருஸைக்
மருத்துவப் புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்

இன்று உலகில் பல்வேறு தொற்று நோய்கள் பரவிக்கொண்டு வருகின்றன. 17 வீதத்திற்கும் அதிகமான நோய்கள் காவிகள் மூலம் தொற்றும் நோய்களாகும். இதனால் உலகில் வருடாந்தம் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழக்கிறார்கள்.

காவிகள் எனும் பொழுது நுளம்புகள், ஒட்டுண்ணிகள், தெள்ளு, கொசு, நீர் வாழ் ஓட்டிகள் போன்றவற்றை அதற்குள் உள்ளடக்கலாம். டெங்கு, மலேரியா, சிக்குண் குன்யா, யானைக்கால் போன்ற பல விதமான நோய்கள் நுளம்புகளால் ஏற்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் 4 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களே அதிகம் காணப்படுகிறார்கள். இந்த வகையில் டெங்கு நோயும் இன்று உலகளவில் பரவி வருவதை காண முடிகிறது.

(265-420 கி.பி) காலத்தில் சீன மருத்துவர்கள் அவர்களது 'என்சைக்லோபீடியாவில்' முதன் முதலில் டெங்கு நுளம்பு தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள். டெங்கு பரவக்கூடிய தொற்றுகள் தொடர்பாக 1635 இல் மேற்கிந்திய தீவுகளில் நில நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. மேலும் 1779 - 1780 ஆம் ஆண்டு கால கட்டங்களில் ஆசியா, வட அமெரிக்கா, ஆபிரிக்கா போன்ற பகுதிகளில் ஏறத்தாழ ஒரே நேரத்தில் டெங்கு நிகழ்வுகள் ஏற்பட்டதாக பதிவுகள் காணப்படுகின்றன.

எனவே ஆரம்ப காலம் முதலே இந்நோயின் பரவல் இருந்திருப்பதனைக் காண முடிகிறது. அதேபோன்று 1820 களின் முற்பகுதியில் கிழக்கு ஆபிரிக்காவில் டெங்கு இருந்தமைக்கான சில நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. இதனை சுவாகிலி மொழியில் கெட்ட ஆவியால் திடீரென உண்டாகும் எனப் பொருள்படும் (ki denga pepo) என்பதாக அழைத்தார்கள்.

1827- 28 இல் கரிபியின் தீவுகளில் நிகழ்ந்த தொற்று நிகழ்வின் பின்னர் இசுப்பானிய கரிபியர்களால் டெங்கு என அழைக்கப்பட்டது. எனவே குறிப்பாக 2 ஆம் உலகப் போருக்கு பின்னர் அதிகளவாக டெங்கு நோய் பரவியிருப்பதாக வரலாறு தெரிவிக்கின்றது.

உலக அளவில் இதுவரையில் நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் 2.5 பில்லியன் மக்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து சுகதேகியான ஒருவருக்கு டெங்கு வைரசைக் கடத்தும் நோய்க் காவி நுளம்பு டெங்கு நுளம்பு என அழைக்கப்படுகிறது.

டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் ஈடிஸ் (Aedes) என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் இரண்டு வகையான ஈடிஸ் நுளம்புகள் டெங்குவின் காவிகளாக செயற்படுகின்றன. அவை, ஈடிஸ் இஜிப்டி, ஈடிஸ் அல்போபிக்டஸ் என்பனவாகும்.

டெங்கு நோய் இலங்கையில் மாத்திரமல்லாமல் அயன மண்டல நாடுகளிலும் பரவி வருகின்றன. இந்திய, இலங்கை, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இந்நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. கடந்த ஜூன் 28ஆம் திகதி கேரளா பிரதேசத்தில் இந்நோயினால் 140 பேர் உயிரிழந்துள்ளார்கள். இந்நுளம்புகள் டெங்கு காய்ச்சல் மற்றும் குருதிப் பெருக்குகளை ஏற்படுத்துகின்றன.

டெங்கு நுளம்பு ஒருவரை கடித்து 3 நாள் தொடக்கம் 14 நாட்களுக்குள் அந்நுளம்பின் தாக்கம் உடலில் காணப்படுவதன் மூலம் இந்நோய் ஏற்படுகின்றது. டெங்கு குருதிப் பெருக்கு என்பது டெங்கு காய்ச்சலை விட ஆபத்தான விடயமாக உள்ளது.

டெங்கு நோய் 3 பருவங்களைக் கொண்டனவாகக் காணப்படும். காய்ச்சல் பருவம், கடுமையான நிலை, மீள் பருவம் என்பனவே அவை. டெங்கு நுளம்புகள் அல்லாத ஏனைய நுளம்புகளும் டெங்கு நோய்க் காவியை ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு பரப்பும் கருவியாக செயற்படுகின்றது.

இலகுவில் உக்காத பொருட்கள் உள்ள பகுதிகளில், மழை நீர் தேங்கி நிற்கும் பகுதிகளில், வீட்டு உபகரணங்கள், செடிகள், மரப் பொந்துகளில் நீர்த் தேங்கி நிற்கின்ற போது டெங்கு நுளம்பு பெருக்கெடுக்கின்றது.

இலங்கையில் தற்பொழுது நாடு பூராகவும் இதுவொரு ஆட்கொல்லி நோயாகக் காணப்படுகிறது. சகல தரப்பினரையும் இந்நோய் தாக்கி வருகிறது. குறிப்பாக கொழும்பில் அதிகமாக டெங்கு நோய் பரவி வருகிறது. இவ்வருடத்தின் ஜூன் மாதம் இறுதி வரையில் சுமார் 71298 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கொழும்பு மாவட்டத்தில் 15763 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் டெங்குவின் தாக்கம் காணப்படுகின்றன.

கொழும்பு மாவட்டத்தின் 8 பகுதிகள் டெங்கினுடைய பெருக்கத்திற்கு உட்பட்ட வலயங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. வெள்ளவத்தை, பாமன்கடை, கிருளபனை, கிருள வீதி, நாரஹேன்பிட, பொரளை, தெமட்டகொட, குருந்துவத்த ஆகிய பகுதிகளே அவையாகும்.

மொன்சூன் மழை விட்டு விட்டுப் பொழிவது, அடிக்கடி ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கு, குப்பை மேடு சரிவு, கண்ட இடங்களில் குப்பை போடுதல், சனத்தொகை பெருக்கம், சேரிப்புறங்கள் அதிகமாகக் காணப்படுவது போன்ற காரணங்களால் கொழும்பில் அதிகமாக டெங்கு பரவி வருகிறது.

டெங்கு நோய் தாக்கத்திற்கு உட்பட்டவர்களுக்கு தலைவலி, கண் பின்புற வலி, பொதுவாக உடல் வலி, தசை வலி, மூட்டு வலி, குமட்டல், பசியின்மை, தொண்டைப் புண், குறுதிச் சிறுதட்டுக்கள் குறைவடைதல் போன்ற அறிகுறிகள் ஏற்படும். இவ்வாறான அறிகுறிகள் தென்படும் போது உடனடியாக வைத்தியரை அணுக வேண்டும்.

டெங்கு அன்டிஜன்ட் டெஸ்ட் உள்ளது. முதல் நாளிலேயே அப்பரிசோதனையின் மூலம் டெங்குவை உறுதிப் படுத்தலாம். வயது முதிர்ந்தவர்கள் மற்றும் சிறுவர்களே இந்நோய்க்கு அதிகம் உட்படுகின்றார்கள். டெங்கு நோய் தாக்கப்பட்டவர்களுக்கு திரவங்களை கொடுக்க வேண்டும். அதிகமாக நீர் கொடுக்க வேண்டும். பானங்கள், கஞ்சி போன்றவற்றை கொடுக்க வேண்டும். வீட்டிலிருந்தே அவர்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சையளிக்கலாம். அவர்களுக்கு அதிக ஓய்வு கொடுக்க வேண்டும்.

டெங்கு நோய் ஏற்படுவதனால் சமூக ரீதியில் பல்வேறு தாக்கங்கள் ஏற்படுகின்றன. பாடசாலை செல்லும் பிள்ளைகளையும் சிறுவர்களையும் டெங்கு அதிகமாக தாக்குவதனால் சுமார் மூன்று வார காலம் அவர்களுக்கு பாடசாலை செல்ல முடியாமல் போகும். பரீட்சைகளுக்கு உரிய முறையில் சமூகமளிக்க முடியாமல் போகும். அத்தோடு ஏனையவர்களின் தொழில்கள் பாதிக்கப்படும். விளையாட்டுக்களில் ஈடுபட முடியாமல் போகும்.

எனவே இந்நோய் எதிர்கால முன்னேற்றத்திற்குத் ,தடையாக அமைகிறது. டெங்குவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகம் கிரீன் அப்பிள் கொடுக்குமாறு வைத்தியர்கள் கூறுவார்கள். வறுமைக்கோட்டுக்கு கீழுள்ளவர்களுக்கு அவ்வாறான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க முடியாதிருக்கும். எனவே டெங்கு சமூக பொருளாதார உடலியல் ரீதியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் நோயாக உள்ளது. டெங்கு நோய்த் தடுப்பூசிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பு பெற சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பாரம்பரிய அடிப்படையிலான சில முகாமைத்துவ ஒழுங்குகளை பின்பற்ற வேண்டும். 4 மணிக்கு பிறகு கதவு, யன்னல்களை மூடி விட வேண்டும். அதிகாலை 8 மணி வரையில் பிள்ளைகளை நுளம்பு கடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக புள்ளெண்ணெய் என்று சொல்லக்கூடிய 'பகிரி தெல்'லை அனைவரும் தடவிக்கொள்ள வேண்டும். அவ் வெண்ணெயின் வாடைக்கு நுளம்புகள் நெருங்காது. நுளம்பு வலைகளை பயன்படுத்துவதன் மூலமும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பைப் பெற முடியும்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இவ் விடயத்தை நோக்குகையில், ''இறை விசுவாசிகளே! நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நமது சொல்லினாலோ செயற்பாட்டினாலோ பிற மக்களுக்கு எந்தவொரு தொல்லையையும் செய்து விடக் கூடாது. அவ்வாறு செய்தால் அவன் உண்மையான முஸ்லிமல்ல.''

''எவரது நாவு மற்றும் கைகளின் தொல்லையிலிருந்து பிறர் பாதுகாக்கப்படுகின்றாரோ அவர்கள் உண்மை முஸ்லிம்கள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி)

எனவே சுத்தத்தை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. எனவே நாம் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைத்துக் கொள்வதன் மூலம் உண்மையான இறைநம்பிக்கையாளராக எமக்கு வாழ முடியும்.

தொற்று நோய் ஒரு முஸ்லிமின் பார்வையில் எவ்வாறு இருக்க வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொற்று நோய் கிடையாது என்று கூறினார்கள். அப்போது கிராமவாசியொருவர், 'இறைத்தூதர் அவர்களே! (பாலை) மணலில் மான்களைப் போன்று (ஆரோக்கியத்துடன் துள்ளித் திரியும்) என் ஒட்டகங்களிடம் சிரங்கு பிடித்த ஒட்டகம் வந்து அவற்றிற்கிடையே கலந்து அவற்றையும் சிரங்கு பிடித்தவையாக ஆக்கி விடுகின்றனவே! அவற்றின் நிலையென்ன (தொற்று நோயில்லையா?)' என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'அப்படியென்றால் முதல் (முதலில் சிரங்கு பிடித்த) ஒட்டகத்திற்கு (அந்த) நோயை தொற்றச் செய்தது யார்?' என்று திருப்பிக் கேட்டார்கள். தொற்று நோய்களைக் காரணம் காட்டி இறைவனின் விதியை மறுக்கக் கூடாது என்பதற்கு அவ்வாறு சொல்லப்பட்டது.

ஒரு நோய் ஏற்படுவதாக இருந்தால் அது இறைவனின் நாட்டப்படி ஏற்படுகிறது என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். தொற்று நோய் உண்டு என்பதற்குரிய ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் காணப்படுகின்றன. உமர் (ரழி) அவர்கள் ஷாம் தேசத்திற்கு செல்ல படையை தயார்செய்து கொண்டிருந்த போது அங்கு செல்ல வேண்டாம். தொற்று நோய் பரவுகிறது என சிலர் கூறினார்கள். அதற்கு உமர் (ரழி) அவர்கள் ''ஓர் ஊரில் கொள்ளை நோய் பரவியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அந்த ஊருக்கு நீங்களாக செல்லாதீர்கள். நீங்கள் ஓர் ஊரில் இருக்கும் போது அங்கு கொள்ளை நோய் பரவினால் அதிலிருந்து வெருண்டோடுவதற்காக (அவ்வூரை விட்டு) வெளியேறாதீர்கள்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய கருத்தைச் சுட்டிக் காட்டினார்கள்.

இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்துகிறது. எமது சூழலில் உள்ள சிரட்டைகள், யோகட் கப்கள் மற்றும் மக்களுக்கு தீங்கு தரும் பொருட்களை அகற்ற வேண்டும். தீங்கு தரும் பொருட்களை அகற்றுவது தர்மமாகும்.

தவளைகள் நீரில் காணப்படுகின்ற டெங்கு நுளம்புக் குஞ்சுகளை சாப்பிடுகின்றது. இஸ்லாத்தில் தவளைகளை அடிக்க வேண்டாம் என சொல்லப்பட்டுள்ளது. இன்று விஞ்ஞான ரீதியில் பார்த்தால் தவளைகளின் இனப்பெருக்கம் குறைவாக காணப்படுகின்றது. டெங்கு பெருக்கமே இதற்கான அடிப்படை காரணமாகும்.

இலங்கையில் உயிர்ப் பல்வகைமை சீரழிந்த நிலையில் காணப்படுகின்றன. பாம்புகள் குறைந்திருப்பது நல்லதென குறிப்பிட்டாலும் அது இயற்கையின் தொழில் பாட்டை சீரழியச் செய்துள்ளது. இயற்கையிலுள்ள உயிரினங்கள் ஏதோவொரு அடிப்படையில் இயற்கையை சமநிலைப்படுத்துவதற்கு காரணமாக உள்ளது. அவைகளின் இனம் குறைவடையும் பொழுது அது வேறு விதத்தில மக்களுக்கு தாக்கத்தை உண்டு பண்ணும்.

டெங்கு நோயைக் குறைப்பதற்கான விழிப்பூட்டல் நடவடிக்கையை நாம் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ள வேண்டும். பாடசாலை, வழிபாட்டுத் தளங்கள் மற்றும் மக்கள் அதிகம் ஒன்று கூடும் இடங்களில் டெங்கு நோயின் கொடூரத் தன்மையை எடுத்துக்காட்டி இதனை முற்றாக ஒழிக்க அனைவரையும் ஒன்றுதிரட்ட வேண்டும். இதற்கான சிரமதானப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

டெங்கு தொடர்பாக அரசாங்கத்திற்கு பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவு இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளது. அப்பிரிவு மக்களைத் தெளிவூட்டும் பல்வேறு நிகழ்ச்சிகளை முன்னெடுத்துள்ளது. சுகாதார அமைச்சினால் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் பொது மக்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகிறது.

அரசு, பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து குப்பை கொட்டும் நடவடிக்கைக்கு சிறந்த தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். எல்லோரும் இணைந்து சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது டெங்குவினை முற்றாக அழிக்க முடியும்.

நாட்டிற்கு... (04ம் பக்கத் தொடர்)

அவ்வாறிருந்தும் அரசாங்கம் இதுவரையில் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பிக்கவில்லை. இக்குறுகிய காலப்பகுதிக்குள் அரசாங்கம் பெற்றுள்ள 8000 மில்லியன் டொலரினால் எவ்வளவு பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்திருக்கலாம்? மத்தளை விமான நிலையத்திற்கு 190 பில்லியன் டொலரும், ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு 426 மில்லியன் டொலரும், கொழும்பு-மாத்தறை அதிவேக வீதிக்கு 630 மில்லியன் டொலரும் கட்டுநாயக்க அதிவேக வீதிக்கு 248 மில்லியன் டொலருமே செலவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் துரதிஷ்டம் என்னவெனில், குறுகிய காலத்திற்குள் பெறப்பட்ட அதிகூடிய கடன் தொகையினை எவ்வித அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பயன்படுத்தாமல் அரசாங்கத்தின் செலவுக்காக வேண்டி மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் தேர்தலை குறிக்கோளாகக் கொண்டு வழங்கிய வாக்குறுதிகளின்படி அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையே அதற்கான முதற் காரணமாக உள்ளது. சம்பள அதிகரிப்புக்காக வேண்டி 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் அரசாங்கம் 160,000 மில்லியன் ரூபாவை மேலதிகமாக செலவு செய்துள்ளது. 2016 இல் 135,489 மில்லியன் ரூபாவை செலவழித்துள்ளது. 2017 இல் அத்தொகை 140,359 மில்லியன் ரூபா என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே 3 வருடங்களுக்குமான மேலதிக செலவுத் தொகை 435,848 மில்லியன் ரூபாவாக பதிவாகிறது. இதனால் அரசாங்கத்திற்கு அரசியல் தீர்மானத்தின் காரணமாக வருடந்தோரும் சம்பளம் கொடுப்பதற்காக வேண்டி மேலதிச் செலவொன்றை சுமக்க நேரிடுகிறது. அதனை ஈடுசெய்ய அரசாங்கம் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் கடன் பெற்று வருகிறது.

இரண்டாவது காரணமாக, அரசாங்கத்தின் முறையற்ற நிதி முகாமைத்துவம் காரணமாக நாட்டின் வட்டி வீதமும் தொடர்ந்தேர்ச்சியாக அதிகரித்து வருகிறது. இதனால் அரசாங்கத்தின் கடனும் அதிகரிக்கிறது. 2014 இல் திரைசேறி முறிகளின் வட்டி வீதம் 6 வீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. ஆனால் 2016 இல் அவ்வெண்ணிக்கை 10.17 வீதமாக அதிகரித்ததோடு, இவ்வருடத்தில் அது 12.91 வீதமாக அதிகரித்துள்ளது. வட்டித் தொகையை செலுத்துவதற்கு 2014 ஆம் ஆண்டு 436,000 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. 2015 இல் அத்தொகை 509,000 மில்லியன் ரூபா வரையில் 16.5 வீதத்தினாலும் 2016 இல் 610,000 மில்லியன் ரூபா வரையில் 19.9 வீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

மூன்றாவது காரணியாக நாட்டின் அயல்நாட்டு நாணயப் பரிமாற்ற விகிதம் (Exchange Rate) கடந்த இரு வருட காலப் பகுதிக்குள் தொடர்ந்தேர்ச்சியாக மதிப்பிழந்துள்ளது. இதன் காரணமாக டொலர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன்களின் ரூபா பெறுமதி தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கிறது. 2014 ஆம் ஆண்டு அமெரிக்க டொலரொன்றின் பெறுமதி 131.05 ரூபாவாக காணப்பட்டதுடன் தற்பொழுது அப்பெறுமதி 155.02 ரூபாவாக காணப்படுகிறது.

அதன்படி, ரூபாவின் பெறுமதி குறைந்து, டொலரின் பெறுமதி, 23.97 ரூபாவினால் அதிகரித்துள்ளது. [illegible] இலங்கை மத்திய வங்கி [illegible] படி, (பக். 202) நாணய மதிப்பிழப்பு காரணமாக மொத்தக் கடன் தொகை 285,100 மில்லியன் ரூபாவினாலும் 2016 அறிக்கையின் படி (பக். 224) அவ்வருடத்தின் கடன் தொகை 186,600 மில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளது.

நான்காவது காரணமாக திறைசேரி முறிகள் தொடர்பான ஊழலைக் குறிப்பிடலாம். அரசாங்கம் திறைசேரி முறி ஊழலின் போது அதிகூடிய வட்டி வீதத்திற்கு கடன் பெற்றதனால் நாட்டின் வட்டி வீதமும் உயர் மட்டத்தில் உள்ளது. இன்னும் 30 வருடங்கள் செல்லும் வரையில் திறைசேரி முறிகளுக்காக வேண்டி கூடுதலான வட்டியை செலுத்த நேரிடுகிறது.

எனவே சம்பள அதிகரிப்பு, வட்டி வீதம் உயர்வடைதல், அயல்நாட்டு நாணயப் பரிமாற்ற விகிதம் மதிப்பிழந்திருத்தல் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான ஊழல் போன்ற இந்நான்கு விடயங்களும் நாட்டின் பொருளாதாரத்தில் 4 நோய்களாக மாறியுள்ளன. இதில் ஒன்றையேனும் மீள்நிறுத்தி விட முடியாத வகையில் பொருளாதாரத்தில் அவை புறையோடிப் போயுள்ளது. இதன் விளைவாக, உள்நாட்டு வெளி நாட்டு கடன் பெறும் பொருளாதாரத்திற்குள் பாரியதொரு அழிவையும் மிகப் பெரியதொரு கடன் பொறியையும் ஏற்படுத்திவிட்டுள்ளது. அதனால் ஒரு சதமேனும் புதிதாக கடன்பெறாவிட்டாலும் நாட்டின் கடன் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் கடினமான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அரசாங்கம் உண்மை நிலையை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை கண்டு முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்தை சரியான பாதையில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதிய வரலாற்றுக் கிடங்கு

U.S.M. அலி

• அனஸ் அப்பாஸ்

1967 இல் இருந்து 1982 வரைக்கும் US Library Congress இன் தமிழ் பிரிவிற்குப் பொறுப்பாக இருந்தவர் U.S.M. அலி. அந்நேரத்தில் இலங்கைக்கான நிறுவனப் பிரதிநிதியாக வில்பர்ட் குணசேகர என்பவரே இருந்தார். அவர் மூலம் அறிவு, தெளிவு, நுட்பம் என்பவற்றை விருத்தி செய்த அலி, ஆங்கில மொழி மூலமான இலங்கை வரலாறு தொடர்பான நூல்களைத் தேட ஆரம்பித்தார்.

US Library Congress இனால் திரட்டப்படும் ஒவ்வொரு ஆங்கில, சிங்கள, தமிழ் மொழி மூல இலங்கை வரலாறு, கலாசாரம் சார்ந்த 27 நூல்கள் வீதம் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் அமெரிக்காவிலுள்ள நூலகங்களுக்கு அனுப்பப்பட்டன.

இலங்கையில் வெளிவந்த 70% ஆங்கில வரலாற்று நூல்களில் முஸ்லிம்களைப் பற்றிக் குறிப்பிடாத எந்த நூலும் இல்லை என்கின்றது இவரது புத்தகக் கிடங்கு. தெளிவாக, 1815 இற்கு பிறகு ஆங்கிலேயன் கண்டியை கைப்பற்றிய பிறகு முழு இலங்கையிலும் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு ஆங்கில அதிகாரிகளும் நூல்களை எழுத ஆரம்பித்தனர்.

18 ஆம் நூற்றாண்டுக்குப் பின் இந்த நூல்கள் வெளிவர ஆரம்பித்தன. எமது சமூகத் தலைமைகள் கொழும்பிலுள்ள ஒரு சில முஸ்லிம் தனவந்தர்களை இனங்காட்டி, மேன்மைப்படுத்திக் காட்டி விட்டால், இலங்கை வாழ் சகல முஸ்லிம்களும் மேன்மையாகி விடுவர் என்ற குறுகிய சிந்தனையில் செயற்பட்டதால் அவர்களால் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களின் சிறப்புக்களை அடையாளம் காண முடியாமல் போனதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

24 கப்பல்கள் ஊடாக பழம் பெரும் வியாபாரம் செய்த கண்டி மாவட்ட வியாபாரிகளையோ, அங்கிருந்த விகாரை திருவிழாக்களில் பங்களித்த முஸ்லிம் தனவந்தர்கள் குறித்தோ, இன்று பௌத்த பீடங்களை அணுக அச்சப்படும் இதே முஸ்லிம்கள் அன்று நெருங்கிய உறவாடியதையோ, முஸ்லிம் பள்ளிவாயலை கண்டியில் கட்டிய பௌத்த மதகுரு குறித்தோ, அரச வம்சத்தைச் சிறப்பித்து வரவேற்ற புத்தள தனவந்தர்கள் குறித்தோ, அந்த நாட்களிலேயே மாத்தளை பகுதியில் மாடி வீடுகள் கட்டி வாழ்ந்த தனவந்தர்கள் குறித்தோ, கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் ஆட்சியில் இரு அரேபியர்கள் போர்த்துக்கேயரை எதிர்த்து அரசனுக்கு ஆதரவாகப் போராடி, அதற்கு வெகுமதியாக அவர்கள் கேட்ட ''Original Kandy Women'' திருமணம் முடித்து வைத்து பெரும் வரவேற்புடன் அக்குரணையில் குடியேற்றப்பட்டதோ, 250 கரத்தை ஹம்பாந்தோட்டை உப்பு எடுத்து மட்டக்களப்பு பிரதான கடல் மார்க்க வணிகம் (திருகோணமலை துறைமுகம் கண்டி அரச ஆட்சிப் பகுதியில் பயன்படுத்தப்படவில்லை) பதுளை முஸ்லிம் வணிகர் குறித்தோ, சிறந்த வணிகர்களை கொண்ட ஏறாவூர் குறித்தோ, ஏனைய முஸ்லிம் ஊர்களின் பழங்கால வரலாறு குறித்தோ எந்தத் தேடல்?



ஆவணப்படுத்தல் இருக்கின்றது? யாருக்கு இவை தெரியும்? என்று கேட்கின்றார்.

''இலங்கை வரலாற்றில் பிரிட்டிஷ் மகாராணியுடன் முஸ்லிம்கள் வணிகம் செய்ததை ஒருபோது வடக்கில் நான் கூறியபோது, ஏன் முஸ்லிம்களால் பிரிட்டிஷ் குவீன் கவுன்சிலுக்கு ஒரு முஸ்லிமை அனுப்ப முடியாது போனது என்று சிந்திக்க வைக்கும் கேள்வியொன்றை அவர்கள் கேட்டனர். ''நாம் உங்கள் பக்கம்'' என இன்று அரசியல் பேசுவோர் அண்மைய இனவாத அழிவுகளின்போது அவற்றுக்கும் காரணகர்த்தாக்களே. குவீன் கவுன்சிலில் எமக்கு பிரதிநிதித்துவம் இருந்திருந்தால் எமது பிரச்சினைகள் பிரிட்டிஷ் பாராளுமன்றில் முழங்க வாய்ப்பாக இருந்திருக்கும்'' என்றார்.

''இலங்கையின் மண் வளம், திரவியங்கள் என்பன அரேபியர்களால், ரோமர்களால், பாரசீகர்களால், பைசாந்தியர்களால், சேர, சோழ, பாண்டியர்களால், இந்திய முகலாயர்களால் மிகுந்த விலைகொடுத்து வாங்கும் விளைபொருளாக (முக்கியமாக ''Ceylon Cinnamon'') இருந்தது. விஜயன் முதல், இறுதி இராஜசிங்கன் வரை வர்த்தகர்களாக முஸ்லிம்களே மின்னி விளங்கினர்.

இலங்கை அரசர் எவரும் வறுமையாக வாழ்ந்த வரலாறில்லை. ஆனால், கொலை அச்சத்துடன் வாழ்ந்துள்ளனர். முஸ்லிம் வர்த்தக சமூகத்துடன் சிறந்த உறவுடன் அரசர்கள் வாழ்ந்துள்ளனர். முஸ்லிம்கள் நாம் வியாபார சமூகமாக வாழ்ந்தோம், ஆம் சந்தேகமேயில்லை. அரேபிய வருகை போர்த்துக்கேயருடன் நிறைவு கண்டபோதும், தொடர்பு நீடித்தது. ஏற்றுமதி வணிகம் தொடர்ந்தது'' என்கின்றார்.

''இலங்கையில் கால்பதித்த ஆங்கிலேயன், முஸ்லிம்கள் 100 வருடம் கல்வியில் பின்தங்கி விட்டனர் என்றான். யாரும் சிந்தித்தோமா? வளங்களை சூறையாட ஒல்லாந்தரும், போர்த்துக்கீசரும் இலங்கை வந்தாலும், வளங்களை அழிக்கவும், பாதுகாப்பு தேவைக்காகவுமே ஆங்கிலேயன் இலங்கை வந்தான்.'' இப்படி நீளும் செம்மையான அவரது சொற்தொனிகளை பதிய, இந்தப் பத்திரிகையை முழுதாக நான் குத்தகைக்கு எடுக்க வேண்டி வரும்.

இலங்கை முஸ்லிம்கள் வரலாறு குறித்து பல பகுதிகளாக (25-30 தொகுதிகள்) தனது நூல் வாசிப்பின் தேடலில் கிடைத்தவற்றை இவர் தொகுத்திருக்கின்றார். அதில் ஒரு தொகுதிக்கு 44 பேரின் தகவல் திரட்டல்கள் சகிதம் உசாத்துணையாக இருந்துள்ளன. கலாநிதி M.A.M. ஷுக்ரி, ஆசிப் ஹுசைன் ஆகியோர் உள்ளிட்ட ஆங்கிலேய, சிங்கள தனி நபர்கள் இதற்கு நன்றிக்குரியவர்களாக அவர் பெயரிட்டுள்ளார். வரலாறு குறித்து ஏனைய சமூகங்களுக்கு உள்ள அக்கறை முஸ்லிம் தலைமைகளுக்கோ, இயக்கங்களுக்கு, அரசியல் கட்சிகளுக்கோ இல்லை என்பதாக அதிகம் கவலை கொண்டார்.

கல்வியின் வாடையையே நுகராத ஒருவர்தான் இத்தனையும் உங்கள் முன் பேசுகின்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா? தனது சிறுபராயம் குறித்து மிகுந்த அதிருப்தி கொள்ளும் இவர், 12 வயதில் கொழும்பில் அநாதரவாக, ஒரு அடிமை சேவகனாக வாழ்ந்த தனது வாழ்க்கைப் பக்கங்களை மிகுந்த வலியுடன் என்னிடம் மீட்டினார். இறைவனின் அருளால் தன்னைத் தானே வளர்த்துக் கொண்டதாகக் கூறும் இவர், தனது வர்த்தக அனுபவமும், இலக்கிய நண்பர் வட்ட அறிமுகமும் பாரதி நூல் நிலையம், விஜயலக்ஷ்மி நூல் நிலைய முகாமையாளராகப் பணிபுரியக் கிடைத்த திருப்பங்கள் பற்றியும் நீண்ட நேரம் விபரித்தார்.

1958 இல் புகைப்பட கலைஞராக இவர் பணி புரிந்தபோது, கைலாசபதி தலைமையிலான இலக்கிய வட்டமான இலங்கை முற்போக்கு சங்க எழுத்தாளர் குழுமத்திற்கு தன்னை அறிமுகம் செய்த 'பிறை' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் M.A. ரஹுமான் அவர்களுக்கு தனது நன்றிகளை முதலில் சொன்னார்.

1930 இல் பிறந்த இவர், 1960 இல் தனது புத்தகங்களுடனான பயணத்தை ஆரம்பித்திருக்கின்றார். பழம் புத்தகங்கள் முதல் நூற்களுடனான தொடர்புடைய தரப்பினரின் தொடர்பு, நிர்ப்பந்தத்தின் பேரில் அவரை வாசிப்பின் மூலமான வரலாற்றுத் தேடலை தட்டிவிட்டுள்ளது. கொழும்பு புதிய சோனகத்தெருவில் இவர் சந்தித்த இலங்கையின் ஜமாஅத்தே இஸ்லாமியின் ஸ்தாபகர் ஷேஹ் ஜெய்லானியின் சந்திப்பு இவரது ஆன்மீக வாழ்வையும் செம்மைப்படுத்தியதாக அக மகிழ்ந்தார். 'இஸ்லாமிக் புஆக் ஹவுஸ்' உரிமையாளர் செய்யித் அஹமத் அவரது ஆன்மீக வகுப்புத் தோழர் என்றும் குறிப்பிட்டுக் கூறினார்.

தமிழ் அரிச்சுவடியே தெரியாத ஒருவர், இலக்கிய செம்மலாக, ஆறுமுக நாவலரைப் போன்றே கருத்து திரிபற்ற, சொற்பத திருத்த, புத்தக இறுதிப் பரிசீலனை வேலைகளிலும் ஆர்வத்துடன் செயற்பட்டமைக்கு சான்றாக குமரன் புத்தக வெளியீட்டகத்தில் பணிபுரிந்தபோது தமிழ் வரலாற்று நூல்களுக்கான தனது பங்களிப்புகளை சுட்டிக் காட்டினார்.

வியப்பை இன்னும் நீட்டினால், US Congress Library இல் நிர்ப்பந்தத்தின் பேரில் சுய ஆங்கில கற்றலில் ஈடுபட்டு, பின்னர் ஆங்கில புத்தக தீவிர வாசகரானார். 1967 முதல் அங்கு வந்த நூல்களின் ஒவ்வொரு வரலாற்றுப் பிரதியையும் தனக்காக ஒன்றை எடுத்து வைத்தார். இன்று, அதிலிருந்து ஆய்ந்த வரலாற்றுக் கனிகளை இனிவரும் சமூகம் சுவைக்க வேண்டும் என்ற பெரும் முயற்சியில் பல பாகங்களைக் கொண்ட உசாத்துணை வழிகாட்டல்களை தொகுத்து வைத்திருக்கின்றார்.

பள்ளிவாயலில்ஒரு நிர்வாகம் களைய, அந்த ஆவணங்களை முற்றாக தீயிடும் முஸ்லிம் சமூகம், நூற்றாண்டு விழா காணும் கோயிலின் வரலாற்று ஏடுகளை அழகாக பாதுகாக்கும் முன்னுதாரணத்தை ஏற்குமா? அனுபவத்தை சற்று உரசிச் சொன்னார்.

நான்கு பேரின் தந்தையான இவர் கொழும்பிலிருந்து தற்போது வசிக்கும் கஹட்டோவிட்ட பிரதேசத்துக்கு வரும்போது 500 புத்தகங்களை தமிழ் சங்கத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளார். எனது சந்திப்பே அவரது உளக் கிடக்கைகளை சொல்லும் கடைசி சந்தர்ப்பமாக இருக்குமோ எனக் கூறி காலை முதல் மதிய உணவுவரை பலதும் பகிர்ந்து கொண்டார்.

இலங்கை வரலாறு குறித்த ஆவணப்படுத்தலில் ஆர்வம் கொண்டவர்கள் இவரை அணுகினால் பல மணிநேர விளக்கம் கிடைக்கும் என்பதற்கு நானே உத்தரவாதம்.

முஸ்லிம்களதும்... (06ம் பக்கத் தொடர்)

இந்து சமுத்திரத்தின் கடல் கேந்திரத்தில் இலங்கை அமைந்திருந்ததால் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்துக்குத் தோதாக இலங்கை காணப்பட்டது. முதலாவது வெளிநாட்டு வர்த்தகம் இந்தியாவிலிருந்தே ஆரம்பித்தது. கி.பி மூன்றாம் நூற்றாண்டில் அனுராதபுர அதிகாரத்தைக் கைப்பற்றிய புத்திக, சேன ஆகிய இருவரும் இந்திய குதிரை வியாபாரிகளின் புத்திரர்கள். இலங்கையின் பண்டங்களை ரோமர்களும் கிரேக்கர்களும் இந்திய வியாபாரிகளிடமே வாங்கினர். கி.பி.400 அளவில் ரோமப் பேரரசு உடைந்தன் பின்னர் கிழக்கு உலகுடன் ரோமுக்கு இருந்த வர்த்தக உறவுகளும் முறிந்தன. இதனால் மேற்கின் சந்தைகளுக்கு ஆசியப் பண்டங்களை கொண்டு செல்லும் இடைத்தரகராக பாரசீக வியாபாரிகள் மாறினர்.

அரபுத் தீபகற்பத்தில் இஸ்லாம் தோற்றம் பெற்றதன் பின்னர் பாரசீகமும் இஸ்லாத்தை ஏற்று அரபு மொழி பேசும் நாடாக மாறியது. ஒரே பாஷையைப் பேசியமையினாலும் ஒரே மதத்தைப் பின்பற்றியமையினாலும் அராபியர், பாரசீகர், அபிசீனியர்கள் அனைவரும் அரபு வணிகர்கள் என்றே பொதுவாக அறியப்பட்டார்கள்.

அனுராதபுர ராஜதானியின் பிரதான துறைமுகமான மாதோட்ட துறைமுகம், மலபார் கடலுக்கூடாக அரேபியா, பாரசீகம் ஊடாக எகிப்து வரையும், கொரமண்டல் கடற்கரையிலிருந்து பாக்குநீரிணை, மலாக்கா, சுமாத்ரா, ஜாவா தீவுகள், மலாக்கா ஊடாக சீனா வரையும் விரிகின்ற இரண்டு கடல்மார்க்கங்களின் ஜலசந்தியாக இருந்தது. மாந்தோட்டத்தையும் அதனைச் சுற்றியும் உள்ள பிரதேசங்களில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் படி அங்கு முஸ்லிம்கள் வசித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. கபுறுகளின் மீது நிறுவப்பட்டிருந்த மூன்று அரபு கல்வெட்டுக்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய கல்வெட்டுக்கள் என ஆய்வுபூர்வமாக நிறுவப்பட்டுள்ளதை வைத்து இங்கு முஸ்லிம்கள் வாழ்ந்தமை நிரூபிக்கப்படுகிறது.

பாவா ஆதம் மலையில் பதிந்துள்ள பாதம், முஸ்லிம்கள் ஆதி மனிதராகக் கருதும் ஆதமுடையது என்ற கருதுகோளில் 9 ஆம் நூற்றாண்டிலிருந்து முஸ்லிம்கள் இந்த மலையைத் தரிசிக்க வந்துள்ளனர். ஆதம் சுவர்க்கத்திலிருந்து விரட்டப்பட்டதும் பூமியில் முதலில் கால் பதித்த இடமாக இலங்கை முஸ்லிம்கள் மட்டுமன்றி உலக முஸ்லிம்களும் பாவா ஆதம் மலையை கருதுகிறார்கள்.

மார்கோ போலோவின் குறிப்புகளில் சொல்லப்படுகின்ற மலையுச்சியில் இருக்கும் பாதமும் வழிபாட்டுத் தலமும் அத்துடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்ற புத்தருடையதெனச் சொல்லப்படுகின்ற புனித புதையல்களும் ஆதமுடையவை என முஸ்லிம்கள் கருதுகின்றனர். இந்தப் பரஸ்பர நம்பிக்கை அப்போதைய சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மோதலை ஏற்படுத்தும் காரணியாக இருக்கவில்லை.

12 வது நூற்றாண்டில் திருகோணமலை துறைமுகத்தைச் சூழ முஸ்லிம் குடியேற்றங்கள் இருந்துள்ளதாக திருகோணமலைத் துறைமுகத்துக்கு மேலால் அமைந்துள்ள நிகொலஸ் நீரிணையில் கண்டெடுக்கப்பட்ட 02 கற்களும் தெரிவிக்கின்றன.

ஐரோப்பியர்களால் சாலியாஸ் எனவும், சிங்களவர்களால் சலாகம எனவும் அறியப்படும் குலத்தின் பூர்வீகங்கள் ஏழு பேரும் மூன்றாம் விஜயபாகு மன்னனால் (123-1238) தென்னிந்தியாவின் சாலியப் பட்டணத்திலிருந்து பேருவல ஹொரகடுவை பெரிய முதலி மரிக்கார் என்பவரின் ஊடாகவே அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இந்திய துணிகளின் தரத்துக்கு இலங்கையில் துணிகளைத் தயாரிப்பதற்காக நூல் இழைத்தல், புடவை நெய்தல் துறையில் கைதேர்ந்தவர்களை இலங்கைக்கு அழைப்பதற்கு அரசர்களுக்குத் தேவை[illegible] முஸ்லிம்களே வெளிநாட்டு [illegible] துடன் தொடர்புள்ளவர்கள் என்பதால் அந்தப் பொறுப்பு மேற்கூறப்பட்ட பேருவல முஸ்லிமிடமே மன்னனால் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பொறுப்பை அவர் சிறப்பாக நிறைவேற்றிக் கொடுத்ததனால் மன்னர் அவருக்கு காணியும் கௌரவமும் ஏனைய வரப்பிரசாதங்களும் வழங்கியதோடு, அரசனது பல்லாக்குத் தூக்குகின்ற வேலையில் இருந்து மரிக்காரின் வம்சத்துக்கே விலக்களித்தான். அத்தோடு நில்லாமல் அவருக்கு பள்ளிவாசல் நிர்மாணிக்க வேண்டிய தேவை இருந்தால் அதற்கு அனுமதிக்குமாறும் அதற்குத் தேவையான இடத்தைப் பெற்றுக் கொடுக்குமாறும் அரசன் உத்தரவிட்டிருந்ததாக அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் குறிப்பெழுதியுள்ளார்.

போர்த்துக்கேயர் காலத்திலிருந்து

லோனா தேவராஜாவின் குறிப்பின்படி, போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது புத்தளம், மக்கொன, பயாகல, அளுத்கம,பெந்தொட்ட, காலி, வெலிகம, மாத்தறை பிரதேசங்களில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பின்னாட்களில் புதிய சோனகத் தெரு, பழைய சோனகத் தெரு என அழைக்கப்பட்ட பிரதேசங்களில் முஸ்லிம்கள் கொழும்பில் வாழ்ந்திருக்கிறார்கள்.

போர்த்துக்கேயரினால் அதிகம் முஸ்லிம்கள் தான் பாதிக்கப்பட்டார்கள். இவர்களால் முஸ்லிம்களின் வர்த்தக ஏகாதிபத்தியம் தகர்க்கப்பட்டது. இதனால் முஸ்லிம்களுக்கு போர்த்துக்கேயரின் மேல் அளவிட முடியாத கோபம் இருந்தது. போர்த்துக்கேயருக்கெதிராக முஸ்லிம்கள் தான் முதலில் தாக்குதல் நடத்தினார்கள். போர்த்துக்கேயர் முஸ்லிம்களை கொழும்பில் இருந்து துரத்தியதன் பின்னர் முஸ்லிம்களுக்கு சீதாவக்க ராஜதானியில் அபயம் தேட வேண்டியேற்பட்டது. சீதாவக்க ராஜதானியின் படைகளில் இணைந்து முஸ்லிம்கள் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடினர். நூற்றாண்டுகளுக்கு [illegible] போராடிய சீதாவக்க ராஜ்ஜியம் சரிந்து விழுந்ததோடு அங்கிருந்த முஸ்லிம்கள் பாதுகாப்புக்காக மலைநாட்டு ராஜ்ஜியத்துக்கு இடம் பெயர்ந்தனர்.

இவர்களது வருகை கண்டிய மன்னனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இங்கு வந்தவர்களில் 4000 பேர் கொண்ட குழுவொன்றை சௌரத் மன்னன் மட்டக்களப்பிலே குடியமர்த்தினான். இதன் மூலம் அவர்களை பாதுகாப்புப் பணியில் அமரத்துவதற்கு மேலதிகமாக மலைநாட்டு ராஜ்ஜியத்தில் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தவர்களுக்கு உணவு தயாரிப்பதற்கும் மன்னன் பயன்படுத்திக் கொண்டான். அதுவரை வியாபாரத்தில் சிறந்து விளங்கிய முஸ்லிம் கள் கிழக்கிலே நெல் விவசாயத்திலும் சிறந்தவர்களாக மாறினர். கண்டிய மன்னனின் நடவடிக்கையினால் பின்னாட்களில் கிழக்கு அதிக முஸ்லிம்கள் வாழும் பிரதேசமாக மாறியது.

கண்டியில் குடியமர்ந்த முஸ்லிம்கள் மடிகே எனப்படும் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புபடுத்தப்பட்டனர். அந்தத் துறை முஸ்லிம்களையும் மீனவர்களையும் கொண்டமைந்திருந்தது. கால்நடை (தவ்ளம) மாடுகள் இவர்கள் வசம் இருந்தது இதற்குக் காரணமாகியது. மலைநாட்டில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமது மதத்தை விட்டுக் கொடுக்காததனால் அவர்கள் சிங்கள சாதிமுறையினால் ஈர்க்கப்படவில்லை என ரால்ப் பீரிஸ் குறிப்பிடுகின்றார்.

தென்னிந்தியாவில் இருந்து வந்து சிங்கள சமூகத்துடன் இணைந்த ஏனைய சமூகங்களைப் போல முஸ்லிம்களும் பௌத்தத்தைத் தழுவியிருந்தால் அவர்களும் ஒரு சாதியினராக மாறியிருப்பார்கள்.

மலைநாட்டுச் சமூகத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் சிங்களவர்களைப் போலவே விகாரையைச் சூழவுள்ள விகாரகமவில் சமபங்காளர்களாக பணி புரிந்தார்கள். விகாரை நிலங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் விகாரைக்குரிய பணிகளையும் செய்தார்கள். குருநாகல ரிதீ விகாரைக்கு அர்ப்பணிக்கப்பட்ட 07 கிராமங்களில் ரம்புக்கந்தன என்ற முஸ்லிம் கிராமமும் அடங்குகிறது. அந்தக் கிராமத்தில் இருந்த ஒவ்வொரு முஸ்லிமும் விகாரைக்குச் செய்ய வேண்டிய சேவகம் அலுவலக ஏட்டில் பதியப்பட்டிருக்கிறது. அவற்றுள் தானியங்களை போக்குவரத்துச் செய்தல், விகாரைப் பகுதியை அலங்காரம் செய்தல், வெள்ளை மணல் கொண்டு வருதல், தேங்காய் மற்றும் கருவாடு விநியோகித்தல், சிறு தொகைப் பணம் செலுத்துதல் என்பன அடங்குகின்றன.

ரிதீ விகாரைப் பகுதியில் வசித்த முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல் கட்டிக் கொள்வதற்காக இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டதோடு, இதற்கு மேலதிகமாக பள்ளிவாசலின் இமாமின் பாவனைக்கென்றும் நிலம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்றும் அந்த இடத்தில் அந்தப் பள்ளிவாசல் காணப்படுகிறது. லோனா தேவராஜாவின் குறிப்பின்படி பங்கொள்ளாமட பள்ளிவாசலும் தெகல்தோருவ விகாரைக் காணியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. கண்டி காட்டுப் பள்ளிவாசலும், மீராமக்காம் பள்ளிவாசலும் கூட மலைநாட்டு அரசர்களால் அன்பளிக்கப்பட்ட நிலங்களிலேயே அமைந்துள்ளன.

லோனா தேவராஜாவின் கருத்துப்படி காட்டுப் பள்ளிவாசலின் கட்டட நிர்மாணம் தலதா மாளிகையின் மங்குல் மடுவை ஒத்ததாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல அங்குள்ள வேலைப்பாடுடன் கூடிய மரத்தூண் அம்பக்கே தேவாலயத்தின் மரத்தூணை ஒத்ததாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இவை அனைத்தின் மூலமாகவும், வடக்கின் தமிழர்களைப் போலவே முஸ்லிம் சமூகமும் இலங்கையை பூர்வீக பூமியாகக் கருதுவதற்கான அனைத்து உரிமைகளையும் கொண்ட சமூகம் என்பது தெளிவாகிறது. இந்த மூன்று தரப்பும் காந்துரைந்துள்ள விதத்தைக் காட்டும் பரம்பரை ஆய்வுகள் மூன்று இருந்தாலும் அது தொடர்பில் இந்த இடத்தில் நான் பேச முயலவில்லை. இந்த மூன்று தரப்பினதும் பரம்பரை அலகுகள் யார் சிங்களவர்,யார் தமிழர், யார் முஸ்லிம்கள் என்று தேடிப்பிடிக்க முடியாத அளவு கலந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது சிந்தனைப் பயங்கரவாதமாகும்

• முஹம்மத் பகீஹுத்தீன்

மகாஸித் அறிஞர் கலாநிதி அஹ்மத் ரய்ஸூனி அவர்கள் கடார் மீது விதிக்கப்பட்டுள்ள முற்றுகையானது ஷரீஆ தடுத்துள்ள பகிரங்கமான அத்துமீறலாகும் என பத்வா வழங்கியுள்ளார். அவர் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை யை அறபு 21 இணைய தளம் பிரசுரித் துள்ளது. அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:

இஸ்லாமிய சட்டப் பரப்பில் அத்து மீறுவதும் ஆக்கிரமிப்புச் செய்வதும் அது எந்த வடிவத்தில் வந்தாலும் கருத்து வேறுபாடின்றி பாரிய குற்றச் செயல் களாகும். இஸ்லாம் அனைத்து வகை யான வரம்புமீறல்களையும் ஹராமாக்கி யுள்ளது. ஒரு முஸ்லிம் தனது சகோத ரனை அச்சுறுத்துவது அவனது சுதந்தி ரத்தை பறிக்கும் வகையில் முற்றுகை யிடுவது, அவனுக்குத் தீங்கிழைப்பது சந்தேகமின்றி பகிரங்க அத்துமீறல் செயற்பாடாகும். அது தண்டனைக்குரிய குற்றச் செயலாகும். அவ்வாறே அது ஒரு பெரும் பாவம் என்பதும் எல்லோரும் தெரிந்த விடயமே.

ஒரு தனி நபருக்கே ஷரீஆ சட்டப் பார்வை இப்படியிருக்க, ஒரு நாட்டை அதன் குடிமக்களோடு அநியாயமாக முற்றுகையிட்டால் ஷரீஆ நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பதை கேட்கவே தேவையில்லை. மிலேச்சத் தனமான இந்த முற்றுகையால் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பாதிப்படைகின்றனர். அவர்களின் நலனில் பாரிய பாதிப்பு ஏற்படுகிறது. போக்குவரத்துத் தடைப் படுவதன் மூலம் இரத்த உறவைப் பேணுவது துண்டிக்கப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது.

அவ்வாறே முற்றுகையின் விளைவாக கட்டார் மட்டுமல்ல ஏனைய சகோதர நாடுகளின் பொருளாதாரமும் பலவீன மடைகிறது. முஸ்லிம் உம்மத்தின் கூட் டுறவில் பாரிய சிதைவும் விரிசலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே கடார் நாட்டின் மீதும் அதன் மக்கள் மீதும் விதிக்கப்பட்டுள்ள மிலேச் சத்தனமான முற்றுகை தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் அது ஷரீஆ வெளிப்படையாகவே தடுத்துள்ள ''கடு மையான ஹராம்'' என்பதையும் தெளிவு படுத்துவது இஸ்லாமிய அறிஞர்கள் மீதுள்ள தார்மீக பொறுப்பாகும். இப் படியான அநீதிகள், அத்துமீறல்கள் நில வும்போது அறிஞர்கள் பேசாமல் மௌ னம் காப்பது மனித வடிவில் உலாவும் ஊமைச் ஷைத்தான்களுக்கு ஒப்பாகும்.

சமூக விரோதியான ஈரானுடன் கடார் கூட்டுறவு வைத்திருப்பது, சதி உறவு கொண்டிருப்பது தான் முற்றுகைக்கு காரணம் ஏன்று முதலில் தெரிவிக்கப் பட்டது. குற்றச் சாட்டுக்கள் ஆதரங்கள் அடிப்படையில் நிறுப்படுவது இஸ் லாத்தின் குற்றவியல் சட்டத்தின் அடிப் படை விதியாகும். நிறுவப்படாத போலி யான குற்றத்திற்காக ஒரு நாடு தண் டனை அனுபவிக்கிறது. இது பாரிய கொடுமையாகும்.

உண்மையில் அந்தக் குற்றம் நிறுவப் பட்டாலும் கூட துரோகி மாத்திரமே தண்டிக்கப்பட முடியும் என்பது இஸ் லாத்தின் நீதியாகும். சர்வதேச சட்ட வரம்புகளை மீறி விதிக்கப்பட்டுள்ள இந்த முற்றுகை மனிதாபிமானத்திற்கு முரணான செயலாகும். ஒரு நாட்டின் இறைமையில் கைவைக்கும் 'இந்த நட வடிக்கை அந்நாட்டின் மீதான ஆக்கிர மிப்பாகும். அதுவும் சில முஸ்லிம் நாடுகள் இன்னொரு சகோதர முஸ்லிம் நாட்டின் மீது எந்த நியாயமுனின்றி முற்றுகையிட்டிருப்பது அபத்தமான செயலாகும். நீதிக்கு வழிகாட்டிய இஸ் லாமிய நாகரிகத்திற்கே இது இழுக் காகும்.

கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கும் அல்ஜஸீரா செனல் ஊடகத் துறையில் காத்திரமான பணியை மேற் கொள்கிறது. உண்மையில் அல்ஜஸீரா தொலைக்காட்சியானது ஈராக், சிரியா, லெபனான், ஏனைய பற்றியெரியும் நாடுகளில் வாழும் சுன்னி முஸ்லிம்களை பாதுகாத்து போராடுகிறது. அது ஒருபோ தும் ஈரான் சார்பு நிலை எடுத்தது கிடையாது. இது நாளாந்தம் நாம் கண் கூடாக காணக் கூடிய யதார்த்தமாகும். உண்மை இப்படி இருக்க, பிராந்தியத் தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள ஈரானுடன் கட்டார் நல்லுறவு பேணுகிறது என படுபயங்கரமான பொய்யுரைத்து கடாரை துரோகி என்று ஒதுக்கி ஓரம்கட்டுவது ஷரீஆவின் பார்வையில் மாபெரும் அநியாயமாகும்.

பின்னர் ஹமாஸ் அமைப்புக்கு உதவுவதும் இஃவான்களுக்கு உதவு வதும் பயங்கரவாதத்திற்கு உதவும் செயற்பாடு என்று காரணம் கூறப்பட்டது. இதுவும் கடாரின் நற்பெயருக்க இழுக்கு ஏற்படுத்தும் வகையில் புனைந்துரைக் கப்பட்ட குற்றச்சாட்டே.

ஒற்றுமைப்படுவதும் ஒன்றுபட்டு உழைப்பது இன்று காலத்தின் தேவை யாக மட்டுமல்ல வாஜிபாகவும் உள்ளது. எனவே உள்வீட்டு பூசல்களை கொஞ்சம் தள்ளிவைத்து விட்டு முஸ்லிம் சமூகத் தின் பொது எதிரியை எதிர்கொள்வ தற்கு களமிறங்க வேண்டிய தேவையில் நாம் உள்ளோம். இழந்த இஸ்லாமிய உம்மத்தின் கண்ணியத்தை மீட்டெடுப் பதற்கு ஒன்றுபடுவோம் என கலாநதி ரய்ஸூனி அழைப்பு விடுத்துள்ளார்.

அறிஞர்கள் மீது நிர்பந்தங்களை பிரயோகித்து கருத்துச் சொல்ல வைப்பது சிந்தனைப் பயங்கரவாதமாகும்.

சவுதி அரசு கடார் முற்றுகையை ஆதரித்தும் அதற்கு சார்பாகவும் கருத்து வெளியிடுமாறும் சவுதி அறிஞர்களை வலுக்கட்டாயப்படுத்தி வேண்டுவது குறித்து உங்கள் நிலைப்பாடு யாது என ச ர்வதேச அறிஞர்கள் ஒன்றியத்தின் உபதலைவர் அஹ்மத் ரய்ஸூனியிடம் அல்ஜஸீரா வினவிய போது அது சிந்தனைப் பயங்கரவாதம் என அவர் வர்ணித்துள்ளார்.

அறிஞர்களை குடைந்து குடைந்து விசாரிப்பதும் அவர்களின் உணர்வுகளை யும் நம்பிக்கை சார் விடயங்களையும் கொடுமையான முறையில் கேள்விக்குட் படுத்துவதையும் 12ம் நூற்றாண்டில் ஸ்பைனில் காணப்பட்ட கத்தோலிக்க திருச்சபையின் ''திரிபுக் கொள்கை விச ாரனைக்கு'' ஒப்பானது என்று ரய்ஸூனி கூறியுள்ளார்.

அக்காலப் பிரிவில் திருச்சபையானது யூதர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதி ராக சமயம் சார்ந்த நம்பிக்கைகள், உணர்வுகள் தொடர்பாக பலத்த விசார னைக்கு உட்படுத்தப்படுவார்கள். மாற் றுக் கருத்து காரணமாக இவ்வமைப் பால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட வர்கள் அவர்களின் நாட்டு அரசர்களால் சித்தரவதை, உரிமை மறுப்புகள், பொரு ளாதாரத் தடைகள், மரண தண்டனை என்று பல்வேறு வகைகளில் துன்புறுத் தப்பட்டார்கள். இந்த நடவைக்கை களால் கருத்து வெளிப்பாட்டுச் சுதந் திரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு மத்திய காலத்தில் ஐரோப்பாவின் இருண்ட காலத்துக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

இன்று சவுதி அரசு மேற்கொள்ளும் சிந்தனைப் பயங்கரவாதம் மக்களின் வார்த்தைகள், அதன் உள்அர்த்தங்களை கூட தேடிப் பார்க்கும் அளவிக்கு விசா ரணை முடக்கி விடப்பட்டுள்ளது.

யாரும் எதுவும் பேசக் கூடாது. சவுதி அரசு எந்த நாட்டை தனது எதிரி எனக் காண்கின்றதோ அந்த நாட்டை ஆதரிக் கவோ அல்லது அந்த மக்களுக்கு அனு தாபம் காட்டி பேசவோ உள்ளத்தாலும் நினைக்கக் கூடாது என்ற அளவிற்கு அங்கு நெறுக்கதல்கள் தாண்டவமாடுகின் றன. அவ்வாறே நேசம் பாராட்டும் இஸ்ரேல் ஆக்கிரமப்பாளர்களை சாட வும் கூடாது.

காஸாமீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் அநீதியானது என சவூதி அறிஞர் ஆதில் கல்பானி பதிவிட்ட டுவிடர் செய்தி காரணமாக அவர் தேசத் துரோகியாக சவூதி அரசு பட்டியல் படுத்தியுள்ளது.

அவர்களது ஊடகம் எதை செப்பு கின்றதோ அதனையே கிளிப் பிள்ளை போல் திருப்பிக் கூறவேண்டும் என்ற அடிமை நிலையே சவுதில் நிலவுதாக ஊடகங்கள் அறிவிக்கின்றன.

முஸ்லிம் நாடுகள் மிகவும் மட்டு ரகமான முறையில் அறிஞர்களினதும் பொது மக்களினதும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தி அவர்களை பேச முடியாது வாய்ப் பூட்டு போட்டுள்ளமை மிகுந்த வேதனை அளிப்பதாக ரைஸூனி அவர்கள் கவலை தெரிவுத்துள்ளார்.

வெறுமனே காற்று வாங்கி மூச்சு விட மாத்திரமே உரிமை வழங்கப்பட்டவர் களாக நாட்டு மக்கள் வாழுகிறார்கள்.

பல அறிஞர்கள் கடத்தப்பட்டும் பலர் மாயமாக மறைந்தும் உள்ளனர். அவர் கள் கடுமையான சித்திரவதைக்கும் உட்படுகிறார்கள்.

எனவே தான் சவுதி அரசின் அறி ஞர்கள் மீதான அடக்குமுறை அன்றைய கிறிஸ்தவ உலகில் முஸ்லிம்கள் முகம் கொடுத்த கொடுமை மிகுந்த ''சமய கொள்கை விசாரனைக்கு'' ஒப்பானது என அவர் வர்ணித்துள்ளார்.

நிச்சயமாக ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் ஒரு நாள் வெடிக்கும் காரணம் அடக்குமுறை எல்லைமீறிச் செ ன்றுள்ளது. எனவே ஒடுக்கப்பட்ட குரல்கள் வெடித்து வெளியில் வருவது இயல்பாகும். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை. இத்தனைக்கும் மேலாக அரசியல் மதிகேடு அந்த நாட்டை பாதாளத்துக்கு தள்ளுகிறது என்ற கருத்தையும் கலாநிதி ரய்ஸூனி குறிப்பிட்டுள்ளார்.

எல்லை மீறிய சித்திரவதைகள், அச்சு றுத்தல்கள், அடக்குமுறைகள் காரண மாக உண்மை நிலையை எடுத்துரைக் காமல் மௌனம் காப்பது குறித்து அவரிடம் வினவப்பட்ட போது, அது ஆகும் என்றிருந்தாலும் அறிஞர்கள் சத் தியத்தியை வெளிப்படுத்துவதுதான் மிகவும் சிறந்தது.

ஆனால் ஒரு போதும் இப்படியான கெடுடிபிடிகள் நிறைந்த சூழலில் பொய் யுரைக்கவோ அபத்தங்களை பேசவோ கூடவே கூடாது. அதனை அங்கீகரிக்க வும் முடியாது எனவும் ரைஸூனி தெரி வித்துள்ளார்.

அசத்தியத்தியத்திற்கு உடந்தையாக இருப்பது குற்றத்தில் பங்கெடுத்தற்கு சமனானதே. மாத்திரமல்ல அது ஒரு பெரும்பாவமுமாகும்.

இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றிணை ந்து முற்றுகைக்கான கூட்டு ஒப்பந் தத்தை முறிப்பதற்கும் அதனை ரத்துச் செய்து நிராகரிப்பதற்கும் ஒன்றுபட்டு செயல்படுத்தும் இத்தகைய அத்துமீறல் கள் இஸ்லாம் தடுத்துள்ள ஹரமான நடவடிக்கை என்பதை பொது மக்க ளுக்கு தெளிவுபடுத்துவதுமே தற்போ துள்ள முதன்மை கடமையாகும் என் பதை கலாநிதி ரைஸூனி அழுத்திக் கூறி யுள்ளார்.

காதி பிரதேசங்...

(01ம் பக்கத் தொடர்)

அட்டாளைச்சேனை, ஏறாவூர், மொனராகலை,மூதூர், நாவலபிட்டிய, நிந்தவூர், பொலன்னறுவை, புத்தளமும் சிலாபமும், அனுராதபுர, பேருவல. அம்பாந்தோட்டை, ஹட்டன், கேகாலை, கிண்ணியா, குருநாகலை, மாத்தறை, நீர்கொழும்பு, ஓட்ட மாவடி, புல்மோட்டை, இரத்தினபுரி, தும்பனே(கண்டி), தங்காலை, கம்பளை, அகதிகள் ஆகிய பிரதேசங்களுக்கே காதி நியமனங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. காதிகளுக்கான கொடுப்பனவுத் தொகை 2016 க்கு முன்னர் வழங்கப்பட்ட தொகையை விட தற்போது 2750 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஊழல் விசாரணைகளின் பின்னர் பதவி வறிதாக்கப்பட்ட அகதிகள் மற்றும் கம்பளை பிரதேசங்களுக்கான காதிகள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர் வட மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு காதிகளை நியமிப்ப தற்கான நடவடிக்கைகள் எதுவும் முஸ்லிம் கலாச்சார அமைச்சினால் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

பாகிஸ்தான்...

(03ம் பக்கத் தொடர்)

எனினும், இந்தியாவை திருப்திப் படுத்துவதற்காக இஸ்ரேல் மிக அதிக தூரம் செல்லாது என வெளியுறவுத்துறை பிரதிநிதிகள் நினைக்கின்றனர். 'இஸ் ரேலின் தீவிர கண்காணிப்பின் கீழ் பாகிஸ்தான் இல்லை. அவர்களின் முன் னுரிமை தற்போதைக்கு மத்திய கிழக்கு பிராந்தியம்தான் என நக்வி தெரிவித் துள்ளதாக அந்த நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வெளியுறவுக் கொள்கை

தங்களையுடைய நலன்களை பாது காத்துக் கொள்வதற்காக இஸ்ரேலுட னான செயல்படக்கூடிய உறவை பாகிஸ் தான் தொடர வேண்டும் என சில ஆய் வாளர்கள் நினைக்கின்றனர். இந்தியா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கிடையே வளர்ந்து வரும் நெருக்கமான உறவில் பாகிஸ்தானுக்கு ஒரு பாடம் இருக்கிறது என பாதுகாப்பு ஆய்வாளரான லெப்டினல் ஜெனரல் அஜ்மத் சோயிப் எண்ணுகிறார்.

இந்தியாவினால் இஸ்ரேலுடனான தனது உறவை பலப்படுத்த முடியும் அதே வேளையில், அதன் எதிரி நாடான இரானுடனான ராஜாங்க உறவுகளையும் தொடர முடியும் போது, தனது வெளி யுறவுக் கொள்கையில் பாகிஸ்தானினால் ஏன் இந்த நெகிழ்வுத் தன்மையை காட்ட முடிவதில்லை என அவர் கூறியுள்ளார்.

தாராளவாத உருது செய்தித்தாளான டெய்லி எக்ஸ்பிரசின் தலையங்கத்தில், மோடியின் இஸ்ரேல் பயணம் மூலம் ஏற்பட்டுள்ள முக்கிய வளர்ச்சி, பாகிஸ் தான் தனது வெளியுறவுக் கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு அறிவுறுத்தல் என கூறியுள்ளது.

பனிப்போர் கால யுக்தியிலிருந்து பாகிஸ்தான் வெளிவர வேண்டும் மற்றும் இந்தியா-இஸ்ரேல் உறவை பார்த்தாவது, தனது வெளியுறவுக் கொள் கைகளுக்கான முன்னுரிமைகளை பாகிஸ்தான் ஒருங்கிணைக்க வேண்டும் எனவும் அந்த தலையங்கம் வலியுறுத்தி யுள்ளது.

முஸ்லிம்களதும்...

(06ம் பக்கத் தொடர்)

வாசனையில்லா புத்தகங்கள்

மனித இனத்தின் தொன்மையான பண்பாட்டு அடையாளமாக விளங்குவது வாய்மொழி இலக்கியம். இந்த புராதன கதைசொல்லல் கலைக்கு புத்துயிரளிக்கும் முயற்சியாகவே ஒலிப் புத்தகங்கள் (Audio Books) கருதப்படுகின்றன. இரு வகை யான (கற்பனை - உண்மைக்) கதைகளை யும் ஒலி வடிவில் வழங்கும் இவை, மழலைகளின் திரை நேரத்தை குறைக்கும் சிறந்த கருவிகளாக விளங்குகின்றன.

Mp3 (Audio only) கோப்புகளாக கிடைக்கும் இவை, அச்சுப் புத்தகங்களைப் போன்று - மீண்டும் மீண்டும் ரசித்திடும் வாய்ப்பையும் தருகின்றன. இனிமையான குரல், நளினமான மொழிநடை - நாடக தொனியில் தேர்ந்த கதைசொல்லிகளால் வாசிக்கப்படும் மனநிறைவான இக்கதை கள், கண்களை மூடியபடி - செவிகளி னூடே இவ்வுலகை காணச் செய்கின்றன.

குழந்தைகளின் கேள் திறனை அதிக ரிக்கச் செய்வதோடு, தெளிவான உச்ச ரிப்பு, மொழிப் புலமை, கற்பனைத் திறன் - கூர்ந்து கவனித்தல் ஆகியவற்றையும் இவை செழுமையாக்குகின்றன.

நிலாச்சோறும்... கதைகளும்...

வாசிப்பு என்னும் நிலையோடு ஒரு சிறார் கதை நூல் முற்று பெற்றுவிடுமா என்ன? அதனை முழுவதுமாக அனுமா னித்து, அதன் கதைக்கருவினை நம் வச திக்கேற்ப உய்த்தறிந்த பின், குறைந்தது ஒற்றைக் குழந்தையிடமாவது அவ்வுணர் வுகளை கடத்தி மனமகிழ்வதில் அல்லவா அதன் செயல்நோக்கம் பூர்த்தி பெறும்?

அன்றாட அலுவல்களினால் உண்டா கும் அலுப்பையும் தாண்டி; குறைந்தது, உணவு உண்ணும் சமயம் - படுக்கை வேளையிலாவது - என் சிறுபிள்ளைக்கு தனித்துவமான சில நன்நெறி கதைகளை கூறுவதை விட, நான் வேறென்ன நற் பேறை அம்மழலைக்கு வழங்கிட இயலும்?

முந்தைய தினத்தன்று கேட்ட கதை யினைக் கொண்டு, மறு இரவு (தனது மழலை-மொழியினால்) அவள் எனக்கு கதைசொல்லியாக மாறிட முயலும் அந்த தீராப் பொழுதுகள் - மறுப்புக்கிடமின்றி விலை மதிப்பற்றதாகவே இருக்கிறது!

பிறை கண்டு நோன்பிருக்கும் மாந்தர் களின் செல்வங்களுக்கு, (திரைகளை நோக்கி இல்லாது) நிலாச்சோறுண்டு கதைசொல்வதை வழமையாக்கிடல் வேண்டும். நம்மில் பலருக்கு ங்குறிப்பாக, அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்குசி நிலா முற்றம் வாய்க்காமல் போகலாம்; எனினும், கதைகளுமா கிடைக்காது போகும்?

கதை நூல்களுக்குத்தான் பஞ்சமேயன்றி, நிச்சயம் கதைகளுக்கு அல்ல! ஆர்வலர்களும் எழுத்தாளர்களும் திறமிக்க இஸ்லாமிய சிறார் நூல்களை தமிழில் அதிகமதிகம் இயற்றிட முய்ற்சி த்து, தற்போது நிலவும் இலக்கிய வறட்சி யை போக்கிட வேண்டும்.

தரமான நூல்களின் பலனை அனைத்து பொருளாதார படிநிலைகளிலுள்ள குழந்தைகளும் பெற்றிடும் வகையில், அரசு நூலகம் உட்பட - நகரின் அனைத்து நூலகங்களிலும் அவை வாசிப்புக்கு கிடைத்திடல் வேண்டும்.

இந்த மூன்று ஆண்டுகால பரந்த தேடலில் நான் பெற்ற பட்டறிவு யாதெனில், முன் உணரப்படாத கருத்துகள் - முன்கேட்டறியாத கதைகளை, இன்றைய இஸ்லாமிய சிறார் இலக்கிய உலகம் - முன்னில்லாத முயற்சிகளின் மூலம் முன்னெடுத்து செல்கின்றது என்பதே!

பல தேசங்களிலிருந்தும், முன் கண்டறியாத இளம் எழுத்தாளர்கள் பலரும் - புதுப்புது தலைப்புகளில் நல்ல நூல்களை வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றனர்ம். எனது தேடலும் இன்னும் அதே முனைப்போடு அவர்களை நோக்கியே வியாபித்து நகர்கிறதும்.

நன்றி http://www.kayalpatnam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால பிக்ஷ் பிரச்சினைகள் - III

ஜீன் பிரதி எடுத்தல் (CLONNING)

20 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மீயுயர் தன்மை வாய்ந்த மனிதனை (Super Man) உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. அதாவது, சிந்தனை ஆற்றல் அற்ற உடல் வலிமை குறைந்த, குறை பாடுள்ள, தரமற்ற மனிதனை ஒழித்து, உயர் ஆற்றல் கொண்ட மனிதப் பரம் பரையை உருவாக்க வேண்டும் என்று ஐரோப்பியர்கள் சிந்தித்தனர்.

இதன் விளைவாகவே அமெரிக்காவில் செவ்விந்தியர்கள், அவுஸ்திரேலியாவில் அபோரிஜினிஸ்கள் என பழங் குடியினர் கொத்துக் கொத்தாக கொல் லப்பட்டனர். மேலைத்தேயர்கள் இத் தகைய மக்களை மனித இனத்திலேயே மிகவும் தரமற்றவர்கள் என எண்ணினர்.

ஜேர்மன் ஹிட்லரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலத்தில் ஹிட்லர் ஆரிய இன மேலாதிக்கத்தை நிறுவுவதற்கு அறிவியல் பூர்வமான முயற்சிகளிலே ஈடுபட்டார். அறிஞர்கள், ஆய்வாளர் களைக் கொண்ட ''பரம்பரைப் பண்புகள் விசாரனை நீதிமன்றம்'' ஒன்றை ஜேர் மனியில் நிறுவினார்.

1934 இல் நிறுவப்பட்ட இவ்வமைப்பு குறைபாடுள்ள மனிதர்கள் என அடை யாளம் காணப்பட்டவர்களை ஒழிப் பதை நோக்காகக் கொண்டது. இந்நீதி மன்றம் 50 ஆயிரம் பேரை விசாரணை செய்து அவர்கள் ஜேர்மனியில் வாழத் தகுதி அற்றவர்கள் எனத் தீர்ப்பளித்தது. ஜேர்மன் எதிர்கொண்டுள்ள யுத்தங்களை வெல்வ தற்கு மீயுயர் ஆற்றல் கொண்ட பரம் பரை உருவாக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

ஸ்டாலின் ரஷ்யாவின் அதிகாரத் தைக் கைப்பற்றியபோது, இந்நடவடிக் கையை ஆரம்பித்து வைத்தார். அவர் ரஷ்ய விஞ்ஞானக் கழகம் (Russian Science Academy) ஒன்றை நிறுவி லாயின் ஜீன்கோ என்பவரை அதன் தலைவராக நியமித்தார். அங்கும் இந்தப் பரம்பரை

பண்புகள் பற்றிய ஆய்வுகள் ஆரம்ப மாயின.

ஸ்டாலின் மரணித்ததன் பின்பு ரஷ்ய அரசு இக்கழகத்தின் ஆராய்ச்சி முயற்சி களை ஏற்க மறுத்தது. லாயின் ஜீன் கோவை தலைவர் பதவியில் இருந்து விலக்கி, Russian Science Academyயின் வாயிற் காவலராக நியமித்ததோடு விஞ் ஞான அகடமியின் பணிகள் மாற்றம் அடைந்தன.

இருக்கும் குறைபாடுடைய மனி தனை அழித்துவிட்டு பரிபூரண ஆற்றல் கொண்ட மனிதனை உருவாக்கும் சிந் தனை 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத் திலேயே தோன்றிவிட்டது.

1950 களின் பின்னர். மனிதனின் இந்த கற்பனைத் திறன் அறிவியல் பரிமாணம் பெற்றது. 1952 இல் பிறப்புரிமைப் பொறி யியல் (Genetic Engineering) ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாண்டு றொபட் பிரிகேட், தோமஸ் கெய்ன்ஸ் ஆகியோர் தவளையின் பரம்பரை அலகுகளை ஆராய்ச்சி செய்து, தவளைப் பிரதி ஒன்றை ஆக்குவதில் வெற்றி பெற்றனர். 10 ஆண்டுகள் கழித்து 1962 இல் ஜோன் கோடன் என்ற ஆய்வாளர் மரபுரிமைப் பொறியியல் குறித்து புதிய புதிய ஆய்வுகளில் இறங்கினார். பிறப் புரிமை பொறியியலில் புரட்சிகரமான புத்தாக்கங்களை இவ்வாய்வுகள் அறி முகப்படுத்தின. இந்த ஆய்வுகளின் ஓர் வளர்ச்சிக் கட்டமே ஸ்கொட்லான்ந் ஆய்வாளர் இயன் வில்மட் 1997 பெப்ர வரியில் உருவாக்கிய செம்மறி ஆட்டின் பிரதியாகும்.

ஜீன்களை பிரதி எடுத்தல் முறை மூலம் Tolly என்ற செம்மறி ஆடு பிறந்ததாக வில்மட் அறிவித்தார். இது உயிரியல் விஞ்ஞான சிந்தனைப் போக் கில் பாரிய திருப்பமாக அமைந்தது. மனிதன் மீதும் இதனைப் பிரயோகிக் கலாமா என்ற கேள்வி எழுந்தது.

1950 களின் பின்னர் உயிர்கலங்கள் பற்றிய ஆய்வுகள் முன்பைவிட வளர்ச்சி யடைந்தன. இயற்கையான வழிவகை களை விட்டு விலகி, செயற்கை முறை யிலும் கருக்கட்டலை சாத்தியப்படுத்த லாமா என்ற ஆய்வுகள் பல புதிய அறிவியல் உண்மைகளை உலகிற்கு அறி முகப்படுத்தியது. DNA எனப்படும் நிற மூர்த்தங்கள் பற்றியும் உயிர்க்கலங்கள் பற்றியும் புதிய உண்மைகள் வெளிவந்தன.

DNA (De-oxyribo Nucleic Acid), ஜீன் என்பவற்றில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் நாம் விரும்பும் தன்மை கொண்ட உயிரை பிறப்பிக்கச் செய்யலாம் என்று விஞ்ஞானிகள் கூறினர்.

ஏற்கனவே இவ்விடயம் தாவர உல கில் நிகழ்த்தப்பட்டு வந்தது. தாவரக் கலங்களை மாற்றுவதன் மூலம் தாவ ரங்களில் பிரதி எடுத்தல் இடம்பெற்றது. Hybridization என இது அழைக்கப்பட் டது. தாவர பிரதியாக்கப் பொறிமுறை பெருமளவு வெற்றி கண்டது.

DNA பற்றிய ஆய்வுகளின் விளைவாக,

1. ஜீன்களுக்கிடையிலான பரிசோதனை முறை.
2. உறுப்புக்களை மீள உட்பத்தி செய் யும் மருத்துவம்.
3. ஜீன்கள் மூலம் தரமான தாவரங் களையும் மிருகங்களையும் உருவாக் கும் அறிவியல் முறை என்பன வளர்ச்சியடைந்தது.

இதனோர் வளர்ச்சிக் கட்டமே Tollyயின் பிறப்பு. இன்று விலங்குகளில் இருந்து ஜீன்களைப் பிரதி எடுக்கும் முறைமை குளோனிங் எனப்படுகின் றது.

இயற்கையான கருக்கட்டல் இல்லா மல் கலப்பிரிப்பு மூலம் சிலவகை உயிரினங்களை பெருக்கும் முறையே ஜீன் பிரதிஎடுத்தல் எனப்படுகின்றது. ஒரேமுட்டை இயல்பாகவே இரண்டா கப் பிளந்து, ஏறத்தாழ ஒரே மாதிரி இரட்டையர்களாகப் பிறக்கும் இயற்கை யான நிகழ்வும் ஒருவகை ஜீன்பிரதி எடுத்தல் என்றே கருதப்படுகின்றது. எனினும், இங்கு பிரதி எடுத்தல் என் பதைவிட கலவிருத்தி அல்லது ஜீன் விருத்தி என்ற சொல்லே பொருத்தமான தாகும். குறிப்பிட்டதொரு மிருகத்தை ஒத்த பிரதி ஒன்றை முழுமையாக உரு வாக்கலாமா என்ற கேள்வி அறிவியல் ஆய்வுகளில் சிக்கலானதாகவே தோன்று கின்றது.

தவளைகள் மீது விஞ்ஞானிகள் மேற் கொண்ட ஆய்வுகள் மூலம் எடுக்கப் பட்ட பிரதிகள் தாய்த் தவளைகளை ஒத்ததாக இருந்தது. எனினும், தாய்த் தவளையின் அனைத்துத் தன்மைகளை யும் பிரதிகள் கொண்டிருக்குமா என் பதை உறுதி செய்ய முடியாது.

முட்டையும் விந்துவும் கருக்கட்டு வதன் மூலம் இடம்பெறும் மறு உற் பத்தியில் இருந்து இச்செயல்முறை வேறுபட்டது. ஓர் உயிரினத்தின் ஏதேனும் ஓர் உறுப்பில் இருந்து எடுக் கப்படும் கலன்கள் பிரதி எடுப்பதற்குப் பயன்படுகிறது. (தொடரும்)

பாடசாலைக் கல்வியில் பின்லாந்து முன்னணி வகிப்பதேன்?

பின்லாந்து அமெரிக்கா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளை விட பாடசாலைக் கல்வியில் முன்னணி வகிக்கின்றது. உலகின் கல்வித்துறையில் மிக முன்னேற்றகரமான நாடாக பின்லாந்து கருதப்படுவதற்கு பல்வேவறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. 21ஆம் நூற்றாண்டின் தொழில் துறை சவால்கள் மற்றும் தொழில்நுட்ப சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் வகையில் சிறந்ததோர் கல்விக் கொள்கை நாட்டில் நடைமுறையில் உள்ளதே இந்த வெற்றியின் பின்னணிக் காரணியாகும். மாணவர்கள் அவர்களது வயது, அறிவு வளர்ச்சி என்பவற்றுக்கு ஏற்ப உருவாக்கப்படுகிறார்கள்.

பிற நாடுகளின் பாடசாலைக் கல்வியை விட பின்லாந்தின் கல்வி முறைமை வேறுபடும் விதத்தை பலரும் பல்வேறு கண்ணோட்டங்களில் ஆய்ந்துள்ளனர். அவர்கள் பொதுவாக முன்வைக்கும் காரணங்கள் இவை:

1. திறமையானவனோ திறமையற்றவனோ அனைத்துப் பிள்ளை களும் ஒரே வகுப்பறையில் வைத்தே கற்பிக்கப்படுகின்றனர்.
2. ஐக்கிய அமெரிக்காவைவிட பின்லாந்து ஒரு தனிமாணவனுக்கு செலவழிக்கும் தொகை அதிகமாகும்.
3. பாடசாலைக் கல்வியில் முதல் ஒன்பது வருடங்கள் 30 வீதமான மாணவர்கள் மேலதிக உதவியைப் பெறுகின்றனர்.
4. 64 வீதமான மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்கின்றனர். இதுவே ஐரோப்பாவில் மிக உயர்வான தொகையாகும்.
5. உலகிலேயே பலமான, பலவீனமான மாணவர்களுக்கிடை யிலான வேறுபாடு மிகக் குறைவாக உள்ள நாடு இது.
6. விஞ்ஞான வகுப்பறைகளில் ஆகக் கூடுதலாக 16 மாணவர் களே கற்கின்றனர். நடைமுறைச் சோதனைகளை மேற்கொள் வதற்கு இது வசதியாக உள்ளது.
7. பின்லாந்தின் உயர் கல்லூரிகளிலிருந்து 93 வீதமான மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறுகின்றனர். இது அமெரிக்காவைவிட 17.5 வீதம் அதிகமாகும்.
8. 43 வீத உயர் பாடசாலை மாணவர்கள் தொழில் கல்விக் கூடங்களுக்கும் செல்கின்றனர்.
9. ஒரு ஆசிரியர் நாளாந்தம் 4 மணித்தியாலங்களையே வகுப்பறையில் கழிக்கின்றார்.
10. வாராந்தம் இரண்டு மணித்தியாலங்களை தனது தொழில் வாண்மையை விருத்தி செய்வதற்குப் பயன்படுத்துகிறார்.
11. நிவ்யோர்க் நகரம் கொண்டுள்ள அதே அளவு ஆசிரியர் தொகையை பின்லாந்து கொண்டுள்ளது. ஆனால், நிவ்யோர்க்கின் மாண வர்களைவிட பின்லாந்தின் மாணவர்கள் குறைவானவர்கள் நிவ்யோர்க் நகரில் 1.1 மில்லியன் மாணவர்கள் கற்கும் அதேவேளை, பின்லாந்தில் ஆறு இலட்சம் மாணவர்களே கற்கிறார்கள்.
12. பாடசாலை கல்வி முறைமை 100 வீதம் அரச நிதியில் தங்கியுள்ளது.
13. பின்லாந்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கண்டிப்பாக முதுகலை மாணிகளாக இருக்க வேண்டும்.
14. தேசிய கலைத்திட்டம் மாத்திரமே மிக விரிவானதாக இருக்கின் றது. பல்கலைக்கழக பட்டதாரிகளில் 10 வீதமானவர்களே ஆசிரியர்களாக தெரிவு செய்யப்படுகின்றார்கள். 2010 இல் 660 முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவுக்கு 6600 பேர் விண்ணப்பித் திருந்தனர். ஒரு பின்லாந்து ஆசிரியருக்கான ஆரம்ப கொடுப்பனவு 2008 இல் 29 ஆயிரம் அமெரிக்க டொலராக இருந்தது. இது ஐக்கிய அமெரிக்காவின் 36 ஆயிரம் அமெரிக்க டொலராக உள்ளது.
15. இந்நாட்டில் ஆசிரியர்களுக்கான விஷேட கொடுப்பனவுகள் எதுவும் இல்லை.
16. மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகளுக்கு சமமான சமூக மதிப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றது.
17. 2001 இல் இடம்பெற்ற சர்வதேச தரத்திலான மதிப்பீட்டில் விஞ் ஞானம், வாசிப்பு, கணிதம் போன்ற பாடங்களில் பின்லாந்து மாணவர்களே முன்னணி வகிக்கின்றனர் என்பது கண்டறியப்பட்டது.
18. நேர்வே போன்ற அயல் நாடுகளைவிட பின்லாந்து கல்வித் துறையில் பல மடங்கு முன்னணி வகிக்கின்றது. அரசாங்கங்கள் மாறும்போதெல்லாம் கல்விக் கொள்கைகள் மாற்றப்படாமல் நிலைத்திருப்பது இந்நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கான மற்றொரு பிறதான காரணமாகும்.
19. தென்கிழக்காசிய நாடுகளுக்கும் தெற்காசிய நாடுகளுக்கும் இந்த விலகல் புள்ளி முக்கியமானது. தொழில் சந்தைக்கு மாணவர்களை தயார் படுத்துவதில் அதாவது, தொழில் தகைமையை வழங்குவதில் அமெரிக்காவைவிடவும் பின்லாந்து முன்னிலை வகிக்கின்றது.

ஆலா அல் கானி

மனிதாபிமான உளவியலாளர்

கலாநிதி ஆலா அல் கானி பிரிட்டனி லுள்ள மென்சஸ்டர் பல்கலைக்கழகத்தில் இயங்கும் உளவியல் அறிவுத் துறை பள்ளிக்கூடத்தில் உளவியல் ஆராய்ச்சி யாளராகப் பணியாற்றி வருகிறார். உளவியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள இவரது ஆய்வுத் தலைப்பு ''போரினாலும் இடம்பெயர்வினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெற் றோரியத் தேவைகளை இனங்காணலும் நிறைவுசெய்தலும்'' என்பதாகும்.

போர்ச் சூழலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளது மனநல மருத்துவத்தில் அதீத அக்கறை காட்டும் இவர், இத்துறையில் விரிவான அனுபவங்களைக் கொண்டுள் ளார். அகதி முகாம்களிலிருந்து மீள்குடியேற்றத்திற்குச் செல்லும் புலம்பெயர் மக்கள், தமது குழந்தைகளை போதுமான அளவு அன்பு காட்டிப் பராமரிப்பதன் தேவையை உணர்த்தி வரும் இவர், இது பற்றிய பரந்துபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். சிரியாவிலிருந்து இடம்பெயர்ந்த, போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட அகதிகள் வாழும் தற்காலிக முகாம்களுக்குச் சென்று குழந்தைகளின் மனநலம் குறித்து தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றார்.

குழந்தைப் பருவத்தில் உள்ளவர்களுக்கு பெற்றோரின் அன்பும் அரவணைப் பும் அவசியமானது என்பதை வலியுறுத்தி வரும் இவர், அகதி முகாம்களில் இதனைச் சாத்தியப்படுத்துவதற்கு பல்வேறு புத்தாக்க வழிகளைப் பரிந்துரை செய்கின்றார். இப்பணிகளுக்காக மென்சஸ்டர் பல்கலைக்கழகம் இவருக்கு இரண்டு கௌரவ விருதுகளை வழங்கியுள்ளது.

அதேபோன்று 2015 இல் Sue fildom விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. 2016 இல் மென்சஸ்டர் பல்கலைக்கழகத்தின் கலாநிதி கற்கைத் துறை இவரது பணிகளை கௌரவித்து சமூக விருதினை வழங்கியது. லண்டனில் பிறந்து, மென்சஸ்டரில் வசித்து வரும் இவர், மனிதாபிமான உதவியலாளர் என அழைக்கப்படுகின்றார்.

2004 இல் மென்சஸ்டர் பல்கலைக்கழகத்தில் உளவியல் துறையில் BSc பட்டம் பெற்ற இவர், 2007 இல் அதே பல்கலைக்கழகத்தில் பிரயோக உளவியலில் MSc பட்டத்தைப் பெற்றார். 2015 இல் சிகிச்சை உளவியல் துறையில் மென் சஸ்டர் பல்கலைக்கழகத்திலேயே கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இதுவரை 6 நூல்களின் துணை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 2013 இல் வெளியான மோதல் மற்றும் இடம்பெயர்வை ஆய்வு செய்வதிலுள்ள ஒழுக்கப் பிரச்சினைகள் எனும் நூலுக்கு ஏனைய மூன்று பேரோடு இவரது பங்களிப்பும் கிடைத்துள்ளது. 2015 இல் வெளியான சிரியாவின் உள்நாட்டு மோதலால் இடம்பெயர்ந்த குழந்தைகளின் மனநலம் எனும் நூலுக்கும் இவர் வழங்கிய பங்களிப்பு முக்கியமானது.

2016 இல் கலம் என்பவரோடு இணைந்து ஆலா ''போரில் குடும்பங்களுக்கு அமைதி வாய்ப்பளித்தல்'' எனும் பெயரிலான நூலை வெளியிட்டுள்ளார். இவரது பெரும்பாலான நூல்கள் போர்ச் சூழலில் வாழும் குழந்தைகளது உளவியல் தேவைகளை மையப்படுத்தியுள்ளன. குறிப்பாக, பெற்றோர் அன்பும் பராமரிப்பும் இக்குழந்தைகளுக்கு அவசியமானவை என்பதை இவரது ஆய்வுகள் நிறுவியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐசிஸ்... (01ம் பக்கத் தொடர்)

இந்தத் தொடருக்கு வலுச் சேர்க்கும் வகையில் இரத்மலானையிலுள்ள விமான நிலையத்தில் இருந்து விமான மொன்றைக் கடத்தி வந்து கொள்ளுப் பிட்டியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்த ஐஎஸ் அமைப்பு திட்டமிட்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தியில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என அமெரிக்க தூதரகம் இந்தச் செய்தியை மறுத்துள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பிய போது அதற்குப் பதிலளித்த பிரதமர், குறித்த ஊடகத்திடம் இது தொடர்பான விசேட தகவல்கள் காணப்பட்டால் அதனை வைத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

அதே நேரம், புதிய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற மகேஷ் ரத்நாயக்க, நாட்டில் ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை எனவும், தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கே சிலர் இவ்வாறு பிரசாரம் செய்வதாகவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டிலே ஐஎஸ் அச்சுறுத்தல் இருப்பதாக அரசாங்கத்தின் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் தொடர்ந்தும் கூறி வருகின்றனர். பத்திரிகையை விசாரித்து அதனை வைத்து உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய பிரதமர், அரசாங்கத்தின் அமைச்சர்களிடமோ அல்லது ஐஎஸ் இலங்கையில் இருப்பதாக அடித்துச் சொல்லும் பொதுபலசேனாவிடமோ ஆதாரங்கள் எதையும் முன்வைக்குமாறு கோரவில்லை.

மகாசங்கத்தினரின்... (01ம் பக்கத் தொடர்)

வரைபு இன்னும் வரையப்படவில்லை. அதனை யாரும் முழுமையாகப் படிக்கவில்லை. அதற்குள் எப்படி அது தேவையில்லை என்று சொல்ல முடியும்? சொல்வதாக இருந்தாலும் இவ்வளவு நடைமுறைகளும் தாண்டிய பின்னர் இப்போது ஏன் சொல்ல வேண்டும் என்றும் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் நாட்டின் பிரதான பௌத்த பீடங்கள் எடுத்துள்ள தீர்மானம் அதிர்ச்சி அளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட த.தே.கூ.வின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நாட்டின் எதிர்காலத்துக்காகவும் இந்நாட்டில் உள்ள அனைத்து இனங்களும் ஐக்கிய இலங்கையில் பாதுகாப்பாக வாழ்வதற்கான சூழலொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்குமாக தற்போது அமைந்துள்ள சந்தர்ப்பத்தை உணர்ந்து பௌத்த பீடங்கள் தமது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

சகல மாணவர்களும்... (01ம் பக்கத் தொடர்)

பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்களுக்கிடையே டெங்கு நோய் பரவுவதன் காரணமாக, குறித்த முடிவை எடுத்துள்ளதாகவும் கொழும்பில் பாடசாலைகளுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளுக்கான நிதி வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் முஸ்லிம் மாணவிகள் உடம்பை மறைத்து சீருடை அணிவதற்கு எதிர்ப்புக்கள் கிளம்பியதோடு, இன்று வரை சில பாடசாலைகள் முஸ்லிம் மாணவிகளை அங்கங்களை காட்டும் வண்ணம் உடை அணியுமாறு வற்புறுத்தியும் வருகின்றன. இந்த நிலையிலேயே அமைச்சரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ, சீருடையை மாற்றுவதற்கு அவர் டெங்கு பிரச்சினைக்கு முன்பிருந்தே பேசிவருகிறார். அவரது வேறு தேவைகளுக்கே சீருடை மாற்றப்படுகிறது எனத் தெரிவித்தார்.

வில்பத்துவின்... (01ம் பக்கத் தொடர்)

வில்பத்துவில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் மரமுந்திரிகை பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அப்பிரதேசத்தில் இந்திய நிறுவனமொன்றிற்கு 300 ஏக்கர் காணிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தமது நாட்டின் பிரஜைகளுக்கு காணிகளை வழங்க முடியாதவர்கள் வெளிநாட்டு கம்பனிகளுக்கு காணிகளை விற்பனை செய்வதாகவும் குறித்த நூல் அரசாங்கத்தை கடுமையாக சாடியுள்ளது.

'வில்பத்து பொய் மற்றும் உண்மைகள்' என்னும் நூல் சூழலியலாளர் திலக் காரியவசம் மற்றும் ஊடகவியலாளர் ரேகா நிலுகூஷி ஹேரத் ஆகியோரினால் எழுதப்பட்டு, கடந்த 04ம் திகதி பௌத்த பிக்குகள் மற்றும் அமைச்சர்களின் பங்குபற்றலில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் சமூகத்... (01ம் பக்கத் தொடர்)

குறிப்பிட்ட அவர் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மூன்று மாகாணங்களிலும் தமது கட்சி போட்டியிடும் எனவும் தெரிவித்தார்.

விழுமிய அரசியலை முன்வைத்து அரசியலில் நுழைந்த நல்லாட்சிக்கான தேசிய முன்னணி எதிர்காலத்துக்கான பாதை வரைபை இன்று கூடவிருக்கின்ற தலைமைத்துவ சபையில் கலந்துரையாடவுள்ளது. நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுகின்ற அனைவருக்கும் இது தொடர்பில் அறிவிறுத்தப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் நஜா முஹம்மத் தெரிவித்தார்.

புவி அரசியலைப்... (09ம் பக்கத் தொடர்)

இதேவேளை, அறபு நாடுகளால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு கட்டார் நேர்ப்படியாக பதிலளிக்கும் என தான் நம்புவதாக சவூதி அறேபியாவின் வெளிநாட்டமைச்சர் ஆதில் அல் ஜுபைர் தெரிவித்துள்ளார். ஆனால், நிகழ்வுகளின் ஓட்டத்தை நோக்கும்போது இது இலகுவில் தீர்க்கக் கூடிய நெருக்கடியல்ல என்பது புலனாகின்றது. கட்டார் சமர்ப்பித்துள்ள பதிலடியில் என்ன உள்ளடக்கியிருக்கின்றது என்பதும் தெரியவில்லை.

ஏற்கனவே பலமுறை இக்கோரிக்கையை தாம் நிராகரிப்பதாகவே கட்டார் அறிவித்திருந்தது. தற்போது அது குவைத்தினூடாக சமர்ப்பித்துள்ள பதிலிறுப்பு நெருக்கடியை மென்மேலும் கூர்மையாக்குமா அல்லது சுமுகமான நிலைமையை கொண்டு வருமா என்பதை ஊகிப்பது மிகக் கடினமான ஒன்றாகும்.

தேசிய கட்சிகளுக்கு... (03 ம் பக்கத் தொடர்)

கட்சிகளை விட்டு வெளியே சிந்திக்க மாட்டார்கள் என சு. க, ஐ.தே.க இரண்டும் தமது சார்பாக நியமித்த பாராளுமன்ற உறுப் பினர்களும் அமைச்சர்களும் வடக்குக் கிழக்கில் பெரிய அளவில் ஒரு செல்வாக்கு மண்டலத்தை மேற்குறித்த கட்சிகளுக்கு உருவாக்க முடியவில்லை எனவும் கூறலாம். இதற்கு அவர்கள் கடந்த காலத்தின் உதாரணங்களை அடுக்க முடியும்.

ஆனால், அன்றைய நிலை வேறு. இன்றைய நிலை வேறு. அப்போது கூட மெல்ல மெல்ல இந்தக் கட்சிகளை நோக்கி மக்கள் செல்லும் ஒரு நிலை வளர்ச்சி பெற்று வந்தது. அதைத் தடுப்பதற்கு ஆயுதந்தாங்கிய அரசியல் இடமளிக்கவில்லை. சிங்களக் கட்சிகளுக்கு ஆதரவளிப்போர் துரோகிகள், தண்டிக்கப்படுவார்கள் என்று கூறி அந்தக் கட்சிகளின் முகவர்களும் பிரதிநிதிகளும் கொல்லப்பட்டனர். பின்னர் அவற்றுக்கான ஆதரவுச் செயற்பாடுகள் தடை செய்யப்பட்டன.

இன்றைய நிலை அப்படியான ஒரு இயங்குமுறைக்குரியதல்ல. தவிர, மக்கள் போரினால் ஏற்பட்ட இழப்பு, அலைச்சல்களினால் மிகக் களைப்படைந்த நிலையில் உள்ளனர். இந்த அவல நிலையிலிருந்து தற்காலிகமாக வேனும் விடுபடவே அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவேதான் ஐ.தே.கவுக்கும் சு.கவுக்கும் இது கூடுதல் வாய்ப்புகளை வழங்கக் கூடியதாக உள்ளது என்கிறேன்.

தவிர, என்னதான் தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டினாலும் சமூகத்தின் அத்தனை மேல்நிலைத் தரப்புகளும் தமிழ்த் தேசியம், முஸ்லிம் தேசியம் என்று பேசினாலும் அதையெல்லாம் கடந்து மக்கள் வேறு தெரிவுகளையும் செய்தே வருகிறார்கள் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எல்லாக் காலத்திலும் அவர்கள் ஒரே தெரிவுகளுக்குள் மட்டுப்பட்டிருக்கவில்லை. அவர்கள் பன்மைத்துவத் தெரிவுகளுக்கு இடமளித்தே வந்திருக்கின்றனர். எப்போதும் சு.க, ஐ.தே.க, ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என வேறு தெரிவுகளைச் செய்திருக்கிறார்கள். ஏன், இயக்கங்களின் உருவாக்கத்தின்போது கூட பன்மைத்துவ அடிப்படையில் இடது சாரிய நிலைப்பட்ட இயக்கங்கள், தீவிர இன நிலைப்பட்ட, தேசியவாத இயக்கங்கள் என 30 க்கு மேற்பட்ட இயக்கங்கள் உருவாகியுள்ளன. முஸ்லிம் அரசியலிலும் ஒரு கட்சி, ஒற்றைத் தெரிவு என்பதற்கு அப்பாலான பன்முகம் உண்டு.

ஆகவே வடக்குக் கிழக்குச் சமூகங்கள் பல தெரிவுகளுக்கு இடமளிக்கும் ஒரு பாரம்பரியத்தைக் கொண்டவை என்பதை மனங்கொண்டே சிந்திக்க வேண்டும். எனவேதான் இதைக் கவனத்திற் கொண்டு தமிழ் மற்றும் முஸ்லிம் தேசியவாத அல்லது அடையாளக் கட்சிகள் செயலாற்ற வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் சு.க.வுக்கும் ஐ.தே.க.வுக்குமே மழை பொழியும்.

நிச்சயமாக இது ஒரு அபாயகரமான போக்கேயாகும். வெளித்தோற்றத்தில் இன அடையாளத்தை விட இலங்கை முழுவதற்குமான தேசியவாத அரசியலில் சங்கமிப்பது முற்போக்கானதாகவும் சிறந்ததாகவும் தோன்றலாம். ஆனால், ஏனைய இனங்களின் இருப்பு மற்றும் அவற்றின் அடையாளம் குறித்த கரிசனையற்ற ஐ.தே.க, சு.க அரசியலில் பிற சமூகங்கள் உள்வாங்கப்படுவது அந்தச் சமூகங்களைக் கரைத்துப் பலவீனமடையவே செய்யும்.

தமிழ், முஸ்லிம் தரப்புக் கட்சிகளிடத்திலும் அந்த அரசியலிலும் குறைபாடுகளும் பிற்போக்குத் தன்மைகளும் இருக்கலாம். ஆனால், அந்தச் சமூகங்களின் அடிப்படைகளை இழக்கும் நிலையைக் கொள்ளும் அரசியலைத் தெரிவு செய்ய முடியாததே.

யுத்த கால நெருக்கடி, யுத்தம் முடிந்த பிறகான மஹிந்த ராஜபக்ஷ கால ஆட்சி ஆகியவை தமிழ் மற்றும் முஸ்லிம் தேசியவாத அரசியலை உறுதிப்படுத்தி வைத்திருந்தன. இப்பொழுதும் கூட மென்னிலை இராணுவப் பிரசன்னங்களும் பௌத்த மேலாதிக்கச் செயற்பாடுகளும்தான் தமிழ், முஸ்லிம் தேசியவாதத்தைக் கட்டிறுத்தி வைத்திருப்பதற்கு உதவுகின்றனவே அல்லாது தமிழ், முஸ்லிம் தேசியவாதக் கட்சிகளின் செயற்பாடுகளல்ல. ஆகவேதான் இவற்றின் செல்வாக்கை மீறி ஐ.தே.கவும் சு.கவும் இன்று இந்தப் பிராந்தியத்தில் செல்வாக்கைப் பெறும் போக்குத் தென்படுகிறது என்கிறோம்.

சாரம்சமாக்கி இதைக் கூறுவதானால், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் இயங்கு முறைமை மூலமாக தமக்கு வாய்ப்பானதொரு புதிய அரசியற் சூழலை உருவாக்கும் முயற்சியில் ஐ.தே.கவும் சு.கவும் தீவிரமாக இறங்கியுள்ளன. அதற்குக் கைமேல் பயன் கிடைக்கும் நிலையே காணப்படுகிறது. இந்த மாகாண சபைகளின் தளர்வான இயங்கு முறையினால் ஏற்படும் சலிப்பும் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியலினால் உண்டாகியிருக்கும் அதிருப்தி அல்லது நம்பிக்கையீனமும் ஐ.தே.கவுக்கும் சு.க.வுக்கும் சாதமான களத்தைத் திறந்திருக்கின்றன.

இதனால், அடுத்து வரும் தேர்தற் களத்தில் கணிசமான அளவு செல்வாக்கினை சு.கவும் ஐ.தே.கவும் பெறும் நிலையே உருவாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகளின் வரையறைகளுக்குள் கட்டுப்பட்டிருப்பதைக் காட்டிலும் அவற்றின் பிராந்திய நிலைப்பாட்டை விடவும் பரந்த தளத்திலான அரசியல் செயல் முறைக்குள் செல்வதன் மூலமாகத் தமக்கான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனச் சனங்கள் உணரும் ஒரு போக்குக் காணப்படுகிறது.

தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வோ, அவற்றைப் பற்றிய அக்கறைகளோ தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளுக்குக் குறைவாக இருக்கிறது என்ற ஒரு எண்ணம் சமானியத் தமிழர்களிடத்திலே ஏற்பட்டுள்ளது. இதற்குக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிற சக்திகளும் பொறுப்பு. இதைப் போன்றே முஸ்லிம் காங்கிரஸும் முஸ்லிம்களிடத்தில் பலமானதொரு முணுமுணுப்பையே எதிர்கொண்டிருக்கிறது. இதெல்லாம் சு.க.வுக்கும் ஐ.தே.கவுக்குமே அனுகூலங்களை வழங்கப்போகின்றன.

இப்படியான நிலையில் இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ள இந்த இரண்டு கட்சிகளும் கடுமையாக முயற்சிக்கின்றன. இரண்டும் ஆட்சியதிகாரத்தில் இருப்பதால், இதை வலுவாகச் செய்வதற்கு வசதியாக இருக்கிறது. இந்த இரண்டு கட்சிகளின் பிராந்திய முகவர்கள் இதற்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றனர். கிராமங்களை நோக்கி அவர்களுடைய கால்கள் நடக்கத் தொடங்கியுள்ளன.

மாணவர்களது... (07 ம் பக்கத் தொடர்)

அதற்கேற்ற புத்தகங்களும் உள்ளன. அதன்படி மாணவர்களை தயார்படுத்தலாம்.

பெற்றோர்கள் இது விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு சரியான முறையில் வழிகாட்ட வேண்டும். புலமைப் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்பது கட்டாயமல்ல. ஆனால் அந்த கல்வி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஐந்தாம் தரத்தில் கற்கும் கல்வி சிலை மேல் எழுத்து போல் இறுதி வரையில் மனதில் நிற்கும்.

உயர்தரக் கல்வியை பொறுத்தவரையில் மாணவர்கள் எதிர்காலத்தை பற்றி நன்றாக புரிந்து கொண்டு பரீட்சைக்குத் தயாராக வேண்டும். ஆசிரியர்கள் உரிய முறையில் உயர்தரப் பாடத் திட்டத்தை பூர்த்தி செய்வதில்லை என்கின்ற குற்றச்சாட்டு உள்ளது. மாணவர்கள் அவ்வெற்றிடத்தை அறிந்து தேடிக் கற்க வேண்டும். இலத்திரனியல் உபகரணங்களின் பால் அதிக கவனத்தைத் சிதற விடாமல் மனதை ஓர்முகப்படுத்தி பரீட்சைக்கு தயாராக வேண்டும்.

- **உங்களது வாழ்வு அனுவங்களிலிருந்து ஒரு சில விடயங்களை எம்முடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

ஒவ்வொருவரும் அவரவர் திறமைகளை அந்தந்த துறைகளில் வளர்த்துக் கொண்டால் உயர்ந்த அந்தஸ்தை பெறலாம். சிறுபான்மையாகிய நான் சாதாரணதொரு குடும்பத்தில் பிறந்து ஆசிரியராகி பின் அதிபராகி பரீட்சை ஆணையாளர் என்ற அந்தஸ்தை அடைந்தேன். எம்மிடம் நம்பிக்கை இருக்க வேண்டும். எமது திறமைகளை வளர்க்க வேண்டும். எமது கடமைகளை முறையாக செய்ய வேண்டும். இடையில் சவால்கள் ஏற்படலாம் அதனை வெற்றிகொள்வதிலேயே திறமை உள்ளது. அரச சேவையில் எம்மால் இன்னும் பூர்த்தி செய்யப்படாத பல பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றை நோக்கிச் செல்லும் பாதையை நாம் சீரமைத்துக்கொள்ள வேண்டும்.

- **இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைப் பெறுபேறுகளை அரசியல் வாதிகளும் உயர் அதிகாரிகளும் தமக்கு விசுவாசமானவர்களுக்குச் சார்பாக மாற்றுகிறார்கள் என்கின்றதொரு குற்றச்சாட்டு சமூக மட்டத்தில் முன்வைக்கப்படுகிறது. இது எவ்வளவு தூரம் யதார்த்தமானது?**

அது முற்றிலும் பொய்யானதொரு கருத்து. விடைத்தாள் புள்ளியிடும் போது பொதுவானதொரு குழுவே அமைக்கப்படுகிறது. அதற்கு தலைமை அதிகாரியொருவரும் நியமிக்கப்படுகிறார். இன ரீதியாக யாருக்கும் அநீதி இழைக்கப்படுவதில்லை. எனது 20 வருட கால அனுபவத்தில் அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் பதிவாகவில்லை.

- **இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் சேவைகள் தொடர்பில் குறிப்பிடுவதாயின்...**

மாணவர்கள் 3 சந்தர்ப்பத்தில் எம்முடன் தொடர்புகொள்கிறார்கள். ஐந்தாம் தரம், க.பொ.த. சா.தரம், க.பொ.த. உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் போது தொடர்புறுகிறார்கள். முழு நாட்டு மக்களும் ஏதோவொரு வகையில் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள்.

பாடசாலை கல்வியோடு தொடர்பான பரீட்சைகளுக்கு மேலதிகமாக தொழில் நிமித்தம் நடாத்தப்படுகின்ற அரசாங்க போட்டிப் பரீட்சைகளும் உள்ளன. எனவே இதுபோன்ற பரீட்சைகளை நடாத்தி திறமையானவர்களை தெரிவு செய்யும் பணியை மேற்கொள்கிறது. இது தவிர, பரீட்சார்த்திகளின் பெறுபேற்று ஆவணங்களையும் பாதுகாத்து வைக்கிறது.

பரீட்சை பெறுபேறுகள் காணாமல் போனால் அவற்றையும் வழங்குகிறது. அரச நிறுவனங்கள் அல்லது தனியார் நிறு ங்களுக்கு தொழில் நிமித்தம் ஒருவர் செல்லும் போது அங்கு பதவியுயர்வுக்காக வேண்டி குறித்த நபரது பெறுபேற்றை உறுதிப்படுத்தும் முகமாக எமக்கு அனுப்பி வைப்பார்கள். நாம் அவர்களது பெறுபேற்றை ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொடுப்போம்.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி	- ரூபா 40.00	இந்தியா		மத்திய கிழக்கு நாடுகள்	- 4000.00	ஐக்கிய இராச்சியம்	- 5500.00
12 இதழ்கள்	- ரூபா 600.00	தனிப் பிரதி	- ரூபா 100.00	மலேசியா	- 4000.00	அமெரிக்கா	- 6500.00
24 இதழ்கள்	- ரூபா 1200.00	ஒரு வருடம்	- ரூபா 3500.00	ஐக்கிய அறபு இராச்சியம்	- 4000.00	அவுஸ்திரேலியா	- 4700.00
						சீனா	- 4600.00

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் திருந்த வேண்டும்

ஒரு குடிகாரன் ஞானி ஒருவரைத் தேடி அவர் இருக்குமிடத்துக்கு வந்தான். 'நானொரு குடிகாரன். நான் திருந்துவதற்கு ஒரு வழி கூறுங்கள் ஐயா' என்று கேட்டுக் கொண்டான்.

அதற்கு ஞானி, 'நாளை மாலை என்னை வந்து பார் சொல்கிறேன்' என்று கூறினார். மறுநாள் மாலை குடிகாரன் ஞானியைத் தேடி வந்தான். அப்போது ஞானி ஒரு தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றார். தூணைப் பார்த்து, 'ஐயோ என்னை விட்டுவிடு... விட்டுவிடு...' என்று கத்திக் கொண்டிருந்தார்.

உடனே குடிகாரன், 'நீங்கள்தானே தூணைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதை விட்டுவிடுங்கள்' என்றான். உடனே ஞானி சிரித்துக் கொண்டே, 'நான் தூணைப் பிடித்துக் கொண்டிருப்பது போல, நீதான் குடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீயே அதனை விட்டுவிடு' என்றார்.

ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம்?

ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஓர் இளைஞர் தன் நண்பர்களிடம் கேட்டார். சிலர் சினிமாவுக்குப் போகச் சொன்னார்கள். சிலர் நண்பர்களுடன் செலவிடச் சொன்னார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு யோசனை வந்தது. பிறகு, நேர நிர்வாகவியல் நிபுணரை அழைத்து ஆலோசனை கேட்டார் இளைஞர்.

புத்தகம் படி, நல்ல காரியங்கள் செய் என்றெல்லாம்தான் சொல்லப் போகிறார் என்பது இளைஞரின் எதிர்பார்ப்பு. நேர நிர்வாகவியல் நிபுணர் மிக நிதானமாகச் சொன்னார்: ''உன் ஓய்வு நேரத்தை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள். அதுவே பயனுள்ள நேரங்களைத் தொடங்கி வைக்கும்.''

மிகச் சிறந்த ஆசிரியை

ஒரு ஆரம்பப் பிரிவு ஆசிரியை இருந்தார். அவரது பெயர் தொம்சன். அவர் குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் தரம் ஐந்தின் வகுப்பாசிரியராக இருந்தார். புதிய கல்வியாண்டு ஆரம்பமாகியது. முதல் நாள் புதிய மாணவர்களை அவரது வகுப்பறையில் அவர் சந்தித்தார். எல்லா ஆசிரியர்களையும் போலவே தான் தனது அனைத்து மாணவர்களை மிகவும் நேசிப்பதாகக் கூறினார். உண்மையில் அது ஒரு சம்பிரதாயபூர்வமான ஒரு வாசகம்தான். உண்மையில் அவ்வாறு அனைவரையும் நேசிப்பது சாத்திய மில்லை என்பது அவருக்குத் தெரியும்.

மேல்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

அவரது புதிய வகுப்பில் முதலாம் வரிசையில் ஒரு மாணவன் இருந்தான். அவனது பெயர் ஸ்டீவ். தொம்சனின் பார்வை அவனில் விழுந்தது. அவன் அழுக்கான ஓர் ஆடையை அணிந்திருந்தான். பல நாட்கள் குளிக்காதவன் போன்றிருந்தான். மற்றைய மாணவர்களுடன் அவன் கலகலப்பாகப் பழகவும் இல்லை. அவர்களுடன் சேர்ந்து விளையாடவுமில்லை. தனிமையிலே அதிகம் இருந்தான்.

முதலாம் தவணைப் பரீட்சை வந்தது. தொம்சனுக்கு ஸ்டீவின் விடைத்தாளை திருத்துவதில் சிரமம் ஒன்றும் இருக்கவில்லை. ஏனெனில், அவன் ஏதோ கிறுக்கியிருந்தான். தொம்சன் தனது சிவப்பு பேனையால் முழுமையாக வெட்டிவிட்டார். பின்னர் விடைத்தாளின் மேற்புறத்தில் சித்தியடையவில்லை என்று எழுதினார்.

அவரது பாடசாலையில் ஒவ்வொரு மாணவனினதும் கடந்த வருட தேர்ச்சி அறிக்கைகளை வகுப்பாசிரியர்கள் அவதானித்து, தற்போதைய நிலையையும் ஒப்பிட்டு குறிப்பு எழுத வேண்டும். தொம்சன், ஸ்டீவின் தேர்ச்சி அறிக்கையைப் பார்க்கவில்லை. இறுதியில் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் பார்த்தார். அவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

ஸ்டீவின் முதலாம் ஆண்டு ஆசிரியை இப்படி எழுதியிருந்தாள்: ஸ்டீவ் மிகச் சிறந்த புத்தி சாதுர்யமான மாணவன். அவன் அனைவருடனும் மிக நன்றாகப் பழகுகின்றான். நல்ல பண்புகள் உள்ளவன். எப்போதும் சிரித்தவாறு இருப்பான்.

இரண்டாம் ஆண்டு ஆசிரியை இப்படி எழுதியிருந்தாள்: ஸ்டிவ் ஒரு சிறந்த மாணவன். அவனை அவனது வகுப்புத் தோழர்கள் அதிகம் விரும்புகின்றனர். ஆனால், அவனது தாய் கடுமையாக நோய்வாய்பட்டிருக்கிறாள். அது அவனை பாதிக்கின்றது.

மூன்றாம் ஆண்டு வகுப்பாசிரியரின் குறிப்பு இப்படி இருந்தது: அவனது தாயின் மரணம் அவனை அதிகம் பாதித்திருக்கின்றது. அவன் நல்ல முறையில் செயற்பட முயற்சிக்கின்றான். ஆனால், அவனது தந்தை அவனுக்கு உதவியும் ஊக்கமும் வழங்குவதில்லை.

நான்காம் ஆண்டு வகுப்பாசிரியர் இவ்வாறு எழுதியிருந்தார்: ஸ்டீவ் மிக மோசமாக மாறிவிட்டான். அவன் படிப்பதில்லை. அவனுக்கு நண்பர்களுமில்லை.

தொம்சன் விடயத்தை புரிந்து கொண்டார். தான் இவ்வளவு நாளும் தவறி ழைத்துவிட்டதை உணர்ந்தார். அவனுக்கு மாற்றுத் திட்டமொன்றை யோசித்தார். ஏன் அவர் அவனுக்கு ஒரு தாயை போன்றே மாறினார். ஒரு ஆசிரியர் தினத்தில் அனைத்து மாணவர்களும் விதம் விதமான பரிசில்களை கொண்டு வந்திருந்தனர். தொம்சன் அலங்கோலமான தாளொன்றில் சுற்றப்பட்ட ஒரு ரண்டு மணிகள் கழன்றிருந்த வெள்ளி மாலையொன்றும் பாவிக்கப்பட்ட வாசனைத்திரவிய போத்தலொன்றும் காணப்பட்டது.

காலங்கள் சுழன்றன. உயர்தரத்தில் கற்பதற்காக வேறு பாடசாலைக்கு ஸ்டீவ் சென்றான். இரண்டு வருடங்களின் பின்னர் அவன் தனது ஆசிரியைக்கு கடிதம் எழுதினான். தான் பல்கலைகழகத்துக்கு தெரிவாகியிருக்கும் செய்தியை அவன் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். இன்னும் சில வருடங்களில் ஒரு கடிதமும் சில புகைப்படங்களும் தொம்சனின் வீட்டிற்கு வந்தது. அவன் ஒரு வைத்தியராகப் பட்டம் பெற்றிருந்தான்.

தொம்சன் ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். அவரது கைத்தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. ஸ்டீவ்தான் பேசினான். தான் வைத்திய கலாநிதியாக மாறிவிட்டதாக கூறியதுடன், தனக்கு திருமணம் நடக்க விருப்பதாகவும் அதில் தனது தாய் இருக்கும் ஆசனத்தில் தொம்சன் இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டான்.

குறித்த தினத்தில் தொம்சன், ஸ்டீவ் அன்பளிப்பாக தந்த மாலையை அணிந்து, அவனது தாய் பயன்படுத்திய அதே வாசனைத் திரவியத்தை பூசிக்கொண்டு சென்றார். ஸ்டீவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தோடியது.

இஸ்லாமிய சிறார் இலக்கியம்

அ.ர. ஹபீப் இப்றாஹீம்

சரியாக மூன்று ஆண்டுகள் இருக்கும் என நினைக்கிறேன். பெங்களூரின் பெரிய புத்தகக் கடல் அது. சிறார் இலக்கிய பிரிவிலிருந்த தட்டடுக்குகளை வட்டமிட்டுக் கொண்டிருந்தேன். சிறு பராயத்திலிருந்தே சித்திரக்கதைகளின் (comic stories) மீது மிகுதியான ஆர்வம் எனக்கு. அன்றைய தினமும் அவைகளையே அதிகம் தேடலானேன்.

சற்றும் எதிர்பாரா வண்ணம் அந்த நூல் எனது விழிகளில் விழுந்தது. நின்ற படியே நிகழ்ந்த அந்த கணநேர வாசிப்பு, பல கேள்விகளை என்னுள் எழுப்பியது. அக்கேள்விகளுக்கான விடைகளை தேடும் முயற்சியினை அன்று துவங்கினேன்; அது இன்று மட்டிலும் ஓய்ந்தபாடில்லை.

முடிவில்லா தேடல்

பைபிள் கதைகள் (Bible Stories) எனும் ஒரு ஆங்கில சிறார் புத்தகம்தான், அன்று நான் வாசித்த சிறு நூல். எளிமையான மொழிநடை, கவர்ச்சியான முன்னட்டை - கண்கவர் வடிவத்துடன் நேர்த்தியாய் தோற்றமளித்த அந்தப் புத்தகத்தில், கிறிஸ்தவர்களின் வேதநூல் கூறும் வரலாறுகளை சின்ன சின்ன கதைகளாய் வழங்கியிருந்த விதம், என் மழலை-மனதை வெகுவாக கவர்ந்தது.

அந்த நூலுக்கு மிக அருகாமையிலேயே மகாபாரத - இராமாயண இதிகாசங்கள் - சில இந்திய மொழிகளில் கதை நூல்களாய் காட்சியளித்தன. பிற மத கோட்பாடுகளை குழந்தைகளிடம் கதைகளாய் சமர்ப்பிக்கும் இத்தகைய நூல்களைப் போன்று அல்-குர்ஆன் மொழியும் அழகிய வரலாறுகளை உள்ளடக்கிய சிறார் நூல் ஏதேனும் அக்கடையில் உள்ளதா எனத் தேடலானேன்.

அத்தகைய நூல்கள் எதுவும் அந்த பொதுத் தளத்தில் இல்லை என்பதை உறுதி செய்த பின்னர், இஸ்லாமிய சிறார் இலக்கியம் குறித்த எனது பரந்த தேடலை துவங்கலானேன்.

இலக்கிய வறட்சி

கதைகள் மீதான ஈர்ப்பென்பது அனைத்து வயதினருக்குமே உரித்தான ஒன்று; எனினும், சிறார்களிடம் அதனை மிகுதியாகவே காணலாம். புதுப்புது மனிதர்களையும், இடங்களையும் - பண்பாடுகளையும் கதைகள் அவர்களுக்கு அறிமுகம் செய்கின்றன. கதைமாந்தர்களின் உணர்வலைகளை குழந்தைகள் உள்வாங்கும் பொழுது உறுதியான நம்பிக்கையையும் படைப்பூக்கத்தையும் அவர்கள் பெறுகின்றனர்.

முஸ்லிம் கதாபாத்திரங்கள், அல்-குர்ஆன் - ஹதீதுகள் கூறும் வாழ்வியல் நெறிகளை விளக்கும் கதைக்கரு - இஸ்லாமிய கதைகளம் ஆகியவற்றை உள்ளடக்கிய புனைக்கதைகள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. குறிப்பாக தமிழில் அதற்கான முயற்சிகள் போதுமானதாக இல்லை என்றே சொல்லலாம்.

நமக்கு அண்மையிலுள்ள இஸ்லாமிய புத்தகக் கடைகளில் ஒரு சில உரைநடை, தமிழ் சிறார் நூல்கள் கிடைத்தாலும்; அவற்றுள் பெரும்பாலானவை, மழலைகளை வசீகரிக்கும்படியாக இருப்பதில்லை.

நூல்களே சிறந்த ஊடகம்

''இத்தகைய இஸ்லாமிய சிறார் நூல்கள் நம் இளவல்களுக்கு பெரிதாக என்ன பலனளிக்கப் போகின்றன? இஸ்லாமிய கல்வியின் உச்சமே இறைவனின் மீதான அசைக்க முடியாத நம்பிக்கையை வளர்ப்பதுதான். அதை நூல்கள் மூலம்தான் வழங்கிட வேண்டுமா என்ன? இத்தகைய நூல்களா சிறுவயதில் நம்மை இம்மார்க்கத்தின்பால் ஈர்த்தது?'' எனக்கு நானே கேட்டுக்கொண்டேன்!

அவ்வளவு எளிதாக மனதைத் தேற்றி, அக்கேள்விகளை சரியென ஏற்றுக்கொள்ள இயலவில்லை. காரணம், நமக்கு அன்றிருந்த சூழல் வேறு - குழந்தைகள் இன்று எதிர்கொள்ளும் உலகம் வேறு!

டோரா, நிஞ்சா - சோட்டா பீம் என ஏராளமான கேலிச் சித்திர கதாபாத்திரங்களை (Cartoon Characters) தங்களது இணை பிரியாத நண்பர்களாக ஆக்கிக் கொண்ட இன்றைய குழந்தைகளுக்கு முஸ்லிம் கற்பனைக் கதாபாத்திரங்களின் தேவை நிறையவே இருப்பதாக உணர்கிறேன். கூடவே, நபிமார்கள் - சாஹாபாக்களின் வாழ்க்கை வரலாறுகளும் (மனித உருவங்கள் சித்தரிக்கப்படாத) கதை நூல்களாய் நம் இளவல்களின் கைகளில் தவழ்ந்திட வேண்டும்.

நீழும் திரை நேரங்கள்

''சரி, இந்த நவீன யுகத்தில் [illegible] களுக்கு இஸ்லாமிய கதைகள் இன்றியமை[illegible] ஆதாரமாகவே இருக்கிறது.

யாதவை என்றே ஒத்துக் கொள்கிறேன். அல்-குர்ஆன் கூறும் வரலாறுகளும் - முஸ்லிம் கதாபாத்திரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கற்பனைக் கதைகளும் - எண்ணற்ற வலைதளங்களில் மின்னூல்களாகவும் (E-Books), வலையொளி காணொளிகளாகவும் (YouTube videos) - கைபேசி செயலிகளாகவும் (Mobile Applications) - இலவசமாகவே கிடைக்கும்போது, நாம் ஏன் நூல்களை விலைக்கு வாங்க வேண்டும்?'' நெருங்கிய நண்பர் ஒருவரின் கேள்வி இது!

''மிடுக்காக தோற்றமளிக்கும் இன்றைய அதிநவீன கைபேசிகள் - இவ்வுலகையே நம் கரங்களுக்குள் கொண்டு வந்தாலும், அச்சுப் புத்தகங்களை முகர்வதிலுள்ள ரசனையை மின்னூல்களிலோ செயலிகளிலோ பெற்றிட இயலுமா என்ன?'' - அன்பரை திருப்பிக் கேட்டேன்!

கையடக்க கருவிதான் இன்றைய குழந்தைகளின் முதல் பகைவன் என்பதனை பெற்றோர்கள் சரி-நுட்பமாக விளங்கவில்லையெனில், நண்பரின் கேள்வியும் ஏற்புடையது போன்றே தோன்றலாம். ''மழலைப் பாடல்களை (Nursery Rhymes) கணினியில் காண்பித்தால்தான் சாப்பிடுவேன்.... கைபேசியில் விளையாடிட அனுமதித்தால்தான் தூங்குவேன்...'' என எத்தனை சிறுவர்கள் பிடிவாதமாக இருப்பதை நாம் இன்று காண்கிறோம்?

தங்களின் இதர பணிகளை நிறைவேற்றுவதற்காக, இந்த தீய நெறியை குழந்தைகளிடமிருந்து தப்பிக்க உதவும் யுக்தியாகவே பெற்றோர்களில் பலரும் பயன்படுத்துகின்றனர். இன்னும் ஒரு சிலரோ, கைபேசியை இயக்குவதில் தம் பிள்ளைகள் வல்லமைப் பெற்றிருப்பதை [illegible]

புத்தக வாசிப்பினால் உண்டாகும் நன்மைகள் ஏராளமாக இருப்பினும், இந்த தொழில்நுட்ப போதையில் சிக்கியுள்ள இளவல்களை மீட்டெடுத்து - விடுதலையளிப்பதே அவை செய்யும் பேருபகாரமாக இருக்கிறது. கைபேசி திரையின் முன்பு, சிறார்கள் முகத்தினை பதித்திடும் நேரத்தை - புத்தகங்கள் கனிசமாக குறைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இஸ்லாமிய சிறார் இலக்கியம்

கைபேசிக்கு பகரமாக நூல்களை நம் பிள்ளைகள் விரும்பிட வேண்டுமெனில், அவை அவர்களை கவர்ந்திழுக்கூடியதாக இருத்தல் அவசியம்.

அத்தகைய நூல்களுக்கான இணைய வழி தேடலில், ஆளில்லாத அண்டார்டிகா தவிர - ஏனைய கண்டங்களிலிருந்து பதிப்பிக்கப்படும் ஆங்கில இஸ்லாமிய சிறார் நூல்களை ஆராயத் துவங்கினேன். அவற்றுள், பலவற்றை அயல் நாடுகளிலிருந்து தருவித்தும் படிக்கலானேன்.

பொதுவாக, இந்நூல்களை கற்பனைக் கதைகள், உண்மைக் கதைகள் (உண்மை சம்பவங்களை கதைகளாக வழங்குவது) என இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

கற்பனைக் கதைகள்

சித்திரக்கதை, குட்டிக் கதை, சிறுகதை, நாட்டுப்புறக் கதைகள் (Folktales) - பனைக்கதை (Novel) என பல வடிவங்களில் இஸ்லாமிய சிறார் கதை நூல்கள் வயதுவாரியாக கிடைக்கின்றன. ஒவ்வொரு வகை நூல்களையும் அதற்கொத்த வயதேயான சிறு குழந்தையைப் போன்று ரசிக்கலானேன். விளைவு, மழலைகளின் வண்ணமிகு உலகில் என் மனமும் சிறகடிக்கத் துவங்கியது.

அமைதியற்ற கடலில் தத்தளிக்கும் பாய்மரக் கப்பலில் - இறைவனைத் தொழும் மீகாமன், தூரப் பிராந்தியத்தில் நடைபெறும் பூகம்ப மீட்புப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபடும் இளவரசி, தான் அதிகம் விரும்பும் பொம்மையை தவறுதலாக உடைத்து விடும் வகுப்பறை நண்பனை - மன்னித்து நட்பு பாராட்டும் சிறுவன், அகதிகளுடன் பகிர்ந்துண்டு ஈத் பண்டிகையை வரவேற்கும் மூதாட்டி - ஒரு அரிய சீன மூலிகைத் தாவரத்தை தேடி சாகசப் பயணம் மேற்கொள்ளும் நான்கு சிறுமிகள் என பலதரப்பட்ட முஸ்லிம் கதைமாந்தர்களின் நெருக்கம் கிடைத்தது.

உண்மைக் கதைகள்

கதைகள் கற்பனையானவைகளாக மட்டுமே இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. வரலாறுகளை கதைகளாக கூறுவதும் மனித மரபுகளில் ஒரு முக்கிய அங்கம்தான். பல்வேறு வரலாற்றுச் சான்றுகளை உள்ளடக்கிய அரும்பொருட் குகையாகத் திகழும் திருக்குர்ஆன் - ஹதீதுகளை - எளிய நடையில் கதைகளைப் போன்று வழங்குவது, குழந்தைகளுக்கு சிறப்பியல்புகளை வளர்ப்பதோடு, இஸ்லாமிய அறிவின் அடித்தளத்தை அவர்களின் பிஞ்சு மனதில் பதிந்திடச் செய்யும்.

பாசமிகு மகனை பிரிந்த நபி யாகூப் (அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) அவர்களின் பரிதவிப்பு, கடலில் மூழ்கடிக்கப்பட்ட கொடுங்கோளன் பிர்அவுனின் அகங்காரம், ஹிஜ்ரா பயணம் மேற்கொண்டு மதீனா பகுதிக்கு வருகை தரும் அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை - அன்போடு வரவேற்ற அன்சாரி தோழர்களின் உளமகிழ்வு - உமர் (ரலியல்லாஹு தஆலா அன்ஹு) அவர்களின் நீதமான ஆளுமைதிறன் என அறநெறியை போதிக்கும் உண்மை சம்பவங்கள் பல (மனித உருவங்கள் சித்தரிக்கபடாமல்) சிறார் வாசிப்புகளாக கிடைக்கின்றன.

குழந்தைகள் தங்களின் சிறுவயதிலேயே திருமறையை முழுவதுமாக ஓதிடவோ அல்லது மனனம் செய்திடவோ ஊக்குவிக்கும் நாம், அதனுள் கூறப்பட்டுள்ள நற்போதனைகள் - பிரார்த்தனைகளின் அர்த்தங்களை - இயற்கையான எளிய முறையில் கற்பிக்கும் இத்தகைய நூல்களையும் பூர்வாங்கமாக வழங்கிடல் வேண்டும்.

(பக்.12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை விளையாட்டு

"சரியாக அது. நிறுக்கடியின் நீங்கள் கால்பந்து விளையாடி. கோல் ஒன்றை பெற்றதன் பின்னர் மூச்சு விட நிறுக்கடியிலிருந்து மேல்நோக்கி வரும் போது ரசிகர்களின் வெற்றிக்கோஷம் உங்களுக்கு கேட்பது போன்றதொரு விடயமாக இருக்கும். சில விளையாடிகளுக்கு அது மனதை பித்துப்பிடிக்க வைக்கும் உணர்வாக இருக்கும்"

- வெய்ன் றூனி
(கோல் பெறும் போது ஏற்படும் உணர்வு தொடர்பில்)

ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டி:

தங்கம் வெல்வாரா அஷ்ரப்?

45 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 800 வீர, வீராங்கணைகள் பங்கேற்கும் 22ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டிகள் இந்திய ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள காலிங்கா மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இம்முறை போட்டித்தொடரில் இலங்கையைச் சேர்ந்த 23 வீர, வீராங்கனைகள் பங்குபற்றுகிறார்கள்.

அதில் 400X100m அஞ்சலோட்டப் போட்டியில் பங்குபற்றும் அஷ்ரப் குழு தங்கப் பதக்கத்தை கவீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மையில் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்ற ஆசிய மெய்வல்லுனர் போட்டிக்கான 100m மற்றும் 400X100m தெரிவுப்போட்டியில் அஷ்ரப் முதலாவது இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கம்பஹா லீக்கில் சம்பியனாகுமா

கஹட்டோவிட்ட உதைபந்தாட்ட கழகம்?

அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்தும் கம்பஹா மாவட்ட லீக் போட்டியில் கஹட்டோவிட்ட உதைபந்தாட்ட கழகம் கஹட்டோவிட்ட JF அணியை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. இவ்வெற்றியின் மூலம் கஹட்டோவிட்ட உதை பந்தாட்டக் கழகம் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் டிவிஷன் 2 விற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கஹட்டோவிட்ட FC பிரதேசத்தின் ஏனைய அணிகளுடன் போட்டியிட்டு வெளிப்படுத்திய திறமைகளின் விளைவாக வெலிவேரியவில் ஐந்து முக்கிய கழகங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் மோதி சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது. கம்பஹா லீக்கில் உள்ள 12 அணிகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் 2ம் பிரிவு அணிகளுடன் மோதி வெற்றியைப் பெற்றதனைத் தொடர்ந்து முதலாம் பிரிவு அணிகளுடனும் மோதி கம்பஹா லீக்கின் டிவிஷன் 2 விற்கு தெரிவாகியுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் கஹட்டோவிட்ட FC யுடன் திஹாரிய யுனைடட் அல்லது ஜெட்லைன் அணி மோதும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் பட்சத்தில் கஹட்டோவிட்ட FC கம்பஹா லீக்கில் சம்பியனாகும் வாய்ப்புள்ளது.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் முதற் பிரிவில் 16 அணிகள் உள்ளன. இரண்டாம் பிரிவில் 60 அணிகள் உள்ளன. ஏனைய அணிகள் 3ஆம் பிரிவின் கீழ் உள்ளன. கஹட்டோவிட்ட உதை பந்தாட்ட கழகம் ஆரம்பிக்கப்பட்டு குறுகியதொரு காலத்திலேயே இரண்டாம் பிரிவுக்கு தெரிவுசெய்யப்பட்டி ருப்பதை கால்பந்து இரசிகர்கள் ஒரு இமாலய சாதனையாகவே நோக்குகிறார்கள்.

"விம்பிள்டன் 2017" கோப்பையை வெல்வது யார்?

''விம்பிள்டன் 2017'' போட்டி இங்கிலாந்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. இந்தப் போட்டிகள் 14 நாட்களாக நடைபெறவுள்ளது. ''விம்பிள்டன் 2017'' போட்டிக்கான தகுதி சுற்று ஆட்டங்கள் கடந்த ஜூன் 26 ஆம் திகதி திங்கட்கிழமை தொடங்கியது.

பிரிட்டனின் பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரரும், தற்போதைய விம்பிள்டன் சாம்பியனாகவும் உள்ள ஆன்டி மெர்ரி இந்த ஆண்டு மைய விளையாட்டு அரங்கில் நடைபெறும் முதல் போட்டியை ஆடி வெற்றிபெற்றுள்ளார்.

2013 மற்றும் 2016 ஆண்டுகளில் விம்பிள்டன் சாம்பியன் கோப்பையை வென்றுள்ள ஆன்டி மெர்ரி இந்த ஆண்டு கோப்பையை வெல்வாரா என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் எழுந்துள்ளது. இடுப்பில் ஏற்பட்டிருக்கும் காயம் காரணமாக சாம்பியனாக இருக்கும் தற்போதைய நிலையை தக்க வைக்க மெர்ரி கடுமையாக போராட வேண்டியிருக்கும்.

30 வயதாகும் மெர்ரி, ஏகோன் சாம்பியன்ஷிப் போட்டியில் உலகதர வரிசையில் 90வது இடத்திலுள்ள ஜோர்டான் தாம்சனிடம் முதல்சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறி ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், 7 முறை விம்பிள்டன் சாம்பியன்ஷிப் வென்றிருக்கும் ரோஜர் பெடரர், ஜெர்மனியில் நடந்த ஹாலி ஓபன் டென்னிஸ் போட்டியில் நான்காவது முறையாக கோப்பையை வென்று உற்சாகமாக விம்பிள்டனில் களம் இறங்கியுள்ளார்.

35 வயதாகும் இவர், ஜனவரி மாதம் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் கோப்பையை வென்றதன் மூலம் 18வது கிரான்ட்ஸ்லாம் கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளார். இவரும் இந்த ஆண்டு விம்பிள்டன் கோப்பையை வெல்லக்கூடியவராக பலராலும் பார்க்கப்படுகிறார். ரபேல் நடால் மற்றும்

நோவக் ஜோகோவிச் ஆகியோரும் இந்த போட்டியில் ரசிகர்களை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் சிறப்பாக ஆட்டங்களை வெளிப்படுத்தக்கூடியவர்களாக உள்ளனர்.

கால்பந்து சம்மேளனத்தின் புதிய நிர்வாகிகளே இது உங்களின் கவனத்திற்கு!

★ உலக கால்பந்து தரப்படுத்தலின் படி தற்பொழுது இலங்கை 197ஆவது இடத்தில் உள்ளது.

★ ஆசிய கால்பந்து தரப்படுத்தலில் 45ஆவது இடத்தில் உள்ளது. ஆசிய கால்பந்து ஒன்றியத்தில் 46 நாடுகளே அங்கத்துவம் வகிக்கின்றன.

★ தேசிய கால்பந்து விளையாட்டின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் விலகியுள்ளார்கள்.

★ கால்பந்து சம்மேளனத்தின் நிலையான கணக்கு மிக வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2013இல் அதன் நிலையான கணக்கு 93 மில்லியன் ரூபாவினை கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

★ தேசிய கால்பந்து அணியின் இன்றைய நிலை படுமோசமாக உள்ளது. அப்போது அணி வீரரொருவருக்கு 50,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

★ ஜோசப் செப் பிளேட்டரின் இலங்கை சுற்றுப் பயணத்திற்கு 18 மில்லியன் ரூபா நிதி செலவழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

★ செப் பிளேட்டர் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்த போது இலங்கையின் பல மைதானங்களை நவீனமயப்படுத்துவதற்கு நிதியுதவி அளிப்பதாக கூறிய கருத்து எவ்வளவு தூரம் யதார்த்தமாகியுள்ளது?

கால்பந்து சம்மேளனத்தின் பொதுச்செயலாளராக ஜஸ்வர் உமர் தெரிவு

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியான (SEO) ஜஸ்வர் உமர் இம்முறை நடைபெற்ற தேர்தலின் மூலம் புதிய பொதுச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதில், தலைவர் பதவிக்காக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களாகிய அனுர டி சில்வா மற்றும் ரஞ்சித் ரொட்ரிகோ ஆகியோர் போட்டியிட்டனர். இதில் அனுர டி சில்வா 104 வாக்குகளை பெற்று வெற்றியீட்டினார்.

பொருளாளருக்கான போட்டியில் 102 வாக்குகளைப் பெற்ற

டிரொன் பெர்னாண்டோ புதிய பொருளாளராகத் தெரிவாகினார். அவருடன் போட்டியிட்ட பஸ்லான் சமீன் 80 வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

அதே போன்று, நிர்வாக முறைமைக்கான துணைச் செயலாளராக யு. அருலனந்தசோதியும், தொழில்நுட்ப முறைமைக்கான துணைச் செயலாளராக ஜகத் குமார டி சில்வாவும் தெரிவாகினர்.

தேர்தல் முடிவுகளின்படி, அந்தோனி டேவிட், உபாலி ஹேவகே, பாரூக் நாகூர்தம்பி மற்றும் பத்மசிறி முனசிங்க ஆகியோர் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் உப தலைவர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களது பதவிக் காலம் 2017ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான நான்கு வருட காலத்திற்கு நீடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபல சூழலியலாளர் திலக் காரியவசம் மற்றும் ரேகா நிலுக்சி ஹேரத் எழுதியுள்ள 'வில்பத்து பொய் மற்றும் உண்மைகள்' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த 04 ஆம் திகதி பண்டாரநயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்களான ரிஷாட் பதியுதீன் மற்றும் மனோ கனேஷன் உள்ளிட்ட மதகுருமார் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.